# உதயன்



19

www.onlineuthayan.com

32 பக்கங்கள் சுடர் 28 கதிர் 012 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 23 சனிக்கிழமை (08/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00


## கூட்டமைப்புடன் பேசுவதற்கு அரசிடம் பொறிமுறை இல்லை

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசிடம் முறையானதொரு பொறிமுறை இல்லை என்று சுட்டிக்காட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொன் விக்கிரமரத்ன பேச்சுகள் மூலமே நிலையான சமாதானத்தை நோக்கி நகரலாம் என்றும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பார்க்க பக்கம் 4

## திலீபனின் நினைவுக்கல் இரவோடிரவாக இடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

நல்லூர் கந்தசாமி ஆலயத்தின் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருந்த தியாகதீபம் திலீபனின் நினைவுக்கல் நேற்றுமுன்தினம் இரவு இனம் தெரியாதோரால் பெயர்க்கப்பட்டு, அடித்து உடைத்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் ஆக்கிரமிப்புக்கு எதிராக 1987 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திலீபன் (இராசையா பார்த்தீபன்) உண்ணாநோன்பிருந்து

பார்க்க பக்கம் 4



# மாணவர் மீதான தாக்குதலுக்கு இராணுவ ஆட்சியே காரணம்

### ஐ.நா. குழுவினரிடம் எடுத்துரைத்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 8

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை, கைது செய்யப்பட்டமை மற்றும் அச்சுறுத்தப்பட்டமை போன்ற சம்பவங்கள் வடக்கில் நிலவும் இராணுவ ஆட்சியினாலேயே நிகழ்ந்தன. இதனாலேயே பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் குழம்பியுள்ளன. இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் தூதுக்குழுவினரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும், ஜப்பானின் ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவுக்கும் இடையே கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.

பார்க்க பக்கம் 4

## மேலும் இரு மாணவர்கள் நேற்று வவுனியாவில் கைது

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன் உட்பட இரு மாணவர்கள் நேற்றுப் பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இருவரும் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 10 பேரின் பெயர் விபரங்கள் துணைவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதில் 6 மாணவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையிலேயே ஏனையவர்களில் இரண்டு மாணவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## கைதான மாணவரின் விடுதலையில் பல்கலை நிர்வாகமே அக்கறை எடு

### வலியுறுத்தி விரிவுரையாளர்கள் நேற்று கவனவீர்ப்புப் போர்

யாழ்ப்பாணம், டிசெ.8

கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலைக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி துணை வேந்தர் அலுவலகம் முன்பாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம் நேற்று வெள்ளிக்கிழமை கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியது.

'பல்கலைக் கழகங்கள் கோமாளிகளின் கூடாரங்கள் அல்ல', 'மாணவர்கள் சிறை

பார்க்க பக்கம் 4



## படையினரும் பொலிஸாரும் மாணவரைத் தாக்கினரா?

### எதுவும் தெரியாது என்கிறார் எஸ்.எஸ்.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ். பல்கலைக்கழக மாணவர்களைக் கடந்த 28ஆம் திகதி பொலிஸாரும் படையினரும் இணைந்து தாக்கியமை மற்றும் படையினர் குறித்த இடத்துக்குச் சென்றமை தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (எஸ்.எஸ்.பி.)

பார்க்க பக்கம் 4

## வெளிப்படைத் தன்மை விசாரணையில் தேவை

### அமெரிக்கா வலியுறுத்து

கொழும்பு, டிசெ.8

தெரிவுக்குழு விசாரணையில் தமக்கு நீதி கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்து அதிலிருந்து பிரதம நீதியரசர் வெளிநடப்புச் செய்துள்ள நிலையில், விசாரணை கையாளப்படுகின்ற முறைமை தொடர்பாக தாம் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்கத் தூதரகம் தெரி

பார்க்க பக்கம் 4

## தெரிவுக்குழுவிலிருந்து நேற்று எதிர்க்கட்சிகளும் வெளிநடப்பு

கொழும்பு,டிசெ.8

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது பிரதம நீதியரசர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்னர், விசாரணையை எவ்வாறு நடத்தப்போகிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்ற கோரிக்கையைக் குழு ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளமையால் விசாரணைகளில் பங்குபற்றுவதிலிருந்து வெளியேறுவதாக எதிர்க்

பார்க்க பக்கம் 4

## நீதியரசரின் வெளிநடப்பு மிகச் சரியான தீர்மானம்

### ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு பாராட்டு

கொழும்பு, டிசெ.8

தமக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளில் அதிருப்தி தெரிவித்து பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க நேற்றுமுன்தினம் வெளியேறியமைக்கு தாம் தலைவணங்குவதாக ஆசிய மனித உரிமை

பார்க்க பக்கம் 4


யாழ்ப்பாணத்தில் கல்வி, மலேசியாவில் வருமான வாய்ப்பு Study in Jaffna, Earn in Malaysia

மாதாந்த உதவித்தொகை RM 750.00/Rs.32,250 Monthly allowance of RM 750.00/Rs.32,250

03 Months / 03 மாதங்கள் SG Academy in Jaffna / யாழ்ப்பாண SG அக்கடமியில்

09 Months / 09 மாதங்கள் SG Academy in Malaysia / மலேசியா SG அக்கடமியில்



✓ Uniforms, meals and accommodation at the Resorts

✓ Travel expenses borne to and fro - KL to Resort

✓ Annual medical claim of RM 300.00/Rs.12,900

✓ 06 working days and 01 day off

✓ Overtime paid @RM 3.00/Rs.129.00 per hour

✓ Employee Insurance

✓ Creative Multimedia ✓ Hospitality Management ✓ Computer System

09 Months Internship Training in Star Class Hotels - Monthly allowance USD 250

Spot Admission!

Tilko Jaffna City Hotel

(Beside Jaffna Main Post Office)

Contact us at:

0773124405 / 0713618782

+6012-2077466 (Malaysia)

Certification by: Malaysian Skills Department (Ministry of Human Resources Malaysia)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டாலும் போராட்டம் மீண்டும் தலைதூக்கும்!!



## நாடாளுமன்றில் முழங்கினார் சம்பந்தன்

கொழும்பு, டிசெ. 8

''தமிழர் தாயகப்பகுதிகளை அரசு திட்டமிட்டு முற்றுமுழுதாக இராணுவமயப்படுத்தி வருகிறது. விடுதலைப்புலிகளின் போராட்டத்தை அழித்துவிட்டோம் என்றும் அரசு பெருமை பேசுகின்றது. ஆனால், புலிகள் அழிக்கப்பட்டாலும் அங்கு தமிழர்களின் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. எனவே, தமிழர் போராட்டம் ஆத்மார்த்த ரீதியில் மீண்டும் தலைதூக்கும்.

- இவ்வாறு நாடாளுமன்றில் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

அவர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்ததாவது-

எம்மீது தவறான குற்றச்சாட்டுகளும், பிரசாரங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. அதனை நான் மறுக்கின்றேன்.

புலிகளின் கொலைப் பட்டியலில் எனது பெயரும், எனது சகாக்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. ஆனால், நீங்களோ (அரசு) எம்மைப் புலிகள் என்றும், எங்களைப் புலிகளின் பங்காளிகள், பிரதிநிதிகள் என்றும் கூறுகின்றீர்கள். இதனை மாற்றிக்கொள்ளவேண்டும்.

புலிகள் தாமாக உருவாகவில்லை. தமிழ் மக்களாலும் உருவாக்கப்படவில்லை. மாறி மாறி வந்த அரசுகள் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் தான் புலிகள் உருவாகுவதற்குக் காரணிகளாகின என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று புலிகளை அழித்துவிட்டோம் என்று யார் யாரோ கூறிக்கொள்கின்றனர். புலிகளை எவரும் அழிக்கவில்லை. அவர்கள் தம்மைத் தாமே அழித்துக்கொண்டனர். ஜனநாயகத்தையும், தார்மீகத்தையும், மனித உரிமைகளையும் கடைப்பிடிக்கத் தவறியதாலேயே புலிகள் அழிந்து போனார்கள்.

டயஸ் போராக்கள், புலம்பெயர்வாழ் சமூகம் என்று கூச்சல் போடுகின்றீர்கள். 1956ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட பெருமெடுப்பிலான இன ஒழிப்பின்போது தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இந்த மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். இன்று ஒன்றுபட்ட சமூக அமைப்பாக செயற்படுகின்றனர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கடந்த காலங்களில் பண்டாரநாயக்க - செல்வநாயகம், டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. அந்த உடன்படிக்கைகளில் குடிப்பரம்பல்களில் மாற்றம் ஏற்படுத்தப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தது. அன்றே அந்த உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. அதன் பலனை இன்று அனுபவிக்கின்றோம்.

வடக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 4 ஆயிரத்து 600 ஹெக்டேயர் காணிகள் இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன. 10 ஆயிரம் வீடுகள் இராணுவத்தினருக்காகக் கட்டப்பட்டுள்ளன.

இதற்கும் மேலாக பொதுமக்களின் 555 வீடுகளிலும், 308 தனியார் காணிகளிலும், 153 பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகங்களிலும் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள 20 படைப்பிரிவுகளில் 15 படைப்பிரிவுகள் வடக்கிலும், இரண்டு படைப்பிரிவுகள் கிழக்கிலும் நிலைகொண்டுள்ளன. போர் முடிந்து மூன்றரை வருடங்கள் கடந்த பின்னும் இந்த இராணுவ அதிகரிப்பு அவசியம் தானா?

அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்தத் திட்டமிட்ட இராணுவக் குடியேற்றங்களில் வசிக்க இருப்பவர்கள் ஆரம்பத்தில் குடியேற்ற வாசிகளாகவும், பின்னர் வாக்காளர்களாகவும் பதியப்படுவதன் மூலம் பாரம்பரியமாக வாழும் தமிழ் மக்களின் குடிப்பரம்பலைக் குறைக்கும் திட்டம் இருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

நாம் இராணுவத்தினருடன் சண்டை பிடிக்க முனையவில்லை. இராணுவம் முற்றாக வெளியேற்றப்படவேண்டும் என்றும் ஒருபோதும் கூறவில்லை.

எமது பிரதேசம் முற்றும் முழுதாக இராணுவமயமாக்கப்படக் கூடாது என்றுதான் சொல்கிறோம். வடக்கில் ஐந்து லட்சம் பொதுமக்கள் வாழ்கின்றனர். ஆனால், ஒன்றரை லட்சம் படையினர் அங்கு இருக்கின்றனர். இந்தக் கணிப்பீட்டின்படி ஒவ்வொரு மூன்று பொது மகனுக்கும் ஓர் இராணுவம் என்ற விகிதத்தில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

நாம் இராணுவத்தினருக்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால், இந்த இராணுவமும், அரசும் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்துவதையும் ஆக்கிரமிப்புகளை மேற்கொள்வதையும்தான் கண்டிக்கின்றோம்.

இராணுவம் தமது முகாம்களில் இருந்து பாதுகாப்புக் கடமைகளைச் செய்யட்டும். எமது மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறு கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு சுயமாக வாழ விரும்புகின்றனர்.

ஆனால், இராணுவத்தினர் பல ஏக்கர் வயற்காணிகளை சுற்றிவளைத்து விவசாயம் செய்கின்றனர். கால்நடைகளை வளர்க்கின்றனர். மரமுந்திரிகைச், செய்கையிலும், தென்னை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, எமது மக்கள் சொந்த இடங்களுக்குச் சென்று வாழத் தடைவிதிக்கின்றனர்.

வலிகாமம் மற்றும் சம்பூர் பிரதேசங்களில் மீள் குடியமர்த்த நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும் இராணுவம் மறுக்கின்றது.

முல்லைத்தீவு, கேப்பாப்பிலவு ஆகிய இடங்களில உள்ள காணிகளை இராணுவ உடமையாக்கிக் கொண்டு அங்கு வாழ்ந்த மக்களை நடுவீதியில் விட்டுள்ளது. தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பிரதேசங்களில் அரசு திட்டமிட்டு இராணுவ முகாம்களையும், குடியேற்றங்களையும் மேற்கொள்வதன் மூலம் குடிசனப் பரம்பலில் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த அரசு முனைகின்றது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதனை எதிர்க்கின்றோம்.

வடக்கில் 180 பேரை இராணுவத்திலும், 2,500 பேரை சிவில் பாதுகாப்புப் படைகளிலும் சேர்த்துள்ளனர். இவர்களுக்கு கறுப்புநிற ரீசேர்ட்டுகளை வழங்கி 18 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குவதாகவும் வெளியுலகுக்குக் காட்டப்படுகிறது.

ஆனால், இவர்கள் முகாம்களில் சிற்றூழியர்களாகவும், பணியாளர்களாகவுமே அமர்த்தப்பட்டுள்ளனர். சுயநோக்குடன் தமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காகவே இந்த ஆள்சேர்ப்புகளை மேற்கொண்டுள்ளனர்.

தென் பகுதியில் ஜே.வி.பியினர் வருடா வருடம் கார்த்திகை வீரர்கள் தினம் என்று பிரமாண்டமான விழாக்களையும், ஊர்வலங்களையும் நடத்துகின்றனர். இதனை அரசோ, இராணுவமோ கண்டுகொள்வதில்லை. ஆனால் முருகனுக்கும் விளக்கேற்றவும், வடக்கில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும் தடைவிதிக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைதியாக விளக்கேற்றி மௌன அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த மாணவர்கள் மீது இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கைதுசெய்யப்பட்ட மாணவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இன்று புலிகளை அழித்துவிட்டோம் என்று பெருமைப்படுகின்றனர்.

புலிகள் அழிக்கப்பட்டுவிட்டாலும் அங்கே தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரவில்லை. அது மீண்டும் ஆத்மார்த்த ரீதியாகத் தலைதூக்கும்.

இரணைமடு பிரதேசத்தின் பின்புலத்தில் டொலர்பாம், கெண்ட்பாம் மற்றும் வெலிஓயா உள்ளடக்கிய 78 கிலோ மீற்றர் பரப்புள்ள பிரதேசம் என்பவற்றை ஒன்றிணைத்து அரசு சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்திவருகின்றது. இது நாட்டில் ஒருபோதும் ஜனநாயகமான சமாதானத்தை ஏற்படுத்தப் போவதில்லை - என்றார். (ஙு-சி)

## அரச தாதியர்கள் நேற்று ஒரு மணிநேரம் புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 08

கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைச் சுற்றுநிருபமாக வெளியிடுதல் உட்பட 5 கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாணத் தாதியர்கள் உட்பட நாட்டிலுள்ள அரச தாதியர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஒருமணிநேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடக்கில் யாழ். போதனா வைத்தியசாலை அரச தாதியர்கள் உட்பட ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்திய சாலைகளின் அரச தாதியர்கள் நேற்று மதியம் இந்தப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 26 ஆம் திகதி சுகாதார அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சின் போது தமது சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகக் கொள்கையளவில் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது இன்றுவரை சுற்றறிக்கையில் வெளியிடப்படவில்லை. அதனை உடனடியாகச் சுற்றறிக்கையில் வெளியிட வேண்டும்.

★ மாகாண அடிப்படையிலுள்ள தாதிய மாணவர் ஆள்சேர்ப்பை உடனே நிறுத்த வேண்டும்.

★ தாதியர்கள் 12 வருடத்தில் முதலாம் தரத்துக்குப் பதவியுயர்த்தப்படல் வேண்டும்.

★ தாதியர்களின் வேலை நாள்களை வாரத்தில் 5 நாள்களாக மாற்ற வேண்டும்.

★ தாதியர்களுக்கும் தொலைபேசிக் கொடுப்பனவை அதிகரித்தல் வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியே அவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். விரைவில் இவற்றை நிறைவேற்றுமாறு கோரியுள்ள தாதியர்கள், தவறின் எதிர்வரும் 19 ஆம் திகதி முழுநேரப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (த-4)

## காணாமற்போன முதியவர் கிணற்றில் சடலமாக மீட்பு

காணாமற்போன முதியவர் ஒருவர் கிணறு ஒன்றில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவம் வேலணையில் இடம்பெற்றது.

சம்பவத்தில் ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த பசுபதி சோமசுந்தரம் (வயது-72) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

புளியங்கூடலிலிருந்து கடந்த சனிக்கிழமை வேலணைக்குப் புறப்பட்டுச் சென்ற இவர் காணாமல் போயிருந்தார். அவரை உறவினர்கள் தேடிவந்த நிலையில் வேலணையில் கிணறு ஒன்றிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது. சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

## கைதான மாணவர்களை விடுவிக்க தனிக் குழு அமைப்பதற்கு முடிவு

**பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் உருவாக்கப்படவுள்ள இந்தக்குழு கைதான மாணவரின் விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டது**

யாழ்ப்பாணம், டிசெ. 08.

கைதான யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலை மற்றும் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்குப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிக் குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையைத் துரிதப்படுத்தும் பொருட்டு இந்தக் குழுவினால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் உருவாக்கப்படவுள்ள இந்தக்குழு கைதான மாணவரின் விடுதலை தொடர்பில் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டது.

இதுதவிர, தற்போதுள்ள சூழ்நிலை தொடர்பில் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு ஒன்றையும், நாளைமறுதினம் திங்கட்கிழமை இந்தக் குழுவினர் நடத்தவுள்ளன.

அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய இத்தகைய குழு 1980களில் யாழ். பல்கலைக்கழகத்தில் இயங்கியது என்றும் பின்னர் சிறிது காலம் செயற்படாமல் இருந்தது, தற்போது அது மீள உருவாக்கப்படவுள்ளது என்றும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்தார். (த-4)

## கூட்டமைப்பை விமர்சிக்கும் அதிகாரம் அரசுக்கு இல்லை

### சபையில் ஐ.தே.க. சாட்டை

கே.பியுடன் உறவாடும் அரசுக்குக் கூட்டமைப்பினரை புலிகள் என விமர்சிப்பதற்குத் தகுதியில்லை.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற வரவு-செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போது அவர் அங்கு அங்கு மேலும் தெரிவித்ததாவது-

இங்கு பேசிய அரச உறுப்பினர் கூட்டமைப்பை புலிகளின் பங்குதாரர் என்று குறிப்பிட்டார். புலிகளின் முன்னாள் சர்வதேச தொடர்பாளரான கே.பியுடன் உறவாடும் அரசுக்கு கூட்டமைப்பை விமர்சிக்கும் அதிகாரம் இல்லை. மக்கள் பிரதிநிதிகளாகவே அவர்கள் வந்துள்ளனர்.

குறிப்பாக இங்கு வடக்கைப் பற்றி பேசவேண்டிய தேவை எழுந்துள்ளது. வடக்கில் தற்போது நிலவுகின்ற பிரச்சினைகளை அரசு சுமுகமாகத் தீர்க்க முன்வர வேண்டும். - என்றார். (ஙு-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணக் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி மிகக்குறைவே

## சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு

பண்டத்தரிப்பு,டிசெ. 8

இலங்கையின் ஏனைய மாகாணங்களைவிட வடமாகாணத்தில் கல்விக்காக ஒதுக்கப்படும் வளங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கான கதிரைகள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலைஅதிபர்சிதஞ்சயன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் கனகசபாபதி, வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி.ந.ஐங்கரன், உப தலைவர் சஜீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரை நிகழ்த்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையில் தமது பிரதேச பாடசாலைகளுக்கே அரசு அதிக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகின்றது.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டப் பாடசாலைகள் கொழும்பிலுள்ள பாடசாலைகளை விட அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உதாரணமாக அங்குள்ள தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு பிரத்தியேக வாகனங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் எமது பகுதிகளிலே எத்தனையோ பாடசாலைகள் யாரும் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன.



யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களில் அரசநிதி அதிகளவில் பயன்படுத்தப்படுவதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களே வட பகுதியில் அதிக அபிவிருத்தி வேலைகளைச் செய்கின்றன. ஆனால் அதனை மக்களுக்கு வழங்கும் போது ஆளுநரும், அமைச்சரும் வந்துதான் மக்களிடம் கொடுப்பார்கள்.

தாங்கள் கொடுப்பது போல மக்களுக்கு கொடுக்கின்றார்கள். மக்களுக்கு அரசு என்ன செய்கின்றது. அபிவிருத்தித் திட்டங்களில் அரசின்நிதி எவ்வளவு? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்:

வலிகாமம் கல்வி வலயத்திலேயே விஞ்ஞானத் துறையில் எமது பாடசாலையில் தான் அதிகளவான மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். ஆனால் அவர்களுக்குரிய வளங்கள் போதாமலிருக்கின்றன.

இம் முறை ஆசிரியர் தினத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்சரவணபவன்இங்குவந்த போது நாம் எமது நிலையை எடுத்துகூறி எமது தேவைகளை சொல்லியிருந்தோம். மிகக் குறுகிய காலத்திலேயே எமது தேவையை நிறைவேற்றித் தந்தமைக்காக பாடசாலைச் சமூகம் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்- - என்றார். (ம-130)

# கெற்பேலி மயானத்தை மீட்டுத் தரக் கோரிக்கை

## ஜனாதிபதிக்கு மக்கள் கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ.8

*35 வருட காலமாக மக்களால் பாவிக்கப்பட்டு வந்த கெற்பேலி மயானத்தை இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுத்தருமாறு அந்தப் பகுதி மக்கள் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். இது தொடர்பாக மக்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:*

கெற்பேலி மக்களால் இந்த மயானம் 1983 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றது. விவசாய நிலங்களில் இருந்தும், மக்கள் குடியிருப்பில் இருந்தும் ஒதுக்குப்புறமாக இந்த மயானம் அமைந்திருப்பதால் நாங்கள் இதனைப் பயன்படுத்தி வருகின்றோம்.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் மக்களை அழைத்து கலந்துரையாடல் நடத்தினர். இதன்போது குறித்த 35 வருடம், நாம் பயன்படுத்தி வரும் மயானத்தைபயன்படுத்த வேண்டாம் எனவும் மக்கள் குடியிருப்புக்கு அண்மையாகவும், விவசாய நிலங்களுக்கு அருகிலுமுள்ள காணியை மயானமாகப் பயன்படுத்துமாறும் பணித்துள்ளனர்.

எனவே நாம் கடந்த 35 வருடகாலமாக பயன்படுத்திய மயானத்தையே தொடர்ந்தும் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் க.துரைராசாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது

35 வருடகாலம் மயானமாகப் பயன்படுத்தி வரும் காணி உண்மையில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரிய அரச காணி. மக்கள் முன்னர் மயானமாகப் பாவித்த இடத்துக்கு அண்மையில் தற்போது குடியிருப்புகள் உள்ளதால் இதைப் பயன்படுத்த முடியாது.

இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கெற்பேலியில் கூட்டம்ஒன்றைஒழுங்கு செய்துள்ளோம் - என்று தெரிவித்தார். (ம-5-9)

## புனர்வாழ்வு பெற்றோருக்கு கலந்துரையாடல்

தென்மராட்சி, டிசெ.8

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலைய அதிகாரிகளால் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதால் பிரதேசத்தில் வதியும் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-9)

## வீதிகளில் கட்டாக்காலிகள் சிரமத்தில் சாரதிகள்

தென்மராட்சி, டிசெ.8

ஏ-9 வீதி உட்பட பல வீதிகளில் இரவு வேளையில் ஆக்கிரமிக்கும் கட்டாக்காலி கால்நடைகளால் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கட்டாக்காலி மாடுகள், ஆடுகளுடன் நாய்களும் வீதியில் இரவைக் கழிப்பதால் வேகமாக வரும் வாகனங்கள் இவற்றால் விபத்துக்களை எதிர்நோக்கும் அபாயம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக விசாரித்தபோது அண்மைய மழை வெள்ளத்தால் வளவுகளில் கால்நடைகளை கட்டுவதில்லையெனவும்இதனால்அவை வீதிகளில் தங்கி விடுகின்றன என்றும் இவற்றுக்குப் பாதுகாப்பாக வளர்ப்பு நாய்களும் வீதிகளில் தங்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## இடமாற்றம்பெறும் ஆசிரியர்களின் ஒன்றுகூடல்

வடமாகாண கல்வி வலயங்களைச் சேர்ந்த இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு முன்பாக இடம்பெறவுள்ளது. (ம-14)

## கடற்கரை வீதிக்கு குடிதண்ணீர் நிலத்தடி மூலம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

கடற்கரை வீதிப் பகுதிகளில் குடியிருக்கும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு நிலத்தடி மூலம் குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் இருந்து இந்தக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மகேந்திரபுரத்தில் இருந்து பிரதான கடற்கரை வீதி வரையான பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகிக்க குழாய்கள் புதைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஏற்கனவே இந்தப் பகுதிகளில் சிலவற்றுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### பரிசில் தினம்

மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மற்றும் வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் பரிசில் நாள் நிகழ்வு காலை 9 மணிக்குக் கல்லூரி அரங்கில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் வே.விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ம.கிருபாசுதன் கலந்து கொள்வார். (ம-9)

### கூட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிறுவன அபிவிருத்திக் கூட்டம் முற்பகல் 9.30 மணிக்குக் கிளை அலுவலகத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு ஆளுநர் சபைக் கூட்டம் இடம்பெறும். (ம-14)

### இசை ஆராதனை

கலாபூஷணம் திலகநாயகம் போலின் மூன்றாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இசை ஆராதனை காலை 9மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கர்நாடக இசைக்கச்சேரி, நூல் வெளியீடு என்பன இடம்பெறும். (ம-14)

### பரிசளிப்பு விழா

மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி சரவணபவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராசா கலந்துகொள்வார். (ம-100)

### திருமுறை விழா

சங்கானை கல்விக் கோட்டம் நடத்தும் சைவத் திருமுறை விழாவும் சைவ நெறித் தொண்டபடு செயல் நிகழ்ச்சிப் பரிசளிப்பு விழாவும் காலை 8 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில்நடைபெறவுள்ளன.

சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் செல்வி அ.சா. மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சிறப்புரைகளும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## சட்ட விரோதமாகத் தொழில் புரிந்த ஐவருக்கு 89 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

சட்டவிரோதமான இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி கடலட்டை பிடித்த 4 பேரும் அனுமதிப்பத்திரம் இன்றி சட்ட விரோதமாக கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் ஒருவரும் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். யாழ்.நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட குறித்த சந்தேக நபர்களுக்கு 89 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.கேசவன் முன்னிலையில் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கின் சந்தேக நபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்களில் கடந்த மாதம் 6 ஆம் திகதி 2 பேரும், 8 ஆம் திகதி 3 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் யாழ்.நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 17 ஆயிரம் ரூபா, 27 ஆயிரம் ரூபா என இரண்டு பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் ஏனைய மூன்று பேருக்குமாக 89 ஆயிரம் ரூபா அபாரதம் விதித்தார்.

அத்துடன் தடைசெய்யப்பட்ட வலைகளை எரித்து அழிக்குமாறும் உத்தரவிட்டார். தடையில்லா உபகரணங்கள் மீனவர்களுக்கு மீளவும் கையளிக்கப்பட்டன.

இந்த வழக்கு கடந்த மாதம் 25 ஆம் திகதி யாழ். நீதிவான் பொ.சிவகுமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது 5 படகுகளும் 25 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டன.

படகுகளுக்கு உரியவர்கள் சட்டத்தரணி மூலமாக நீதிமன்றில் நகல்பத்திரம் சமர்ப்பித்ததை அடுத்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய 5 படகுகளும் கடற்படையின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. பின்னர் விசாரணைகளைஅடுத்துபிணையில்விடுவிக்கப்பட்டிருந்தன. (ம-13)

## யாழ்.பஸ்நிலைய ஒலிபெருக்கியால் நோயாளர் சிரமம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒலி பெருக்கியின் சத்தத்தால் பஸ் நிலையத்துக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய அடியார்களின் நலன்கருதி பொருத்தப்பட்டஒலிபெருக்கிகள் அகற்றப்படாமல் தொடர்ந்து தூர இடங்களுக்கு செல்லும் பயணிகள் நலன் கருதி பயன்படுத்தப்படுவதாகவும், திடீர் திடீரென அவை ஒலிபரப்புவதால் நிலையத்தினுள் இருக்கும் நோயாளர்கள் அதிர்ச்சி அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஒலிபெருக்கியின் சத்தம் அரைமைல் சுற்று வட்டத்துக்கு கேட்பதால் வைத்திய சாலையில் தங்கியிருப்போரும் சத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மண்டைதீவு பிரதான வீதிக்கு எப்போது விடிவு?

யாழ்ப்பாணம்,டிசெ.8

மண்டைதீவு பிரதான வீதி புனரமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டு ஒரு வருடமாகியும் அந்தப் பணிகள் இடம்பெறாமையால் மீண்டும் ஓர் ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது. எனினும் எந்த வித திருத்த வேலைகளும் இடம்பெறவில்லை. மண்டைதீவு மக்களால் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொழும்பில் ஒப்பந்தகாரர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

அதைத் தொடர்ந்து வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் குறிப்பிட்டார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
மாணவர் ஒன்றியத் தலைவர் வி.பவானந்தன் (முல்லைத்தீவு) முகாமைத்துவபீட மாணவன். கைதான மற்றையவர் விஞ்ஞான பீட ஒன்றிய உறுப்பினர் எஸ்.வேணுராஜ் (புலோலி) ஆவார்.

கைதாகித் தடுத்து வைக்கப் பட்டுள்ள தர்ஷானந், ஜெனமே ஜெயன், சொலமன் ஆகிய மூன்று மாணவர்களையும் யாழ்.பல் கலைக்கழக பேராசிரியர்களான கே.கந்தசாமி, எஸ்.ஸ்ரீசற்குணராசா ஆகியோர் வவுனியாவுக்குச் சென்று நேற்றுப் பார்வையிட்டனர்.

அதேவேளை, வேணுராஜ் தனது தாயாருடனும், பவானந்தன் தனியாகவும் வவுனியா பயங்கர வாத விசாரணைப் பொலிஸ் நிலை யத்துக்கு வந்தனர். அங்கு வைத்து இரண்டு மாணவர்களும் கைது செய்யப்பட்டனர். (உ-4)

## வெளிப்படைத்...


தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
வித்துள்ளது.எந்தவொரு விசாரணையும் வெளிப்படைத்தன்மையுடனும், உரிய ஒழுங்கு முறைக்கு உத்தரவாதமளிப்பதாகவும், சட்டத்தின் ஆட்சி முறைமைக்கு இணங்கியதாகவும் முன்னெடுக்கப்படவேண்டும் என இலங்கை அரசு மற்றும் பிரதம நீதியரசருக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்கின்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடமும் தாம் வலியுறுத்துவதாக தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(சி)

## திலீபனின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
உயிர்துறந்தார். திலீபன் உண்ணா நோன்பிருந்த நல்லூர் ஆலயத்தின் வடக்கு பக்க வீதியில் நினைவுக் கல் ஒன்று நிறுவப்பட்டு, அவரது நினைவு நாளில் அதில் அஞ்சலி செலுத்தப்பட்டு வந்தது.

இந்தநிலையில் நேற்றுமுன் தினம் இரவு அந்தப் பகுதிக்கு வாகனங்களில் வந்த சிலர் குறித்த நினைவுக் கல்லை பெயர்த்துள்ளனர். பின்னர் அதனை அடித்து நொருக்கி சிதைத்துவிட்டே அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

திலிபனின் ஞாபகார்த்தமாக தெற்குப் பக்கத்தில் நிறுவப்பட்டி



ருந்த நினைவுத் தூபியும் 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் காலத்தின் போது இனந் தெரியாதோரால் சிதைக்கப்பட்டிருந்தது. தற்போது திலீபனின் நினைவுக் கல்லும் அழிக்கப்பட்டுள்ளது.

''மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத்தூபிகள் என்பவற்றை இடித்து அழிக்கும் நடவடிக்கையில் தப்பிப் பிழைத்திருந்த நினைவுக் கல்லையும் இப்போது சிதைத்து விட்டார்கள். இத்தகைய நடவடிக் கைகள்தான் இன்னும் இன்னும் முரண்பாடுகளை வளர்த்தெடுக்கின்றன. இறந்தவர்களை அஞ்சலிப்பதற்கான எந்த உரிமையும் எங்களுக்கு இல்லை என்பதையே இந்த நினைவுக் கல் இடிப்பு உறுதிப்படுத்துகிறது.'' என்று பொதுமக்கள் வேதனையுடன் தெரிவித்தனர். (ங-5-7)

## படையினரும்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகப் புதிதாகப் பதவியேற்றுள்ள எம்.எம்.ஜிப்றி இந்தச் செய்தியாளர் சந்திப்பை நடத்தினார்.

யாழ். பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி குணசேகரவும் உடன் இருந்தார்.

கடந்த 28ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய அமைதிப் பேரணியை யாழ். பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி குணசேகர தடுத்து நிறுத்தினார். அதனைத் தொடர்ந்து அவர் வழங்கிய உத்தரவின் பேரில் கலகமடக்கும் பொலிஸார் மாணவர்களை அடித்து விரட்டினர்.

உடனடியாக நான்கு மாணவர்களும் கைது செய்யப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவத்தின்போது பொலிஸாருடன் இணைந்து படையினரும் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். பலர் வைத்தியசாலைகளில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டனர்.

இது குறித்து ஊடகவியலாளர்கள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதில் அளித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜிப்றி, பதில் பொறுப்பதிகாரி குணசேகர ஆகிய இருவரும் இது தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என்று கூறினர்.

அன்றைய தினம் பொலிஸாருடன் படையினர் நின்றிருந்தமை தொடர்பிலோ, பொலிஸார் பல்கலைக்கழக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியபோது அவர்களுடன் இணைந்து படையினரும் தாக்கியமை தொடர்பிலோ எதுவும் தெரியாது என அவர்கள் இருவரும் குறிப்பிட்டனர். (த-4)

## நீதியரசரின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பிரதம நீதியரசரின் தீர்மானத்தை இலங்கையின் பொது மக்கள் மற்றும் நீதிபதிகள் சட்டத்தரணிகள் ஆகியோர் வரலாற்று ரீதியான தருணமாகக் கருதமுடியும் எனவும், இலங்கையின் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளில்நம்பிக்கையில்லை என்று கூறியே பிரதம நீதியரசரின் குழுவினர் அதில் இருந்து வெளியேறினர் எனவும் அது தெரிவித்துள்ளது.

மேலும், தற்போதைய சூழ்நிலையில் இது மரியாதைக்குரிய சரியான தீர்மானம் என்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதன் மூலம் பிரதம நீதியரசர் என்ற பதவிக்கு ஷிராணி பண்டாரநாயக்க பெருமை சேர்த்துள்ளார் என்றும் அந்த ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

''இலங்கையில் மரியாதைக் குரியவர்களாகக் கருதப்படும் நீதிபதிகள் குற்றவாளிகளைப் போல நடத்தப்படுவதை யாரும் ஏற்க முடியாது. அதற்கு என்று சில முறைகள் உள்ளன. அவற்றை உதாசீனம் செய்து பிரதம நீதியரசர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதையும் அதனை விசாரணை செய்வதையும் ஏற்றுக்கொள்ளத் தக்க செயற்பாடுகளாக கருதமுடியாது என்றும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (சி)

## [illegible]...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
கடந்த வருடத்தைவிட இம்முறை பாதுகாப்புச் செலவினங்கள் 18 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. உலக நாடுகளில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் திணைக்களம் இருப்பதில்லை. ஆனால், இங்கு பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ்தான் இருக்கின்றது.

பிரச்சினைகள் ஏற்படும் போது சிறைச்சாலைகளுக்கு முப்படைகளை அனுப்புவது தீர்வல்ல. பொலிஸாருக்குப் போதிய பயிற்சிகள் வழங்கப்படவேண்டும். நாம் இராணுவத்தை வீட்டுக்குப் போகச் சொல்லவில்லை. அவர்கள் தற்போது செய்யும் விடயங்களில் திருத்தம்வேண்டும். அவர்களை பயனுடையவர்களாக மாற்றவேண்டும்.

போர் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், நாம் தற்போது சமாதானத்தை நோக்கி நகரவேண்டியுள்ளது. அதற்குப் பேச்சுதான் சிறந்த வழி. அப்போதுதான் நிலையான சமாதானத்தை எட்டலாம். ஆனால், கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசிடம் சிறந்த பொறிமுறை, திட்டம் ஒன்று இல்லை - என்றார்.

இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 95 சதவீதமானவை படையினரின் சம்பளம் உள்ளிட்ட செலவுகளுக்குத்தான் பயன்படுத்தப்படுகின்றன என்றார். சரியாகச் சிந்திப்பவர்களுக்கு இது புரியும் என்று அவர் குறிப்பிட்டதுடன், இலங்கைப் படையினரின் புகழ் இன்று சர்வதேச ரீதியில் சென்றுள்ளது என்றும் தெரிவித்தார். (சி)

## மாணவர்..

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
சேனாதிராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டமை மற்றும் கைது செய்யப்படுகின்றமை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்த நடவடிக்கைகள் மாணவர்களை அச்சுறுத்தும் வகையிலேயே அமைந்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் என்ன நடக்குமோ, ஏது நடக்குமோ என்ற ஏக்கத்தில் உள்ளனர்.

மாணவர்கள் கைது செய்யப் பட்டுள்ளமையால் பல்கலைக் கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு எல்லாம் மூலகாரணம் வடக்கில் தொடர்ந்தும் நிலவும் இராணுவ ஆட்சியே. இதனை நீக்கி சுமுகநிலை ஏற்படுத்துவ்தற்கு அரசு எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை.

இதனை நாம் ஐ.நா. குழுவுக்குத் தெளிவாக எடுத்துக் கூறியதுடன் நிலைமைகளை நேரடியாகச் சென்று பார்வையிடுமாறும் கேட்டுள்ளோம்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்ளும். மாணவர்களின் பெற்றோருடன் கலந்தாலோசித்து சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் ஆராயவுள்ளோம் - என்றார். (த-5)

## கைதான...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...
யில்! நிர்வாகமே அக்கறை காட்டு', 'மாணவரை அச்சுறுத்தாதே! கற்றலைக் குழப்பாதே!', 'மாணவர்கள் சிறைகளில் நிர்வாகம் விடுமுறையில்', 'எமக்கு வேண்டும் மாணவர்கள், மாணவருக்கு வேண்டும் கல்வி' ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்களும், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரும் அதில் இணைந்து கொண்டனர்.

''மாணவர்கள் கட்டம் கட்டமாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். மாணவர் ஒருவர் மட்டும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் விடுதலை தொடர்பில் போதிய அக்கறை காட்டவில்லை என்று தெரிகிறது. யாழ். மாவட்டப் படைத் தளபதியுடன் பலாலியிலும் வேறு தரப்பினருடனும் துணைவேந்தர் உள்ளிட்ட குழுவினர் பேசியிருந்தனர். ஆனால் மாணவர்களின் விடுதலை தொடர்பில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த நிலையிலேயே மாணவர்களின் விடுதலை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

விஞ்ஞான பீடத்திலிருந்து ஆசிரியர்கள் பதாகைகளை ஏந்தியவாறு பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகம் வரை ஊர்வலம் சென்றனர். அங்கு ஒன்று கூடி இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவர்கள் கைது செய்யப்படுவதால் அவர்களின் பெற்றோர் உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர் ஒருவரின் தாய்தான் நஞ்சருந்தி உயிரை விடும் நிலைக்குத் தள்ளப்பட வேண்டிவரும் என்று பல்கலைக்கழக அதிகாரிகளுக்குத் தெரிவித்துச் சென்றுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பலர் முன்னர் தாக்கப்பட்டுள்ளனர். அவர்களைத் தாக்கியவர்கள் தொடர்பில் இதுவரை எவருமே கைதாகவில்லை. அவர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை?

எங்கோ கட்சி அலுவலகம் ஒன்றுக்குக் குண்டு எறிந்தார்கள் என்று மாணவர்கள் மீது குற்றஞ்சுமத்தி அவர்களைக் கைது செய்துள்ளனர்.

முன்னர் மாணவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் எவரையும் கைது செய்ய முடியாமல் போயுள்ள நிலையில், கட்சி அலுவலகத்துக்குக் குண்டு வீசினார்கள் என்று குற்றஞ்சுமத்தி மறுநாளே எமது மாணவர்களைக் கைது செய்துள்ளனர். இதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? - என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## தெரிவுக்குழுவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து.
கட்சிகள் சார்பில் குழுவில் பங்கேற்கத் தெரிவு செய்யப்பட்டிருந்த நான்கு உறுப்பினர்களும் குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களான ஜோன் அமரதுங்க, லக்ஷ்மன் கிரியெல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான ஆர்.சம்பந்தன், ஜே.வி.பி.யின் உறுப்பினரான விஜிதஹேரத் ஆகிய நான்கு உறுப்பினர்களும் குழுவின் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு,

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள பல்வேறு முறைப்பாட்டாளர்கள் பிரதம நீதியரசராலும் அவரது வழக்கறிஞர்களாலும் குறுக்கு விசாரணை செய்யப்படுவதற்கு சந்தர்ப்பம் வழக்கப்படுமா என்பது பற்றிய விளக்கத்தை நாம் கேட்டிருந்தோம். பிரதம நீதியரசருக்கு எதிராக தெளிவான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே அவர் பதிலளிக்கும் படி கேட்கப்படலாம் என்று தெரிவித்திருந்தோம்.

ஆனால் உங்கள் குழுவானது இந்த விடயங்களில் கவனம் செலுத்தவில்லை. இந்த விடயத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நாங்கள் இருளில் தடுமாறுபவர்களாகவே உள்ளோம். மேலும் குழுவுக்கு 300 ஆவணங்களுக்கும் அதிகமாக கிடைத்திருக்கின்றன. அவை டிசெம்பர் 5 ஆம் திகதியே உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை பிரதம நீதியரசருக்கு டிசெம்பர் 6 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கே வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் பல ஆவணங்கள் உருவாக்கப்பட விருப்பதாகவும் அறிகின்றோம். இவைகளை வாசித்து அறிவதற்குப் பிரதம நீதியரசருக்கு மட்டுமன்றி உறுப்பினர்களான எங்களுக்கும் போதுமான கால அவகாசம் தேவைப்படுகின்றது. மேலும் நீதியரசருக்குச் சாட்சிகளின் பட்டியலோ ஆவணங்களின் பட்டியலோ வழங்கப்படவில்லை.

பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட பொழுது அதனுடன் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. சாட்சிகள், ஆவணங்கள் பட்டியல் இல்லாமலே 2012 நவம்பர் 14 ஆம் திகதி விசாரணை ஆரம்பமானது. மூன்று அமர்வுகளின் பின்னரே வங்கிகளிலிருந்தும் ஏனைய நிறுவனங்களில் இருந்தும் ஆவணங்களைப் பெறும்படி செயலாளர் நாயகம் கேட்கப்பட்டார். இங்கே வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால் குற்றப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்ட பொழுது கையெழுத்திட்டவர்கள் எவருமே ஆவணங்களைப் பார்த்திருக்கவில்லை.

சட்டத்தின் முக்கிய அம்சங்களும் இயற்கை நீதியின் பிரிவுகளும் குழுவினால் புறக்கணிக்கப்பட்டிருப்பது கவலையளிப்பதாகும்.

பிரதம நீதியரசர் அவரது பதவிக்கு ஏற்ற உரிய கௌரவங்களும் உரிமைகளும் வழங்கப்படவில்லை என்பதும் கவனத்துக்குரியது. இந்த விடயங்கள் தொடர்பாகப் பொது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி விட்டோம். இந்த விசாரணை தொடர்பாக நியாயமான உயர்ந்த தரத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது குழுவின் கடமையாகும். இந்த விசாரணைகளின் போது பிரதம நீதியரசர் அவமதிப்பாகவும் அச்சுறுத்தும் விதத்திலும் நடத்தப்பட்டார் என்பதும் முன்கூட்டியே குற்றம் தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டு விட்டதை காட்டுவது போன்ற குறிப்புகளையும் நாம் கவலையுடன் அவதானித்துள்ளோம். எனவே தான் மேற்கொண்டும் குழு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு முன்பதாக இந்த விசாரணையை என்ன விதமாக குழு நடத்தப்போகிறது என்பதை வெளிப்படுத்துமாறு கோருகின்றோம்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை படித்தறிவதற்கு குழு உறுப்பினர்களுக்கும் பிரதம நீதியரசருக்கும் அவரது சட்டத்தரணிகளுக்கும் போதிய அளவு கால அவகாசம் வழங்கப்படவேண்டும்.

குழுவின் விசாரணைகளுக்கு வரும் போது பிரதம நீதியரசரின் பதவிக்கு ஏற்ற மதிப்பும் கண்ணியமும் வழங்கப்படவேண்டும்.

இந்த விடயங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டால் இந்த விசாரணைகளில் தொடர்ந்தும் பங்கேற்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்படலாம்.

எதுவானாலும் எமது இந்த ஆலோசனைகளை குழு அங்கீகரிக்காது போகுமானால் குழுவில் இருந்து நாம் விலகிக்கொள்ள நேரிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் அதிகரித்துக் காணப்படும் பொலிஸாரின் சோதனை நடவடிக்கை

### மாணவி கடத்தல், கொள்ளைகளின் எதிரொலி

மன்னார், டிசெ.8

மன்னார் நகரில் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளும், விசாரணைகளும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் நகரில் கடந்த சில தினங்களாக பொலிஸாரினால் திடீர் சோதனை நடவடிக்கைகளும் விசாரணைகளும் இடம்பெற்று வருவதோடு பலர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாரில் பாடசாலை மாணவி ஒருவர் கடத்தப்பட்டமை மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து குறித்த நடவடிக்கைகளில் மன்னார் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடித் திரிபவர்கள் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு அவர்களுடைய விபரங்களையும் பொலிஸார் பதிவு செய்து வருகின்றனர்.

இது மட்டுமின்றி மன்னார் அரச, தனியார் பஸ் தரிப்பிடம், திரையரங்கு உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மாலை 6.30 மணிக்குப் பின்னர் பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதையும் காண முடிகின்றது.

இதன் போது வீதிகளிலும், பொது இடங்களிலும் கூடி நிற்கும் இளைஞர்கள் கடும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதோடு அவர்கள் அவ்விடத்தை விட்டு உடனடியாக அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மன்னாரில் இடம்பெற்று வரும் சட்ட விரோத செயற்பாடுகளை தடுப்பதற்காகவே குறித்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-12)

# மன்னாரில் விவசாய உதவி வழங்கியதில் முறைகேடுகள்

### முறையிடுகிறார் விவசாய அமைப்பின் தலைவர்

மன்னார், டிசெ.8

மன்னாரில் விவசாய உதவிகள் வழங்கியதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட்ட விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்காக மாவட்ட விவசாய திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் 'நீர்ப்பா' திட்டத்தின் மூலம் கடந்த மாதம் விவசாய உள்ளீடுகள், உபகரணங்கள் வழங்கியபோது பயனாளிகள் தெரிவில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக மாந்தை மேற்கு விவசாய அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக விவசாய அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வரும் வகையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு விவசாயக் கிராமங்கள் மற்றும் பயனாளிகள் தெரிவின்போது வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை என்பதனையும், இவற்றில் குறைபாடுகள் காணப்படுவதாகவும் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏலவே வலியுறுத்தப்பட்டது.

அதற்கமைய எம்மோடு ஆலோசிப்பதாக அதிகாரிகளினால் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

விவசாயிகள் அல்லாதவர்களும் வேறு தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களும், தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு குறிப்பிட்ட சில கிராமங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்களுக்குப் பாரபட்சமின்றி நேர்மையான முறையில் பணியாற்ற வேண்டிய அரச அதிகாரிகள் இவ்வாறு குறுகிய நோக்கத்துடன் பக்கச்சார்பாக செயற்படுவதையிட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் ஏலவே இவர்கள் தற்காலிகப் பதிவுள்ள அமைப்புகளுக்கு பெறுமதிமிக்க அறுவடை இயந்திரம் வழங்கியவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே எதிர்காலத்திலும் இவ்வாறான நிலை எமது மாவட்ட விவசாயிகளுக்கு இடம்பெறக் கூடாது என்பதைத் தங்களுக்கு அறியத் தருவதுடன் இதற்கு நியாயம் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என விவசாய அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(க-12)

## வெற்றி பெற்ற கிராம அலுவலர்கள்

துணுக்காய் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர்களுக்கு இடையிலான முகாமைத்துவ போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன் பிரகாரம் புகழேந்தி நகர் கிராம அலுவலர் திருமதி துஷ்யந்தினி வினோதன், பாரதி நகர் கிராம அலுவலர் திருமதி றமணி தமிழ்ச் செல்வன், அமதிபுரம் கிராம அலுவலர் எஸ். துளசிதாஸ் ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் கோட்டைகட்டிய குளம், புத்துவெட்டுவான், அனிஞ்சியன்குளம், யோகபுரம்கிழக்கு, தேறாங்கண்டல் பகுதி கிராம அலுவலர்கள் வெற்றியாளர்களை நெருங்கும் வகையில் புள்ளிகளைப் பெற்றுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் தெரிவித்தார். (க-18)



கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் லயன்ஸ் கழகங்களால் நடத்தப்பட்ட மருத்துவ முகாமின்போது தேவையுடையோருக்கு ஊன்றுகோல் வழங்கப்படுகின்றது. அத்துடன் மருத்துவ சேவைகளைப் பெறுவதற்கு மக்கள் வரிசையில் காத்திருக்கின்றனர். (க-18)

### துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில்

## இந்திய வீடுகளை அமைக்க ஐந்து கிராமங்கள் தெரிவு

அக்கராயன், டிசெ.8

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆம் கட்டத்தில் இந்திய வீடுகளை அமைப்பதற்கென ஐந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இங்கு 3 ஆம் கட்டத்தில் சுமார் 400 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. துணுக்காய், தேறாங்கண்டல், அனிஞ்சியன்குளம், யோகபுரம் மத்தி, கல்விளான் ஆகிய கிராமங்கள் இதற்கெனத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதேவேளை இரண்டாம் கட்டத்தில் மல்லாவி, யோகபுரம் கிழக்கு, அமதிபுரம், ஆலங்குளம் ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு வீடுகளை அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

முதலாம் கட்டத்தில் ஐயன்கன்குளம் கிராமத்தில் 112 வீடுகளை அமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## போக்குவரத்து நெருக்கடி விவசாயக் கிராமங்களில்

### மழை காலத்தில் நிலைமை படுமோசம்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல பாரம்பரிய விவசாயக் கிராமங்கள் போக்குவரத்து வசதிகள் இன்றி சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம்-துணுக்காய் வீதியையும் ஏ-9 வீதியையும் இணைக்கும் கொக்காவில்-துணுக்காய் வீதியை மையமாகக் கொண்டு புத்துவெட்டுவான், பழைய முறிகண்டி, மருதன்குளம், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் இந்தக் கிராமங்களுக்கான பிரதான வீதி முதற்கொண்டு ஏனைய குடியிருப்பு வீதிகள் நீண்ட காலமாகப் புனரமைப்புப் பணிகள் இடம்பெறாது மோசமானநிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால் எந்த வாகனத்திலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் புத்துவெட்டுவான் மருதன்குளம், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள குளங்கள் பருவமழை காலங்களில் வான் பாயும் போது வெள்ளநீர் வீதிகளைக் குறுக்கறுத்துப் பாய்வதால் போக்குவரத்துக்கள் முற்றாகத் துண்டிக்கப்படும் நிலை காணப்படுகின்றது.

இதைவிட இந்தக் கிராமங்களில் மருத்துவ வசதியோ அல்லது எந்தவொரு அடிப்படை வசதியுமோ இல்லாததால் இங்குள்ள மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு 20 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர். இவ்வாறு மேற்படி கிராமங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரம் குடும்பங்கள் பல்வேறு துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

### கண்டாவளை, கட்டைக்காடு

## கிராம அபிவிருத்தி சங்கத்தை புனரமைக்குமாறு வேண்டுகோள்

கிளிநொச்சியிலுள்ள கண்டாவளை, கட்டைக்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைக்குமாறு கிராம மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கட்டைக்காடு கிராமத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்ந்த போது தெரிவு செய்யப்பட்ட கட்டைக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம் சீராக இயங்காத நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முக்கிய பொறுப்புக்களை வகித்த நிர்வாக சபை உறுப்பினர்கள் விலகிச் சென்றுள்ளதால் கிராமத்தின் அபிவிருத்திப் பணிகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

பிரதேச அபிவிருத்திகள் தொடர்பாக மாவட்டச் செயலகம் அல்லது பிரதேச செயலகம் அல்லது வேறு இடங்களில் இடம்பெறும் கலந்துரையாடல்களில் கட்டைக்காடு கிராமத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி எவரும் கலந்து கொள்வதில்லை.

இதனால் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போகின்றன. இதனால் இந்தக் கிராமம் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் கிராம அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைக்குமாறும் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

## கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் சட்டவிரோத மதுவும் சீர்கேடுகளும்

### தடுத்து நிறுத்த எவருமில்லையா?

கிளிநொச்சி, டிசெ.8

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் சட்டவிரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன என்று சமூக ஆர்வலர்கள் கவலையும் விசனமும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, பரந்தன், கோரக்கன்கட்டு, பூங்காவனச் சந்தி ஆகிய இடங்களில் சட்டவிரோத மதுபான உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துக் காணப்படுவதுடன் சமூக சீர்கேடுகளும் சர்வ சாதாரணமாக நடந்து வருகின்றது.

பரந்தன் பகுதியில் ஏ-35 வீதியை மையமாகக் கொண்ட பூங்காவனச்சந்தி, கோரக்கன்கட்டு ஆகிய பகுதிகளில் பல்வேறு வடிவங்களில் கசிப்பு விற்பனை இடம்பெற்று வருகின்றது. இது நடமாடும் வியாபாரமாகவும் இடம்பெறுவதுடன் குறிப்பிட்ட சில வர்த்தக நிலையங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனைவிட மாலை 6 மணிக்குப் பின்னர் வீதியால் பயணிக்கும் பலரும் வயது வேறுபாடுகளின்றி மது போதையில் தள்ளாடித் திரிவதைக் காணமுடிகின்றது. அத்துடன் பல்வேறு சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன.


இதில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இவ்வாறான சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நடராசா சந்திரசேகரா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சந்திரசேகரா 6.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் சரஸ்வதி, ஜெயரூபி தம்பதியரின் புதல்வனும், அருள்நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம்- தையல்நாயகி தம்பதியரின் மருமகனும், பரராஜசேகரம், ஜெயராஜசேகரம், புவிராஜ சேகரம், லலித்தா, லீலா, காலஞ்சென்ற சிறிசோமசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருட்பிரகாசம், ஞானப்பிரசாசம், ஜீவநாயகி, ஜெயப்பிரகாசம், காலஞ்சென்ற செல்வநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கல்பனா, கல்பறாஜ், பிரவீன்ராஜ் (பொப்பின்), கேதீஸ்ராஜ் (சிங்கிலி), துவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

86, சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு.

(26604) (45.6.7)

தகவல்:
பிரவீன்ராஜ்
(பொப்பின் - மகன்)

## தோப்பூரில் தகவல் தொழில்நுட்ப நிறுவனம்

கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும் தற்போதைய மாகாண சபை உறுப்பினருமான எம்.எஸ்.சுபைரின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தோப் பூரில் தகவல் தொழில்நுட்ப நிலையத்துக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இதன் மூலம் இளைஞர்கள் தமது கணினி அறிவினை வளர்த்துக்கொள்ள வழி ஏற்பட்டுள்ளது.

(வ-40)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சிவஞானசுந்தரம்



துன்னாலையைப் பிறப்பிடமாகவும் 21/5, முதலாம் ஒழுங்கை, பிறவுண்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் நேற்று (07.12.2012) வெள்ளிக்கிமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாராயணன் - நாகலக்சுமிதம்பதியரின் மருமகனும் , வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், அருட் செல்வி(ஆசிரியை, வேலணை மத்திய கல்லூரி), முரளீதரன்(பொது சுகாதாரப் பரிசோதகர்- யாழ். போதனா வைத்தியசாலை ), ஆகியோரின் அன்புத் தந்தையும், குகானந்தம் (வருமானப் பரி சோதகர், யாழ். மாநகரசபை), இராஜதேவி (பட்டதாரிப் பயிலுனர் - பிரதேச செயலகம், நல்லூர்), வேலாயுதமூர்த்தி(சிரேஷ்ட விரிவுரையாளர்- யாழ். பல்கலைக் கழகம்), ஆகியோரின் அன்பு மாமனும், சிவசேந்தன், குகசுதன், குருபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21/5, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(26533)

தகவல்:
குடும்பத்தினர்.


SALE / நத்தாரை முன்னிட்டு அதிரடி விலைக்கழிவில் \ SALE

**Desktop Offer-1**
Intel Dual Core G630
M/Board Intel DH61
2GB Ram - Kingston
HDD 500 GB Samsung
ATX Casing 250W
DVD Writer Samsung
Monitor 19" LED Sumsung
Keyboard, Mouse, Speaker
UPS 650VA
Dos Free
Price :- 49500=

**Desktop Offer-2**
I3 Intel 2120 3rd Gen
M/Board Intel DH61
2GB Ram - Kingston
HDD 500 GB Samsung
Casing ATX 250W
DVD Writer Samsung
Monitor 19" LED Sumsung
Keyboard, Mouse, Speaker
UPS 650VA
Dos Free
Price :- 58500/

**Laptop Offer**
HP CQ-43
B960 Intel Processor
2GB Ram , HDD 500GB
14" LED Display
DVD/RW, BT ,Webcam O/S - Dos Free
Price :- 54,500/

Free !! Antivirus Panda 2012

*Sales, Repair, & maintenance, Software Develop. and etc ...*

Note ★ 1-3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்.
« கையிருப்பில் உள்ளவரை மட்டுமே...

*SDS Computer Technologices*
*No. 42/2, College Road, Neeraviady, Jaffna.*
*Tel :- 021 2224500*
*Hotline :- 0777 874705*

எங்களின் நோக்கம் உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்


### VACANCIES
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the under mentioned post up to 28.12.2012.

**PHYSICAL EDUCATION UNIT**

Visiting Instructor for the following fields
Karate/ Chess - Men/ Chess- Women

**Rate of payment per hour of Instruction - Rs.250/-.**

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form at the People's Bank, University Branch or at the Shroff's counter of the University of Jaffna.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with **a self –addressed stamped envelope** 23 x 10 c.m. in size.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Heads of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only those applicants who possess the qualifications and experience for consideration will be called for an interview.

**Registrar**
2012-12-07


நல்லூர்
# சரவணா ரெக்ஸ்
புதுவருடத்தை முன்னிட்டும்
2012 ஆம் ஆண்டு நிறைவில்
மாபெரும் பிரமாண்டமான
மலிவு விற்பனை



இடம் -சரவணா ரெக்ஸ் களஞ்சியசாலை
01, சிவப்பிரகாசம் வீதி,
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)
யாழ்ப்பாணம்
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை
காலம்:- 05.12.2012 முதல்
கையிருப்பு உள்ளவரை.......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# பிரதம நீதியரசர் மீதான விசாரணை சர்வாதிகாரத்துக்கான சமிக்ஞையா?

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையின்போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க திடீரென வெளிநடப்புச் செய்த செய்தி ஊடகங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

அதன் மத்தியில், தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நான்கு உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்திருப்பது நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையிலான நெருக்கடியில் ஒரு திருப்பம் எனலாம். இனிமேல் நடைபெறும் விசாரணைகளை அரசதரப்பின் ஏழு உறுப்பினர்கள் மட்டுமே நடத்தப்போகிறார்கள். இது ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் ஒரு செயல்.

நேற்று முன்தினம் மூன்றாவது தடவையாகத் தெரிவுக்குழுவில் முன்னிலையான ஷிராணி பண்டாரநாயக்க, சுமார் மூன்று மணி நேர விசாரணையின் பின்பு அதனைப் புறக்கணித்து தனது சட்டத்தரணிகள் சகிதம் வெளியேறினார். இது எவரும் எதிர்பார்த்திருக்காத ஒன்றே. தெரிவுக்குழு மீது தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும், இனியும் விசாரணைக்குச் சமுகமளிக்கத் தாம் தயார் இல்லை என்றும் ஷிராணி பண்டாரநாயக்க தெரிவித்திருப்பது அவர் இல்லாமலேயே அவருக்கு எதிரான விசாரணையை நடத்தி அவருக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி விட்டுள்ளது.

அவர் தெரிவுக்குழுவில் முன்னிலையானாலும், பகிஷ்கரித்து விசாரணைகளின்போது சமுகமளிக்காவிட்டாலும் தெரிவுக்குழுவின் தீர்மானத்தில் எதுவித மாற்றமும் எதிர்பார்ப்பதற்கில்லை. தெரிவுக்குழுவின் தீர்மானம் ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டதொன்று என்பதே பலரதும் கருத்து.

நாட்டில் உள்ள நீதியரசர்கள், நீதிவான்கள் அனைவரையும் விசேட கூட்டம் ஒன்றுக்காக கொழும்புக்கு வரவழைத்து, மிகத் துணிச்சலுடன் தற்போதைய பிரச்சினையை விளக்கிய ஷிராணி பண்டாரநாயக்க, நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையிலான போராட்டத்தில் பின்வாங்கமாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அவரை இராஜிநாமா செய்யவைக்கும் முயற்சியும் கைகூடவில்லை. இந்த விவகாரத்தில் சர்வதேச தலையீடு இருந்துவரும் நிலையில் அரசு மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டிய கட்டாயம் இருந்து வருகிறது.

இந்த விவகாரம் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்து வந்த நிலையிலும், ஜனாதிபதி ஆரம்பத்தில் மௌனம் சாதித்து வந்தார். எனினும் சமீபத்தில் அவர் கருத்து வெளியிடுகையில், ஹல்ஸ்டோப்பில் தமக்கு எதிராக ஒரு சதி இடம்பெறுவதாகத் தெரிவித்தார். புலிகள் அமைப்பைத் தோற்கடித்தது போன்று ஹல்ஸ்டோப் சதியையும் தம்மால் தோற்கடிக்க முடியும் என்றும் கூறினார்.

மூன்றில் இரண்டு மடங்கு பலம் கொண்ட ஓர் அரசுக்கு, அரசமைப்புக்கு உட்பட்டுச் செயற்பட்டு ஒரு பிரதம நீதியரசரைப் பதவி இறக்குவது கடினமான காரியம் அல்ல. ஆனால் பிரதம நீதியரசர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள சூழ்நிலை, சர்வதேச நாடுகள் இந்த விவகாரத்தில் செலுத்தும் அக்கறை காரணமாக அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் தம்மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதில் அளிக்கப் போதிய கால அவகாசம் வழங்கப்படாமை, விசாரணைகள் தொடர்பான விதிமுறைகள் தெரிவிக்கப்படாமை, பிரதம நீதியரசரை இழிவுபடுத்தும் விதத்தில் தெரிவுக்குழு உறுப்பினர்கள் வெளியிடும் கருத்துகள், நீதியானதும் நியாயமானதுமான விசாரணை ஒன்றுக்கான சூழ்நிலை இல்லாமை ஆகியவை பிரதம நீதியரசர் தரப்பில் தெரிவுக் குழுவுக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அடங்கிய ஆவணங்கள் தமக்குக் கையளிக்கப்படவில்லை என்றும், சாட்சிகளின் பட்டியல் தமக்கு வழங்கப்படவில்லை என்றும் பிரதம நீதியரசர் தரப்புச் சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். எவ்வளவு விரைவாக விசாரணைகளை நடத்தி முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தி முடித்து தனது இலக்கை எட்டுவதற்கு அரசு திட்டமிடுவது அதன் செயற்பாடுகளில் இருந்து புலப்படுகிறது.

1978 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்ட பின்பு அரசமைப்பில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு விட்டன. ஆனால் தற்பொழுதுதான் முதல் தடவையாக நெருக்கடி பூதாகரமாக உருவெடுத்துள்ளது. அரசமைப்பில் தனிமனித சுதந்திரத்துக்கும், மனித உரிமைகளுக்கும் கடைசி பாதுகாப்பு அரணாக இருப்பவை நீதிமன்றங்களே. ஆனால் தெரிவுக்குழுவே நீதிபதியாகவும், ஜூரராகவும், நிறைவேற்று அதிகாரியாகவும் செயற்படும் சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டால், நாட்டில் சுதந்திரமான நீதிச்சேவை அஸ்தமனமாகிவிடும். விரித்துச் சொல்வதானால், ஒரு கட்சி ஆட்சிமுறைக்கு அல்லது தனிநபர் ஆட்சிக்கு இருந்துவரும் இறுதித் தடையை நீக்கும் முயற்சியே தற்பொழுது மேற்கொள்ளப்படுகிறது. இதற்கு எதிராக ஜனநாயக அமைப்புகள் அனைத்தும் குரல் கொடுக்க வேண்டும்.

இல்லையேல் ஜனநாயகம் என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே மாறிவிடும். அதன் பின்னர் நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் உரிமைகளை உதாசீனம் செய்து, அவர்களை இப்போது உள்ளதை விடவும் முழுப்படியாக விட்டெறிந்து செயற்பட அரசு தயங்கமாட்டாது என்று முழுமையாக எதிர்பார்க்கலாம்.

எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகிய எதிர்க் கட்சிகள் மூன்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் இருந்து நேற்றுக் கூட்டாக வெளியேறியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நிலைமை தொடர்ந்தால், பிரதம நீதியரசர் மீதான விசாரணை ஒரு பக்கச் செயற்பாடாகவே அமையப் போகிறது. அதனைத் தனக்குச் சாதகமான நிலை என்று அரசு கணிக்குமானால், அது சர்வாதிகாரத்துக்கான முதற்புள்ளி எனக் கொள்ளலாம்.

அனைத்துலக மட்டத்திலான அழுத்தங்களைத்தானும் பொருட்படுத்தும் போக்கு எந்தச் சர்வாதிகார ஆட்சியாளரிடமும் இருப்பதில்லை. எதற்கும் பிரதம நீதியரசர் மீதான விசாரணையின் தொடக்கமும், அதன் பெறுபேறுகளும் எவ்வாறு விளையும் என்பதனைத் தீர்க்கமாக அறிவதற்கு இன்னும் சில வாரங்கள் செல்லலாம். [illegible] லங்கை மக்களும் இது தொடர்பில் பொறுத்திருந்து பார்க்கும் [illegible] தோன்றியுள்ளது. அதுவே தமிழ் மக்களுக்குமாகும்.

# வன்னி தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் வழங்குங்கள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.8

வன்னிப் பிரதேச தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்காமல் யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டதால், அவர்கள் இடமாற்றம் பெற்று யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர்.

வன்னிப் பிரதேசத்தில் தொண்டர் ஆசிரியர்களாக பல தகுதியுடையவர்கள் இருந்தும் அவர்களுக்கு இன்னமும் நியமனம் கிடைக்கவில்லை.

எனவே இந்த விடயத்தில் ஆளுநர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கோரியுள்ளது.

இது தொடர்பாக வடமாகாண ஆளுநருக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னர் ஒரு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் செய்த கடமையை இத்தனை அதிகாரிகள் இருந்தும் செய்ய முடியாமல் இருப்பது வெட்கக்கேடான விடயம். இடமாற்றம் என்றும் அதிபர் நியமனம் என்றும் வடமாகாண கல்வித் திணைக்களம் செய்வது என்ன? வடமாகாணத்தில் இடமாற்றம் என்று சொல்லி நித்தம் நித்தம் ஆசிரியர்களை வதைப்பது சரியானதா? எந்தவேளையும் இடமாற்ற விண்ணப்பம் நிரப்புவதுதான் ஆசிரியரின் கடமையா? நீங்கள் பல தடவைகள் கலந்துரையாடல்களும், கூட்டங்களும் நடத்தி என்ன பலாபலன் கிடைத்திருக்கின்றது?

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறு பல தடவைகள் கோரினோம். அது நடைபெறவில்லை. அங்குள்ள ஆசிரிய வெற்றிடங்களை 2 வருட சேவையின் மூலம் எவ்வளவு காலத்துக்கு நிரப்ப போகின்றீர்கள்?

ஏற்கனவே வன்னிக்கு அனுப்பப்பட்டவர்களில் பலர் கடுஞ் சுகவீனம் காரணமாக இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டவர்கள். அவர்களின் பெயர்கள் மீண்டும் பட்டியலிடப்பட்டுள்ளன. இது யாரை ஏமாற்றும் செயல்?

2010, 2011 ஆம் ஆண்டுகளில் வன்னிப் பிரதேச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர் நியமனம் கிடைத்தவர்களில் பலர் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர். அவர்களில் பலருக்கு அங்கு தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றியமைக்கே நியமனம் வழங்கப்பட்டது.

நியமனம் பெற்றுக் கொண்டு அவர்கள் சொந்த இடமென்று யாழ்ப்பாணம் வருவது நியாயமானதா? அங்குள்ள பிரதேசங்களில் தகுதியுள்ளவர்கள் தொண்டராசிரியர்களாக இன்னும் இருக்க அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியமனத்தைப் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் வருவது எவ்வகையில் நியாயமானது?

ஜனாதிபதியிடமிருந்து நியமனக் கடிதங்கள் பெற்ற பலருக்கு இன்னமும் நியமனங்கள் வழங்கப்படவில்லை. வடமாகாணத்திலுள்ள ஒருவரே தனது விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப இடமாற்றங்கள், நியமனங்கள் செய்கின்றார்.

ஆளுநர் என்ற வகையில் நீங்கள் சீர்செய்வதற்கான சாதகமான பதிலை எதிர்பார்க்கின்றோம். இல்லையெனில் ஜனாதிபதியின் தயவை நாடுவோம். அதற்கும் பயனில்லையாயின் நாமாகவே முடிவு செய்வோம்-என்றுள்ளது. (5)

# 2013 இல் நடைமுறைப்படுத்தும் பாடசாலை தவணை அட்டவணை

## கல்வி அமைச்சால் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.8

அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணை கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் முதலாம் தவணை ஜனவரி 2 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 5 ஆம் திகதி வரைக்கும், 2 ஆம் தவணை ஏப்ரல் 22 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரைக்கும், 3 ஆம் தவணை செப்ரெம்பர் 2 ஆம்திகதி தொடக்கம் டிசெம்பர் 6 ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகள் முதலாம் தவணைக்காக ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பித்து ஏப்ரல் 9 ஆம் திகதி வரைக்கும், 2 ஆம் தவணை ஏப்ரல் 17 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 5 ஆம் திகதி வரைக்கும், 3 ஆம் தவணை ஓகஸ்ட் 12 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 6 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது.

வருடத்தில் 210 நாள்கள் சகல பாடசாலைகளும் நடத்தப்பட வேண்டி இருப்பினும் அரச விடுமுறை தினங்களைக் கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டு அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளும் 200 நாள்கள் நடத்த வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அரச வெளியிடும் விசேட விடுமுறை நாள்கள், சனி, ஞாயிறு நாள்கள், தவணை விடுமுறை நாள்கள் போன்ற காலங்களில் சகல பாடசாலைகளும் மூடப்படும்.

இருந்தும் விசேட காரணங்களுக்காக பாடசாலை மூடப்படுமாயின் அது தொடர்பாக குறைவடையும் நாள்களுக்காக பதில் பாடசாலை நடத்தப்படுதல் வேண்டும்.

2013 ஆம் ஆண்டுக்குரிய விசேட உலக மற்றும் சர்வதேச தினங்களையும் பாடசாலையுடன் தொடர்புடைய விசேட தினங்களையும் சகல பாடசாலைகளும் தங்களுக்கு ஏற்ற முறையில் கொண்டாட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-60)

# சமாதான நீதிவான் சஞ்சிகைக்கு அங்கத்தவர் இணைக்க நடவடிக்கை

சமாதான நீதிவான்களுக்கான மாதாந்தச் சஞ்சிகைக்கு அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இலங்கையில் உள்ள சமாதான நீதிவான்களுக்காக வெளியிடப்படும் ஒரே செய்தித்தாள் சமாதான நீதிவான்கள் மாத வெளியீடு ஆகும்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவரும் சமாதான நீதிவான்களுக்கான மாதச் சஞ்சிகை முற்று முழுதாக இந்த நாட்டில் வாழும் சமாதான நீதிவான்களுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு நலன்புரி சேவையாகும்.

சமாதான நீதிவான்கள் சம்பந்தப்பட்ட சாதாரண தகவல்கள் சமாதான நீதிவான் விடயப் பரப்புக்கு உட்பட்ட ஆக்கங்கள், வர்த்தமானி வெளியீடுகள், நீதிசார் கடிதங்கள் மற்றும் இன்னோரன்ன விடயங் களைத் தாங்கி வரும் இந்த வெளியீடு பிரபல எழுத்தாளர் ஜயந்த குமாரசிறியின் படைப்பாகும்.

2013 ஆம் ஆண்டுக்கான இந்த சஞ்சிகைக்கு அங்கத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பணி தற்போது ஆரம்பமாகியுள்ளது.

இதில் சமாதான நீதிவான்கள் மட்டுமே அங்கத்துவம் பெறலாம். இந்தச் சஞ்சிகை சிங்கள மொழியிலேயே வெளிவருகின்றது. சிங்கள மொழியில் தேர்ச்சி உடைய தமிழ் பேசும் அங்கத்தவர்கள் இணைந்து கொள்ள முடியும்.

சுய இலச்சினை பொறிக்கப்பட்ட விண்ணப்பக் கடிதத்துடன் பெயர், முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட 9 x 4 அளவு உறையுடன் ஆசிரியர், சமாதான நீதிவான்கள் சங்கம், 117, கட்டுருபே, பூசா என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம)

# தேசிய அடையாள அட்டைகள் அனைத்திலுமே இரு மொழிகளும்

## உடன்பாடு காணப்பட்டதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

தேசிய அடையாள அட்டையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெறுவது தொடர்பாக உடன்பாடு காணப்பட்டுள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டையில் இதுவரை தமிழர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையில் மட்டுமே சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் காணப்படுகின்றன. ஆனால் சிங்களவர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையில் சிங்கள மொழி மட்டுமே காணப்படுகின்றது.

இந்த நிலையில் இன வேறுபாடு காட்டப்படுவதுடன் மொழி உரிமையும் மீறப்படுவதால் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் மேற்கொள்ளப்படும் இரு மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்தல் திட்டத்துக்கு அமைவாக இனபேதமின்றி தேசிய அடையாள அட்டையில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இடம்பெற வேண்டும் என்பது தொடர்பாக அரச உயர்மட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதற்கு அமைவாக இந்த உடன்பாடு காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை நிகழ்வுகளுக்கு ராணுவ அழைப்பு கட்டாயம்

### தவறினால் அதிபர் பாடு அதோகதி

புதுக்குடியிருப்பு,டிசெ.8

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்துக்கும் இராணுவத்தினர் அழைக்கப்படவேண்டும் என இராணுவத்தினர் பாடசாலை அதிபர்களுக்கு வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவ்வாறு அழைத்துக்கொள்ளாத அதிபர்கள் மீது இராணுவத்தினர் கடுமையாக நடந்துகொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முல்லைத்தீவில் உள்ள பாடசாலை ஒன்றில் சாதாரணதரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வு ஒன்று நடைபெற்றது. அதற்கு இராணுவத்தினர் அழைக்கப்படவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் பாடசாலைக்கு வந்த இராணுவத்தினர் இங்கே என்ன நடக்கிறது? ஏன் எங்களுக்கு தெரியப்படுத்தவில்லை என பாடசாலை அதிபரைக் கடிந்துள்ளனர். அதற்கு இது சிறிய நிகழ்வு என்று அதிபர் பதிலளித்துள்ளார். அதற்கு இராணுவத்தினர் எந்த நிகழ்வாயினும் எங்களுக்கு அறிவிக்க வேண்டும் என மிரட்டியுள்ளனர்.

பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்துக்கும் இராணுவத்தினரின் அனுமதி மற்றும் அவர்களை மாலையிட்டு அழைப்பது போன்றவை கட்டாயம் செய்ய வேண்டியுள்ளதால் மாணவர்களின் சுயமான கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-410)

# புதுக்குடியிருப்பு வைத்தியசாலை கட்டடப் பணிகள் மந்தகதியில்

### அவதியுறும் நோயாளர்கள்

புதுக்குடியிருப்பு,டிசெ.8

புதுக்குடியிருப்பு பொது வைத்தியசாலையில் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி ஒரு வருடம் கடந்துள்ள நிலையில் முடிவுறுத்தப்படாது உள்ளது. இதனால் இந்த வைத்தியசாலையில் நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு பொது வைத்தியசாலையில் நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணி கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பணிகள் ஒரு வருடம் கடந்த நிலையில் அரைகுறை நிலையிலேயே உள்ளன. தற்போது இந்த வைத்தியசாலை கைவேலியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

**இரண்டு விடுதிகள் மட்டும் உள்ளன. தினமும் 250 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். குழந்தைகள் விடுதிகள் இல்லை, சத்திரசிகிச்சை வசதி இல்லை, பிரசவ விடுதி இல்லை. இரண்டு வைத்தியர்கள் மட்டும் சேவையில் உள்ளனர்.**

இங்கு இரண்டு விடுதிகள் மட்டுமே உள்ளன. தினமும் 250 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். குழந்தைகள் விடுதிகள் இல்லை, சத்திரசிகிச்சை வசதி இல்லை, பிரசவ விடுதி இல்லை. இரண்டு வைத்தியர்கள் மட்டும் சேவையில் உள்ளனர்.

வள்ளிபுனம், உடையார்கட்டு, கைவேலி, முள்ளியவளை, வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை, இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் மக்கள் இந்த வைத்தியசாலையை நம்பியுள்ளனர்.

அவசர சிகிச்சைகள் அனைத்துக்கும் புதுக்குடியிருப்பு மாஞ்சோலை வைத்திய சாலையை நாடவேண்டியுள்ளது.

கைவேலி வீதிக்கு மின்சாரம் கிடைத்தும் வைத்தியசாலைக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை. இதனால் குளிரூட்டி வசதி, மருந்துகளை பாதுகாக்கும் வசதி, இரத்த வங்கி வசதி எவற்றையும் சீராக வைத்திருக்க முடியாமல் உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறான நெருக்கடி நிலைகளை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கைகள் விடுக்கின்றனர். (ஐ-400)

## வவுனியா ரயிலில் திருட்டு அதிகரிப்பு

### கடந்த மாதம் 40 சம்பவங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.8

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன என்று பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஒருமாத காலத்துக்குள் 40 திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று தெரியவருகிறது.

நாளாந்தம் சங்கிலி அறுப்புச் சம்பவங்கள், பயணப்பொதித் திருட்டு எனப் பல்வேறு திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்களால் பெரிதும் தமிழ்ப் பயணிகளே பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவான திருட்டுகள் வெயாங்கொடை, றாகம பகுதிக்கு இடையில் இரவு நேரம் செல்லும் ரயிலில் இடம்பெற்றுள்ளன.

முற்கூட்டி பதிவு செய்யப்படாத இருக்கைகளில் இத்திருட்டுகள் இடம்பெறுவதாகத் தெரியவருகிறது.

நாளாந்தம் ஆகக்குறைந்தது ஒரு லட்சம் வரையான பணம், உடைமைகள் திருடப்படுகின்றன என்றும் சன நெருக்கடியான பகுதி, குறைந்தளவு வேகத்தில் ரயில் பயணிக்கும் நேரங்களில் தான் அநேகமான திருட்டுக்கள் நடக்கின்றன என்றும் பயணிகள் தெரிவிக்கின்றனர். (ஜ-402)

## வவுனியா டிப்போ முகாமையாளர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா டிப்போ முகாமையாளர் திடீரெனப் பணிநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் உறுதிப்படுத்தினார். எனினும் பணி நிறுத்தத்துக்கான காரணம் பற்றித் தமக்கு ஏதும் தெரியாது. அது மத்திய சபை எடுத்த முடிவு என்றார்.

கடந்த மாதம் அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்க வருடாந்த மாநாட்டுக்கு குறித்த முகாமையாளர் சென்றிருந்தார். இதன்போது வவுனியா டிப்போவுக்குரிய பஸ் ஒன்று அனுமதி இன்றி அங்கு கொண்டு செல்லப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது எனினும் சம்பந்தப்பட்ட தரப்பினர் இதனை உறுதிப்படுத்தவில்லை.

இதேவேளை வவுனியா டிப்போவுக்குரிய பஸ்களுக்கு டீசல் ஒதுக்கீட்டில் ஏற்பட்ட நெருக்கடியில் அவை தனியார் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை நிரப்ப வேண்டி ஏற்பட்டது. இதன்போதும் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன என்றும்-

கோண்டாவில் டிப்போ பிரிவினர் வவுனியாவுக்கான வருமானத்தை உள்ளீர்த்துக் கொண்டதால் நெருக்கடி நிலை ஏற்பட்டது என்றும்-

இவ்வாறான பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்ததன் காரணமாகவே இவர் மீது வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பணி நீக்கம் செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ)

## செயலமர்வு ஒத்திவைப்பு

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கான இருநாள் செயலமர்வு பிற்போடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையும் கிளிநொச்சி மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து பிரதேசத்தில் உள்ள உணவு கையாளும் நிலைய உரிமையாளர்கள் மற்றும் உணவு பரிமாறுபவர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு தொடர்பான செயலமர்வுகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் இறுதிக் கட்ட செயலமர்வானது எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவிருந்தது.

இந்தச் செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது என்றும் இதில் கலந்து கொள்ளுமாறும் கரைச்சிப் பிரதேச சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரி வித்துள்ளார். (த-6)

## வன்னியில் வீதி விபத்துக்களை தடுப்பது குறித்து ஆராய்வு

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்காலத்தில் வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பொலிஸாரின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சியின் ஏ-9, ஏ-35 வீதிகள் மற்றும் கிராமிய வீதிகள் ஆகியவற்றில் இடம்பெற்று வரும் வீதி விபத்துக்களைத் தடுப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திர தலைமையில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் பொது மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், சிறிசெல்வம், கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி சுகததாச, கிளிநொச்சி மாவட்ட மக்கள் தொடர்பாடல் அதிகாரி அரிப்டின், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி பீரிஸ், வீதிப்போக்கு வரத்துப் பொலிஸ் அதிகாரிகள், இலங்கைப் போக்குவரத்துச் சபை அதிகாரிகள், தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் போக்குவரத்து திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-6)

## 107 விபத்துக்களில் 23 பேர் உயிரிழப்பு

### கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பதினொரு மாதங்களில் 107 வீதி விபத்துக்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வீதி விபத்துக்களால் உயிரிழப்போரின் தொகை அதிகரித்துக் காணப்படுகின்றது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 107 வீதி விபத்துக்கள் இந்த ஆண்டின் கடந்த 11 மாதங்களில் இடம்பெற்றுள்ளன.

இந்த விபத்துக்களில் 23 பேர் உயிரிழந்துள்ளனர். இதனைவிட பெறுமதியான வாகனங்கள், உடைமைகள் என்பவற்றுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மேற்படி விபத்துக்கள் கடந்த ஆண்டைவிட அதிகமாகவே காணப்படுகின்றன.

கடந்த 2011 ஆம் ஆண்டில் 96 விபத்துக்களே நிகழ்ந்துள்ளன. இவற்றில் 13 பேர் உயிரிழந்திருந்தனர்.

கடந்த ஆண்டைவிட பதினொரு விபத்துக்கள் மேலதிகமாக இடம்பெற்

**கடந்த ஆண்டைவிட பதினொரு விபத்துக்கள் மேலதிகமாக இடம் பெற்றுள்ள துடன் உயிரிழப்பு எண்ணிக்கையும் பத்தால் அதிகரித்துள்ளது.**

றுள்ளதுடன் உயிரிழப்பு எண்ணிக்கையும் பத்தால் அதிகரித்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலின்போது மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினால் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு சாரதிகள், பாதசாரிகள் ஆகியோரின் கவனயீனம் மற்றும் வீதிப் புனரமைப்புப் பணிகளின் போது கனரக வாகனங்களில் சிக்குண்டு ஏற்பட்ட விபத்துக்கள் ஆகியவற்றின் காரணமாகவே இந்த விபத்துக்களும் உயிரிழப்புக்களும் நிகழ்ந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

## மனித உரிமைகள் தின நிகழ்வு கிளிநொச்சியில்

கிளிநொச்சி,டிசெ.8

கிளிநொச்சியில் சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படவுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி மனித உரிமைகளுக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் அ.சத்தியானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் திருமதி விஜயராணி சதீஸ்குமாரும், கௌரவ விருந்தினர்களாக கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் நா.வை.குகராசா மற்றும் கிளிநொச்சி பங்குத் தந்தை வணபிதா [illegible] அன்ரன் [illegible] அடிகளாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-6)

## தென்பகுதி வியாபாரிகளை தடைசெய்யக் கோரிக்கை

புதுக்குடியிருப்பு,டிசெ.8

புதுக்குடியிருப்புப் பகுதியில் தென்பகுதி வியாபாரிகள் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு நடைபாதை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தென்பகுதியில் இருந்து வரும் வியாபாரிகள் பலரும் மலிந்த விலையில் தரமற்ற பொருள்களை விற்பனை செய்வதாகவும் அதனால் தமது தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு வியாபாரிகள் குற்றஞ்சாட்டப்படுகின்றனர்.

இதேவேளை இடம்பெயர்ந்து அகதிமுகாமில் தங்கியிருந்த வேளை தாம் வவுனியா நகர்ப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த போது வவுனியா நகரசபை தம்மை தடுத்து நிறுத்தியதாகவும் இதனடிப்படையில் தென்பகுதி வியாபாரிகளை முல்லைத்தீவில் ஏன் தடை செய்யக்கூடாது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதுகுறித்து புதுக்குடியிருப்பு பிரதேச சபை கவனம் எடுத்து தென்பகுதி நடைபாதை வியாபாரிகளைத் தடைசெய்து தமது தொழிலுக்கு வாய்ப்பு வழங்குமாறு கேட்டுள்ளனர். (ஜ-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருவாடு திருட்டு; இருவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.நகரப் பகுதியில் கருவாட்டுக் கடை ஒன்றில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுடன் சம்பந்தப்பட்ட சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சுன்னாகம் பகுதியில் கருவாட்டுக்கடை நடத்தும் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். நகரப் பகுதியில் உள்ள கருவாட்டுக் கடையில் இருந்து பெருந் தொகையான கருவாடு சில நாள்களுக்கு முன்னர் திருட்டுப் போயிருந்தது. இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-86)

## வீதியோரம் கடலுணவுகளை விற்பது குறித்து விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

நயினாதீவுப் பகுதியில் கடலுணவுப் பொருள்களை வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்வது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கடலுணவுகளை வியாபாரிகள் வீதியோரம் வைத்து வெட்டி விற்பனை செய்வதால் வீதியோரப் புழுதி மீன்களில் படிகிறது.

அத்துடன் மீன் கழிவுகளைத் தூக்கிச் செல்லும் பறவைகள் குடியிருப்புகளில் கிணற்றுக்குள் போட்டு விட்டுச் செல்கின்றன.

இதனால் இந்தப் பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது என்றும் மக்கள் கூறுகின்றனர்.

நயினாதீவு வடக்கு, தெற்கு பகுதிகளில் இரண்டு மீன் சந்தைகள் உள்ள போதும் இங்கு வைத்து விற்பனை மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

(ம-17)

## மெய்வன்மைப் போட்டிகளை பெப்ரவரிக்குள் நடத்த அறிவுறுத்து

தென்மராட்சி,டிசெ.8

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலைகளிலும் அடுத்த வருடத்துக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகளை 2013 பெப்ரவரி பத்தாம் திகதிக்கு முன்னர் நடத்தித்தகைமை பெறும் மாணவர்களின் விவரங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் மார்ச் மாதம் வலயமட்டப் போட்டிகளை நடத்தி மே மாதம் மாவட்டப் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து அதிபர்களையும் ஒத்துழைக்குமாறும் அறிவித்துள்ளார்.

(ம-9)

### வலி. தென்மேற்கு பிரதேச சபையின்

# 2013 வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிராகரிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.8

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சகல உறுப்பினர்களாலும் ஆட்சேபிக்கப்பட்டதை அடுத்து வாக்கெடுப்புக்கு விடாமலேயே ஏகமனதாக நிராகரிக்கப்பட்டுள்ளது.

தலைவரால் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு, செலவுத் திட்டத்தை நிராகரிப்பதற்கு ஆதரவு வழங்கிய தலைவர் புதிய வரவு, செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தொடர் கூட்டம் தலைவர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் கடந்த புதன் கிழமை நடைபெற்றது.

கடந்தமாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த தலைவர் ஆரம்ப உரை நிகழ்த்தியதை அடுத்து வரவு செலவுத் திட்டம் குறித்து ஏனைய உறுப்பினர்களும் உரையாற்றினர்.

சகல உறுப்பினர்களும் உரையாற்றுவதற்கு நேரம் போதாமையால் சபைக் கூட்டத்தை முடித்துக் கொண்ட தலைவர் வரவு செலவுத்திட்டம் பற்றிய விவாதத்தை அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைத்தார்.

ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் மீண்டும் 5 ஆம் திகதி புதன்கிழமை தலைவர் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர் உட்பட ஏனைய ஆளுங் கட்சி உறுப்பினர்களும் உரையாற்றியதை அடுத்து இறுதியாக ஆளுங்கட்சி உறுப்பினரான கே.கௌரிகாந்தன் உரையாற்றினார்.

கடந்த ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் சமர்ப்பிக் கப்பட்ட 30 வீதமான வேலைத்திட்டங்கள் இது வரை நிறைவேற்றப்படாத நிலையில் அடுத்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களின் கோரிக்கைகள் இது வரை நிறைவேற்றப்படவில்லை.

மக்களின் அபிலாஷைகள், எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. மக்களதும் உறுப்பினர்களதும் ஆலோசனையைப் பெறாமல் தலைவரால் மட்டும் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு-செலவுத்திட்டத்தால் மக்களுக்கு எந்தவித பயன்பாடும் கிடைக்கப்போவதில்லை. எனவே, இந்த வரவு-செலவுத்திட்டத்தை முற்றாக நிராகரிக்கின்றேன் என்று கூறினார்.

இவர் முன்மொழிந்த இந்தத் தீர்மானத்துக்கு எதிர்க் கட்சி உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்தனர். இதை அடுத்து 2013ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிராக ரிக்கப்பட்டுள்ளது.

தலைவரால் தயாரிக்கப்பட்டு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு-செலவுத்திட்டத்தை நிராகரிப்பதற்கு ஆதரவு வழங்கி தலைவர், உறுப்பினர்களின் கருத்துக்கு அமைய புதிய வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-115)

## மழையால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு உதவி



தென்மராட்சி, டிசெ.8

தென்மராட்சி பிரதேசத்தில் அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்டவர்களில் 100 குடும்பங்களுக்கு 'கியூமெடிக்கா' நிறுவனத்தால் உணவு மற்றும் உணவு அல்லாத சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்று விநியோகிக்கப்பட்டன.

அரிசி, மா, சீனி, பருப்பு, படுக்கை விரிப்பு, நுளம்பு வலை, லக்ஸ்பிறே பால்மா, நுளம்புத்திரி, மெழுகுதிரி, சவர்க்கார வகைகள், தீப்பெட்டி, சவர்க்காரப் பவுடர் உட்பட்ட பல பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

பிரதேச சமூக சேவைகள் அலுவலர் சு.வரதபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கியூமெடிக்கா நிறுவனப் பணிப்பாளர் வண. பிதா சாம்.ராஜசூரியர், நிறுவன வெளிநாட்டுப் பிரதிநிதி, உதவிப்பிரதேசசெயலர்சு.மோகனராஜ் ஆகியோர் பொருள்களை விநியோகித்தனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பகுதியில் மழை வெள்ளத்தின் போது வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வீட்டுக்குரிய மரங்களும் தகரங்களும் நேற்று குடத்தனையில் வைத்து வழங்கப்பட்டன என்றும் கூறப்புட்டது. (ம-9)

## பிடிபட்ட கட்டாக்காலி மாடு விவசாய சம்மேளனத்திடம்

### உரியவர் வராவிட்டால் ஏலத்தில் விடப்படுமாம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

இருபாலைப் பிரதேசத்தில் விவசாய நிலங்களில் பயிர்களை நாசம் செய்த கட்டாக்காலி மாடு ஒன்று விவசாய சம்மேளன கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளது.

அதனை உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளாதவிடத்து கமநல சேவைத் திணைக்களத்தின் ஊடாகக் குறித்த மாடு ஏலத்தில் விடப்படும் என்று விவசாய சம்மேளன செயலாளர் செ.மால்மருகன் தெரிவித்தார்.

இருபாலை ஜே/259 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தற்போது விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான காலப்பகுதிகளில் கால்நடைகள் விவசாய நிலங்களுக்குள் பிரவேசிப்பதால் பெரும் நஷ்டம் ஏற்படுகின்றது.

அத்துடன் காலநிலை சீரழிவாலும் ஏற்கனவே விவசாயிகள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் இவ்வாறு கால்நடைகள் வருவதாலும் மேலும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் காலப் பகுதிகளில் கால்நடைகளை வீட்டில் கட்டி வைத்து வளர்க்குமாறும், இல்லாவிடில் விவசாய நிலங்களுக்குள் புகும் கால்நடைகள் விவசாயிகளால் பிடிக்கப்பட்டால் உரியவர்கள் ஆதாரம் காட்டி தண்டம் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்தநிலையில் விவசாயிகளால் பிடிக்கப்பட்ட மாடு ஒன்று உரும்பிராய் கமநல சேவை நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டுமாறு கூறப்பட்டுள்ளது. (ம-5)



காரைநகர் பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா கடந்த திங்கட்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெற்றது.
பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் முதியவர் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கிறார். (ம-250)

## குடற்புழு நோய்த்தாக்கத்தை இல்லாது ஒழிக்க நடவடிக்கை

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் அதிகரித்து வரும் குடற்புழு நோயின் தாக்கத்தை இல்லாதொழிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் நாயகம் சகல சுகாதார நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளது.

குறிப்பாகக் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு குடற்புழு நோய் ஏற்படாதிருக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் அமுலுக்கு வரும் செயற்றிட்டம் 2017 டிசெம்பர் வரையான ஐந்தாண்டு காலப் பகுதியில் மேற்கொண்டு சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார் போன்றோருக்கு குடற்புழு ஏற்படாதிருக்க சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குடற்புழுவின் தாக்கத்தால் யாழ். மாவட்டத்தில் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நோயைக் கட்டுப்படுத்த தவறும் சிறுவர்கள், கர்ப்பிணிகள் இவ்வாறான நிலைமையை எதிர்கொள்ளும் அபாயம் உள்ளதாகவும் கூறப்பட்டது. (ம-9)

### வேலணை துறையூரில்

## தொழில் கூடங்களுக்கு சுற்றுமதில் அமைக்க நிதி

யாழ்ப்பாணம்,டிசெ.8

வேலணைதுறையூர் கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்பின் ஊடாக தொழில் கூடங்களுக்கு, சுற்று மதில் அமைப்பதற்கு 1.2 மில் லியன் ரூபா ஒதுக்கப்பட் டுள்ளது என்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறை உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தார்:

வேலணை துறையூரில் கிராமிய கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான ஐஸ்கட்டி தொழிற்சாலை, கருவாடு பதனிடும் தொழிற்சாலை ஆகியன அமைத்துள்ளன.

இந்தக் கட்டடங்களுக்கு பாதுகாப்பாகச் சுற்றுமதில் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கு அமைவாகவே இந்தச் சுற்றுமதில் அமைத்து கொடுக்கப்படவுள்ளது. கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சின் 2012 ஆம் ஆண்டு நிதியில் 26 மில்லியன் ரூபா ஒதுக் கப்பட்டது.

இந்த ஆண்டு 8 வேலைத் திட்டங்களான கரவெட்டி, சண்டிலிப்பாய், சங்கானை, நெடுந்தீவு, நெடுந்தீவு கிழக்கு, நல்லூர், பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் மீனவர்களுக்காக பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலதிகமாக வேலணை துறையூர் கடற்றொழில் சங்கத்துக்கு சுற்றுமதில் அமைத்துக் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைத்திட்டங்களில் இருந்து எஞ்சும் நிதியைக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.- எனத் தெரிவித்தார். (ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தங்களுடன் கூடிய லோக்பால் பிரேரணைக்கு அமைச்சரவை ஒப்புதல்

டில்லி, டிசெ.8

திருத்தங்களுடன் கூடிய லோக்பால் பிரேரணைக்கு பிரதமர் மன்மோகன்சிங் தலைமையிலான மத்திய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் வழங்கியது. லோக்பால் பிரேரணை லோக்சபாவில் கடந்த ஆண்டு இறுதியில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அரசுக்குப் பெரும்பான்மை இல்லாததால் ராஜ்யசபாவில் இந்தப் பிரேரணை நிறைவேற வில்லை.

அதைத்தொடர்ந்து எதிர்க்கட்சிகளின் கோரிக் கையை ஏற்று பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ள ராஜ்யசபா தேர்வுக் குழுவுக்கு லோக் பால் பிரேரணை அனுப்பி வைக்கப்பட்டது. அந்தக் குழுவும் தனது திருத்தங்களை கடந்த மாதம் ராஜ்ய சபாவில் தாக்கல் செய்தது. மாநிலங்கள் லோக்பால் அமைப்பு தேவை என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினால் மட்டுமே அது நடைமுறைக்கு வரும். (வ)



டில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் அம்பேத்கரின் 57ஆவது நினைவு தினம் கொண்டாடப்பட்டது. அதன்போது மக்களவை சபாநாயகர் மீராகுமார், பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே ஆகியோர் அம்பேத்கரின் உருவப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## பாபர் மசூதி தகர்ப்பு வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்துக

### உச்சநீதிமன்றம் உத்தரவு

டில்லி, டிசெ.8

பாபர் மசூதி தகர்ப்பு வழக்கை விரைந்து விசாரிக்க உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலி நீதிமன்றத்துக்கு உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

பாபர் மசூதி இடிப்பு வழக்கில் பாரதீய ஜனதாக் கட்சி தலைவர்களான எல். கே.அத்வானி, கல்யாண்சிங், உமா பாரதி, முரளி மனோகர் ஜோஷி, அசோக் சிங்கால், சாத்வி ரிதம்பரா மற்றும் மறைந்த பால்தாக்கரே உள்ளிட்டோர் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது. இந்த கூட்டுச் சதி வழக்கின் விசாரணையில் 2010 ஆம் ஆண்டு அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப் படாததால் இந்த வழக்கை ரேப்ரேலி நீதி மன்றம் கைவிட்டது. அல காபாத் உயர்நீதிமன்றமும் இதை உறுதி செய்தது.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. சார்பில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு மனு மீது நேற்று முன்தினம் உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது.

விசாரணையின் போது நீதிமன்றத்தில் மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சாண்டி கோக்முன்னிலையாகவில்லை. இதனை கடுமை யாகக் கண்டித்த நீதிபதி, ''இந்த வழக்கை அவ்வளவு சாதாரணமாக அவர் கருதுகிறாரா?''- என்றார்.

விசாரணையின் போது, பாபர் மசூதி தகர்ப்பு தொடர்பாக அத்வானி உள்ளிட்டோர் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்குமாறு ரேபரேலி நீதிமன்றத்துக்கு உச்சநீதி மன்றம் உத்தரவிட்டது. (வ)

# காஷ்மீரில் ராணுவ அதிகாரிகளின் மனித உரிமை மீறல்கள் அம்பலம்

### மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்டது

டில்லி, டிசெ.8

இந்திய நிர்வாகத்தில் உள்ள காஷ்மீர் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து பெரும் எண்ணிக்கையான இந்தியப் படையினரின் பெயர் விவரங்களை மனித உரிமைகள் அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.

இராணுவ உயர் அதிகாரிகளின் பெயர்கள் சிலவும் இதில் இடம்பெற்றுள்ளன. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 1989 ஆம் ஆண்டு ஆரம்பித்த ஆயுதப் போராட்டம் காரணமாகப் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப் பட்டுள்ளனர்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இராணுவமும் பொலிஸ்துறையும் தொடர்ந்து பல வன்செயல்களை செய்துள்ளதாக ஜம்மு காஷ்மீரில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்பு ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயாதீன சட்டநிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

சுட்டுக்கொலை செய்தல், ஆள்கடத்தல், சித்திரவதை மற்றும்பாலியல்வன்புணர்ச்சி ஆகிய குற்றங்களை உயர் இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரி கள் தொடர்ந்து செய்து வந்த தாக குற்றம் சாட்டப்பட்டி ருக்கிறது.

மேஜர் ஜெனரல், பிரிகேடியர், கேணல் போன்ற பதவிகளில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் குறித்த அறிக்கையில் இடம்பெற்றுள்ளனர். அவர்களில் பல அதிகாரிகள் தீவிரவாதத்துக்கு எதிராக போரிட்டதன் காரணமாக அரசால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்கள்- என்றுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அதிகாரப்பூர்வ தகவல்களைப் பெற்றும், பொலிஸாரின் அறிக்கைகள் மற்றும் உறவினர்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையிலும் இந்த அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது.

காணமற்போனோரின் பெற்றோர்களின் சங்கம் என்ற அமைப்பால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையில் 500 பேரின் பெயர்விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

குறித்த அறிக்கை தமக்கு கிடைக்கவில்லை என்று தெரிவித்த இந்திய இராணுவப் பேச்சாளர், இந்த அறிக்கையை ஆராய்ந்த பிறகே இது குறித்து தம்மால் கருத்துக் கூற முடியும் - என்றார். (வ)

### நேர்மையான வேட்பாளர்கள் இல்லாததால்

## கேஜ்ரிவால் கட்சிக்கு வாக்களிக்க மாட்டேன்



நேர்மையான வேட்பாளர்களை நிறுத்தாததால் கேஜ்ரிவால் கட்சிக்கு நான் வாக்களிக்கமாட்டேன்- என்று சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே தெரிவித்தார்.

வலுவான லோக்பால் பிரேரணைக்கு போராடி வரும் சமூக சேவகர் அன்னா ஹஸாரேயின் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தில் இருந்து பிரிந்த கேஜ்ரிவால் 'ஆம் ஆத்மி' என்ற பெயரில் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளார். இந்நிலையில், டில்லியில் நேற்று முன்தினம் கருத்தரங்கு ஒன்றில் ஹஸாரே தெரிவித்ததாவது:-

நேர்மையான வேட்பாளர்களை நிறுத்தினால் கேஜ்ரிவால் கட்சிக்கு வாக்களிக்கலாம் என்று முதலில் நினைத்தேன். ஆனால், ஏனைய கட்சிகளைப் போலத் தான் கேஜ்ரிவால் கட்சியும் செயற்படுகிறது. பணத்தின் மூலம் அதிகாரத்தையும், அதிகாரத்தின் மூலம் மேலும் பணத்தையும் அடைவதற்கான பாதையில் அந்தக் கட்சி செல்கிறது. அவரது கட்சிக்கு வாக்களிக்க மாட்டேன்.

கேஜ்ரிவால் தன்னலமில்லாமல் பணியாற்றுவதாக நினைத்தேன். ஆனால், அரசியலில் ஈடுபடும் ஆசை அவருக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. சுதந்திரத்துக்கு பின் முதல் முறையாக ஊழலுக்கு எதிராக எமது அமைப்பு முறையே மாற வேண்டும் என்று மக்கள் திரண்டனர். ஆனால், தனது பதவி ஆசை காரணமாக ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை கேஜ்ரிவால் உடைத்து அரசியல் கட்சி ஆரம்பித்துள்ளார். ஊழலுக்கு எதிரான புரட்சி முடியவில்லை- என்றார். (வ)

## தமிழகத்துக்கு தண்ணீர் திறந்த கர்நாடக அரசுக்கு கடும் எதிர்ப்பு

### கன்னட அமைப்புகள் போராட்டம்



பெங்களூர், டிசெ.8

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தமிழகத்திற்கு கர்நாடக அரசு, காவிரியில் தண்ணீர் திறந்து விட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு கன்னட அமைப்புகள், விவசாயச் சங்கங்கள் அந்த மாநிலத்தின் போராட்டத்தில் ஈடுபட்டன.

ஸ்ரீரங்கப்பட்டினத்தில் விவசாய சங்கத் தலைவர் கவுடா தலைமையில் காவிரி ஆற்றில் இறங்கி போராட்டத்தில் இறங்கிய விவசாயிகளை பொலிஸார் கைது செய்தனர். விவசாயிகளின் போராட்டத்தால் மாண்டியாவில் பாடசாலை மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அரச பஸ்கள் சேவையிலில்லை. கடைகளும் அடைக்கப்படும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. இதனிடையே பெங்களூரில் கன்னட ரட்சன வேதிகா அமைப்பினர் அந்த மாநில முதல்வர் ஜெகதீஷ் ஷெட்டர் வீட்டை நள்ளிரவில் முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தினர். இதனால் அந்தப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

பெங்களூரில் பன்னாட்டு விமான நிலையத்தையும் முற்றுகையிட முயன்ற கன்னட ரட்சன வேதிகா அமைப்பினர் 100 பேரை பொலிஸார் கைது செய்தனர். (வ)

## கூடங்குளம் திட்டத்தை நிறுத்தாவிடில் இந்தியா வந்தால் முற்றுகையிடுவோம்

### எதிர்ப்பாளர்கள் புடினுக்கு எச்சரிக்கை

கூடங்குளம் அணு உலை திட்டத்தை கைவிடா விட்டால் டில்லி வரும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை முற்றுகையிடுவோம் என்று கூடங்குளம் எதிர்ப்பாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கூடங்குளம் அணு உலைக்கு எதிராக தூத்துக்குடியில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் அணு உலை பிரச்சினையில் மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அணு உலைக்கு எதிரான மேற்படி போராட்டத்தில் பங்கேற்பதற்காக தூத்துக்குடி மாவட்டத்தில் பெரிய தாழை முதல் வேம்பார் வரையிலான கடலோர கிராமங்களில் மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

இதேபோன்று கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 48 கிராம மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லாததால் ஆயிரக் கணக்கான படகுகள் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன. (வ)

## உலகிலேயே சக்தி வாய்ந்தோர் பட்டியலில் 20 பேர்களில் மன்மோகன், சோனியா



உலகிலேயே அதிக சக்தி வாய்ந்தோர் பட்டியலில் 20 இற்குள் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும், சோனியா காந்தியும் இடம்பிடித்துள்ளனர்.


உலகிலேயே அதிக சக்தி வாய்ந்தவர்களுக்கான பட்டியலை ஃபோர்ப்ஸ் இதழ் ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறது. அதன் அடிப்படையில் இந்த ஆண்டு வெளியான பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முதலிடத்தில் உள்ளார். காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி 12ஆவது இடத்திலும், இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் 20 ஆவது இடத்திலும் உள்ளனர். உலகிலேயே சக்தி வாய்ந்த பெண்மணிகளின் பட்டியலில் சோனியா, 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

கடந்த ஆண்டு பிரதமர் மன்மோகன் சிங் இந்தப் பட்டியலில் 19 ஆவது இடத்தைப் பிடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்கா தாக்குதல்

## 3 பேர் சாவு




பாகிஸ்தானின் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்காவின் ஆளில்லாத உளவு விமானம் நேற்றுத் தாக்குதல் நடத்தியது. இதில் 3 தீவிரவாதிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலிபான் மற்றும் அல் குவைதா தீவிரவாத அமைப்புகளின் அரணாக வடக்கு வசிரிஸ்தான் பகுதி இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது. அவர்களை அங்கிருந்து வெளியேற்றத் தாக்குதல் நடத்த வேண்டும் என்றும் அமெரிக்கா பாகிஸ்தானை வலியுறுத்தியிருந்தது.

வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கா தொடர்ந்து விமான தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதல் பாகிஸ்தானின் இறையாண்மையை மீறும் செயல் என்று பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்தில் சூறாவளி

## 3 பேர் சாவு; 7 பேர் படுகாயம்

நியூஸிலாந்திலுள்ள ஒக்லாந்துப் பகுதியை நேற்று முன்தினம் திடீரென்று சூறாவளி தாக்கியது.

இதில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும் புதிதாக கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடம் இடிந்தது. இதில் சிக்கி 2 பேரும், மரம் விழுந்ததில் ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இடங்களில் மீட்புப்பணிகள் இடம்பெறுகின்றன.

# சீன நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து

## 17 பேர் சாவு; 6 பேர் படுகாயம்

சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர். 6 பேர் படுகாயமடைந்தனர்.


சீனாவின் தென்மேற்கே அமைந்துள்ள யுனான் மாகாணத்தில் உள்ள ஷங்சாங்க் நிலக்கரிச் சுரங்கத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்டபோது சுரங்கத்துக்குள் 66 தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சுரங்கத்துக்குள் அதிகளவில் பரவி நின்ற எரிவாயு காரணமாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் 17 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். ஏனையோர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

விபத்து ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்கத்தின் உரிமையாளரையும், நிர்வாகியையும் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீழ்ந்தது விமானம்

## தென்னாபிரிக்காவில் 11 பேர் சாவு



தென்னாபிரிக்காவில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 11 பேர் உயிரிழந்தனர்.

தென்னாபிரிக்கா பிரிடோரியாவில் இருந்து ததா நோக்கி 11 இராணுவ வீரர்களுடன் பயணித்த விமானமே விபத்துக்குள்ளானது.

''கடந்த புதன்கிழமை காலை பிரிடோரியா விமானத் தளத்தில் இருந்து விமானம் புறப்பட்டது. மலைப் பகுதி வழியாக பறந்த போது, விமானம் மோசமான வானிலை காரணமாக விபத்தில் சிக்கியுள்ளது. தரையிறங்கும் தறுவாயிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

வியாழக்கிழமை காலை மீட்புப் பணியாளர்கள் விபத்துக்குள்ளான விமானத்தைக் கண்டுபிடித்தனர். டிராக்கன்ஸ்பேர்க் மலைத்தொடரில் இந்த விபத்து ஏற்பட்டது. இதில் பயணித்த அனைவரும் உயிரிந்து விட்டனர்'' என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

# படகு பழுதடைந்ததால் தத்தளித்த 128 பேர்

## ஒரு வாரத்தின் பின்னர் மீட்கப்பட்டனர்



படகு பழுதடைந்ததால் ஒரு வாரமாகக் கடலில் தத்தளித்த 128 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் மியன்மாரைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மியன்மாரில் இருந்து கடந்த 25 ஆம் திகதி படகுப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர். மலேசியாவுக்குக் தப்பிச் செல்வதே இவர்களின் நோக்கமாக இருந்தது. படகில் 128 பேர் பயணத்தைத் தொடர்ந்தனர். இவர்களில் 4 பெண்கள் மற்றும் 9 குழந்தைகள் அடக்கம்.

பயணத்தில் இடை நடுவே படகின் இயந்திரம் பழுதடைந்துள்ளது. பயணத்தைத் தொடர முடியாது நடுக்கடலில் தத்தளிக்க ஆரம்பித்தது படகு. 128 பேருடன் படகு ஒரு வாரமாகக் கடலில் தத்தளித்தது. படகு நீரோட்டத்துடன் அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் ஒன்றான நார்கொண்டம் நோக்கி இழுத்துச் செல்லப்பட்டது.

இதுகுறித்துத் தகவல் அறிந்த இந்தியக் கடற்படை, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 128 பேரையும் காப்பாற்றினர். இவர்கள் தற்போது நார்கொண்டம் தீவில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.



'போபோ' புயலால் உயிரிழந்த உறவினர் ஒருவரின் உடலை அடக்கம் செய்ய கரைபுரண்டோடும் வெள்ளத்தைக் கடக்கும் உறவினர்கள். பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'போபோ' புயல் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 475 ஆக உயர்ந்துள்ளது. 400 இற்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர்.

## இந்த நிலை வந்தது ஏன்...?



# முர்சியைப் பாதுகாக்க முட்கம்பி வேலி; டாங்கிகள்

எகிப்து ஜனாதிபதியின் மாளிகையைச் சுற்றிவர இராணுப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் டாங்கிகள் சகிதம் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

எகிப்து ஜனாதிபதி முர்சியின் அதிகாரக் குவிப்பைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

அங்கு ஜனாதிபதியின் ஆதரவாளர்களும் கூடியதால் இருதரப்புகளுக்கு இடையே மோதல்கள் ஏற்பட்டன. இதில் மூவர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

இதையடுத்து ஜனாதிபதி மாளிகையைச் சூழ இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மாளிகைக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் இராணுவத்தினரால் மூடப்பட்டுள்ளன.

# சர்வதேச நாடுகள் உதவ வேண்டும்

## பிலிப்பைன்ஸ் கோரிக்கை

'போபோ' புயல் தாக்கத்தால் பாதிக்கப்படவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளில் சர்வதேச நாடுகள் உதவ வேண்டும்" - என்று பிலிப்பைன்ஸ் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'போபோ' புயலில் சுமார் இரண்டு லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 475ஆக உயர்ந்துள்ளது என்று அரசு உறுதிப்படுத்தியுள்ளது. இந்தநிலையிலேயே நிவாரண நடவடிக்கைகளில் சர்வதேச நாடுகள் உதவ வேண்டுமென அந்தநாட்டு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

### தேசிய அரசு அமைப்பது தொடர்பில்

# நேபாளக் கட்சிகளிடையே நீடிக்கிறது இழுபறி நிலை

நேபாளத்தில் தேசிய அரசு அமைப்பதற்கு ஜனாதிபதி விதித்த காலக்கெடு முடிவடைந்த நிலையில் தொடர்ந்து அந்த விடயத்தில் இழுபறி நீடிக்கிறது.

நேபாளத்தில் அரசமைப்புச் சட்டத்தை திருத்தி அமைக்கக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு இடையே கருத்தொற்றுமை ஏற்படாததால், காலக்கெடுவுக்குள் புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்படவில்லை. இதையடுத்து, அரசு பதவியில் நீடிக்க முடியாமல் போனது.


இந்தநிலையில், புதிய அரசியல் சட்டத்தை ஏற்படுத்துவதற்கும், தேசிய அரசு அமைப்பதற்கும் ஆளும் மாவோயிஸ்ட் கூட்டணி மற்றும் எதிர்க்கட்சியான நேபாளி காங்கிரஸ் கூட்டணி ஆகியவற்றுக்கு நேற்றுமுன்தினம் வரை ஜனாதிபதி கால அவகாசம் கொடுத்திருந்தார்.

ஆனால், காலக்கெடு முடிவடைந்த நிலையில் தேசிய அரசு அமைப்பதில் இழுபறி நிலை நீடிக்கிறது. கடைசியாக நேற்று நடந்த கூட்டத்திலும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதையடுத்து, காலக்கெடுவை ஜனாதிபதி மேலும் சில நாள்களுக்கு நீடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# தலாய் லாமாவுடன் நிபந்தனையற்ற பேச்சுகளை உடன் ஆரம்பியுங்கள்

## சீனாவை வலியுறுத்துகிறது அமெரிக்கா



திபெத் பிரச்சினைக்கு தீர்வு காண தலாய் லாமாவுடன் சீன அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

சீனகட்டுப்பாட்டில் இருந்து திபெத்தை விடுவிக்க வேண்டும் என்று திபெத்திய மக்கள் போராடி வருகின்றனர். சமீபகாலமாக இந்தப் போராட்டங்களில் ஏராளமானோர் தீக் குளித்து உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், திபெத்திய பிரச்சினைக்கான அமெரிக்க சிறப்பு ஒருங்கிணைப்பாளர் மரியா ஒட்டேரோ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"திபெத்தியர்கள் தொடர்ந்து தீக்குளிக்கும் சம்பவங்களைத் தடுக்க புத்த துறவி தலாய் லாமாவுடன் சீன அரசு நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்துகிறது. திபெத்தியர்களின் மதச் சுதந்திரம், கருத்து சுதந்திரம் என்பவற்றைச் சீனா ஒடுக்குவதால் தான் இத்தகைய சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே, திபெத்திய பகுதிகளில் மக்கள் கருத்துகளை அறிந்துகொள்ள பத்திரிகையாளர்கள், பிறநாட்டு தூதுவர்கள் மற்றும் பார்வையாளர்களை சீன அரசு அனுமதிக்க வலியுறுத்துகிறோம்.'' - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அசாத்துக்கு அடைக்கலம் கொடுக்க மத்திய கிழக்கு நாடுகள் தயார்

## அமெரிக்கா தெரிவிப்பு

நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வரும் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு அரசியல் அடைக்கலம் தருவதற்கு மத்திய கிழக்கு நாடுகள் சில முன் வந்துள்ளன என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர் தெரிவித்ததாவது:-

''பஷார் அல் அசாத்தும் அவரது குடும்பத்தினரும் சிரியாவை விட்டு வெளியேறினால், அவர்களுக்கு அரசியல் அடைக்கலம் கொடுப்பதற்கு மத்திய கிழக்கு நாடுகள் சிலவும், லத்தீன் அமெரிக்க நாடுகளும் சம்மதித்துள்ளன.



எனினும், இதுகுறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. அசாத் தோல்வியை தழுவ இருக்கிறார் என்பதை அவருடன் இருப்பவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். அசாத்தின் செயற்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு, மக்களின் பக்கம் உயரதிகாரிகளும், இராணுவத்தினரும் இருக்க வேண்டும்.''- என்று தெரிவித்தார்.

சிரிய ஜனாதிபதி அசாத்துக்கு அரசியல் அடைக்கலம் கொடுக்க டுனிசியா ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ளது. தற்போது அரபு நாடுகள் சிலவும் அசாத்துக்கு அடைக்கலம் கொடுக்க முன்வந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்தின் செய்தித்தொடர்பாளர் ஜிகாத் மக்திஸ்ஸி சிரியாவில் இருந்து வெளியேறி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மக்திஸ்ஸி, தற்போது லண்டனில் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.



பாகிஸ்தானின் இக்ரா பல்கலைக்கழக மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட ஆடை அலங்கார அணிவகுப்பு நிகழ்வில், வடிவமைக்கப்பட்ட ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

# பெனாசீர் கொலை தொடர்பான விவரங்களை வெளியிடலாம்

### பாக். அரசுக்கு நீதிமன்று அனுமதி

முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொலை வழக்குத் தொடர்பான விவரங்களை வெளியிடுவதற்கு யாருடைய அனுமதியையும் பாகிஸ்தான் அரசு பெற வேண்டியதில்லை என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராவல்பிண்டியில் உள்ள பயங்கரவாத எதிர்ப்பு நீதிமன்றம் இது தொடர்பான உத்தரவை பிறப்பித்துள்ளது.

பெனாசீர் பூட்டோ கொலை வழக்கில் திரட்டப்பட்டுள்ள தகவலகள், புலனாய்வு மற்றும் வழக்கு விசாரணை நடைமுறைகள் என்பவற்றைப் பாகிஸ்தான் அரசு பகிரங்கப்படுத்தலாம். அதற்கு யாரிடமும் அனுமதி பெற வேண்டியது இல்லை என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.

அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதால், பெனாசீர் கொலை தொடர்பான விவரங்களை வெளியிடுவதற்கு ஆளும் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சி விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெனாசீர், 2007ஆம் ஆண்டு தேர்தல் சுற்றுப்பயணத்தின் போது, தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

பெனாசீருக்கு உரிய பாதுகாப்பு வழங்கத் தவறியமைக்காக, பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் அறிவிக்கப்பட்ட குற்றவாளி அல்லது நாட்டை விட்டுத் தப்பியோடியவர் என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வெள்ளை மாளிகையில் ஒளிவிளக்கு....



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் குடும்பத்தினர் கிறிஸ்மஸை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் உருவாக்கப்பட்ட தேசிய கிறிஸ்மஸ் மரத்தின் விளக்குகளை ஒளிரச் செய்தனர்.

# 10 குழந்தைகள் பெற்று 'சாதனை' புரிந்தார் சீனர்

### ஆனால் பறிபோனது அரசியல் பதவி

நான்கு பெண்களைத் திருமணம் செய்து, 10 குழந்தைகளுக்கு தந்தையானதால் சீன அரசியல்வாதி ஒருவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.


சீனா, சியோடியான் மாவட்டத்தின் மக்கள் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக இருந்தவர் லீ ஜு வென். இவருக்கு 3 மனைவிகள். அவர்கள் மூலம் 9 குழந்தைகளுக்கு தந்தையானார் வென்.

இந்தநிலையில், நான்காவதாகவும் ஒருவரைமணம்முடித்தார் வென். கடந்த ஆண்டு நான்காவது மனைவிக்கும் குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தையைப் பதிவு செய்ய முயன்ற போதுதான் வென்னுக்கு பிரச்சினை ஏற்பட்டது. இவரின் இந்த விடா முயற்சிக்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சீனாவில் ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ளக்கூடாது என்ற சட்டம் நடைமுறையில் உள்ளது. ஆனால் வென் சட்டவிதிகளை மீறி 10 குழந்தைகளுக்குத் தந்தையானார். அதனால் அவர் கட்சி மற்றும் கிராம நிர்வாக குழு பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 * 11 * 1938



மறைவு 08 * 11 * 2012

## அமரர் அம்பலவாணர் திருஞானசம்பந்தன்

அன்பிற்கு அணிசேர்த்து
பண்புடனே பவனிவந்து
பாசமுடன் எமை வழிநடத்தி
பார்த்திருந்த பாசமுகம்
காணாமல் ஏங்குகின்றோம்
அப்பா! உங்கள் பிரிவுத்துயர்
தாங்காமல் தவிக்கின்றோம்!
இறைவனிடம் சாந்திபெற
அனுதினமும் வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.31, மணல்தரை லேன்,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

(சி/3052) (45.6.7)



# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும்

மலர்வு
15.12.1924



உதிர்வு
08.11.2012

## திருமதி தெய்வேந்திரம் பொன்னம்மா

கடந்த (08.11.2012) அன்று எமது அன்புத் தாயார் இறைபதம் எய்தியதை அறிந்து நேரில் வந்தவர்களுக்கும், இரங்கல் செய்தி அனுப்பியவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (08.12.2012) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பாசமழை பொழிந்து பாரினில் எமை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம்
என்றும் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

பத்தானை வீதி,
[illegible] தெற்கு,
கொக்குவில்.

திரு. திருமதி சுசீலாதேவி திருச்செல்வம்

(26414)(45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்த்தப்படாத சம்பூர் மக்களின் இயல்பு வாழ்வு திரும்ப ஆவன செய்யுங்கள்

## திருமலை அரச அதிபரிடம் கோரிக்கை

சம்பூர், டிசெ.8

சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்து இன்றுவரை மீள்குடியமர்த்தப்படாத மக்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப ஆவன செய்வதுடன் அதுவரை அவர்களுக்கான உலர் உணவுப்பங்கீடு உட்பட அடிப்படைத் தேவைகளுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருகோணமலை அரச அதிபரிடம் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் கு.நாகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் அரச அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

சம்பூர் பிரதேசத்தில் இருந்து 2006 இல் இடம்பெயர்ந்து இன்று வரை குடியேறப்படாமல் நலன்புரி நிலையங்களிலும் நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்து வாழும் மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் பற்றி தங்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

ஏழாவது வருடமாகவும் தங்களின் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப முடியாத குறித்த மக்களது அடிப்படைத் தேவைகளுக்கான உதவிகள் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு வந்து அந்த உதவிகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு இறுதியில் முற்றாகவே நிறுத்தப்பட்டுவிட்டன.

### 1000 ரூபா கொடுப்பனவு

பத்து மாதங்களின் பின்னர் இம்மாத ஆரம்பத்தில் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல் ஆகிய நலன்புரி நிலையங்களில் 446 குடும்பங்களுக்கு மட்டும் மூதூர் பிரதேச செயலகத்தினூடாக 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இதிலும் கட்டைப்பறிச்சானில் தனியார் காணிகளில் தங்கவிடப்பட்டுள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை அத்துடன் மூதூர் பிரதேச சபை எல்லைக்குள் முகாமுக்குள் வெளியே தங்கியிருந்தவர்களும் இணைக்கப்படவில்லை.

சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, கூனித்தீவு, நவரெத்தினபுரம் கடற்கரைச்சேனை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 1224 குடும்பங்கள் இடம்பெயர்ந்த குடும்பங்களாக மூதூர் செயலக பிரிவுக்குள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் கிளிவெட்டி, மணற்சேனை, பட்டித்திடல் முகாம்களிலும் இம்முகாம்களில் இடவசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் நண்பர், உறவினர் காணிகளிலும் தங்கியுள்ளனர்.

அவர்களில் 115 பேர் அரச ஊழியர்கள் 28 பேர் ஓய்வூதியம் பெறுவோர். ஏனைய 1077 குடும்பங்களும் தமது அன்றாட வாழ்வுக்காய் போராடுகின்றனர். எனவே அரச ஊழியர்களைத் தவிர்த்து அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கக்கூடியதாக உலர் உணவுப் பங்கீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அரசால் சுவீகரிக்கப்பட்டுள்ள காணியை விடுத்து எஞ்சிய பகுதிகளில் வாழ்ந்த மக்களையேனும் குடியேற்றும் பட்சத்தில் இந்நிவாரண உதவியை பெற்றுக்கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது சாத்தியமாகும்.

சுவீகரிக்கப்பட்ட காணிக்கு வெளியே உள்ள சம்பூர் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ள விவசாய நிலங்கள் அனைத்தையும் குறித்த மக்கள் விவசாயம் செய்ய அனுமதிக்கும் பட்சத்திலும் அவர்களுக்கான உணவுப்பங்கீட்டை நிறுத்துவதால் பாதிப்பு ஏற்படாது.

எனவே இவ்விடயங்களைப் பரிசீலித்து மேற்படி மக்கள் தமது எஞ்சியுள்ள இருப்பிடங்களுக்கேனும் சென்று தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்ப ஆவன செய்வீர்கள் என்று எதிர்பார்ப்பதுடன், அதுவரை அவர்களுக்கான உலர் உணவுப்பங்கீடு உட்பட அடிப்படைத் தேவைகளுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்-என்றுள்ளது. (வ)


## காரைதீவு பெண்கள் பாடசாலையில் புலமையாளர்களுக்கு கௌரவிப்பு

விழாவில் புலமையாளர்கள் பரிசில் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

அம்பாறை காரைதீவு இராமகிருஷ்ணமிசன் பெண்கள் பாடசாலையின் புலமையாளர் கௌரவிப்பு விழா பாடசாலையின் சாரதா கலாலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை . அதிபர் எஸ்.மணிமாறன் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆலையடிவேம்பு இந்து மாமாமன்ற தலைவர் வி.சந்திரசேகரம், நிறைவேற்றுப் பொறியியலாளர் ப.இராசமோகன், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் பரதன், கந்தசாமி ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

மேற்படி விழாவில் புலமையாளர்கள் பரிசில் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.




தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் 2011 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்புமாத பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கொழும்பிலுள்ள இலங்கை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதன்போது திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை நகரசபையின் பொது நூலகத்துக்கு சிறந்த செயற்பாட்டுக்கான விருது வழங்கப்பட்டது. அதற்கான விருதை நூலக மேற்பார்வையாளர் பா.விஜிதன் பெறுகின்றார். (40)

## கொய்யாப்பழம் பறித்த மாணவன் மரத்திலிருந்து தவறிவீழ்ந்து சாவு

கிண்ணியா, டிசெ.8

கொய்யாப் பழம் பறித்துக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் தவறி வீழ்ந்து உயிரிழந்த பரிதாபச் சம்பவம் கிண்ணியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கிண்ணியா அண்ணல் நகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா அண்ணல் நகர் பகுதியில் உள்ள கிண்ணியா அல்-அதான் வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி பயிலும் முஹமட் அஸ்மீர் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் நேற்று முன்தினம் அதி காலை தனது தந்தையுடன் சுபஹ் தொழுகையை முடித்து விட்டு வந்து கொய்யா மரத்தில் பழம் பறித்துக் கொண்டிருந்த போதே தவறி வீழ்ந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## அட்டாளைச்சேனை வித்தியாலய விளையாட்டு மைதானம் திறப்பு



அட்டாளைச்சேனை அல்-அர்ஹம் வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தின் திறப்பு விழாவும் செழிப்பின் களிப்பு விழா கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

கிழக்கு மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டில் மேற்படி மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் எம்.ஏ. அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பிரதேச செயலாளர் ஐ.எம். ஹனிபா, வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். ஹாசிம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் ஏ.சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (வ)

# அரச பயங்கரவாதம், அட்டூழியங்கள் மக்களின் அமைதி வாழ்வுக்கு குந்தகம்

## கூட்டமைப்பின் கிழக்குப் பிரமுகர் குணசேகரம் பேச்சு

அம்பாறை, டிசெ.8

அரச பயங்கரவாத அநியாயங்கள், அட்டூழியங்கள் மக்களின் அமைதி வாழ்க்கைக்கு குந்தகம் விளைவித்து வருகின்றன. இத்தகைய நிலைமைகள் தொடரக் கூடாது. சொந்த மண்ணில் உரிமை பெற்று வாழும் சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாறவேண்டும்-

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை வேட்பாளருமான குணசேகரம் சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை விவேகானந்தா தமிழ் வித்தியாலய முன்பள்ளிப் பாடசாலை சிறுவர் நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய மாணவர் சமுதாயம் நாளைய நற்பிரஜைகளாக உருவாக்கப்படுவதுடன் அவர்கள் வெறும் புத்தகப்பூச்சிகளாக மட்டுமல்லாது சமூகங்களின்பால் அக்கறையும், சீராக வழி நடத்தக்கூடிய தலைமைத்துவப் பண்புகளுடன் செயற்படத் தக்கவர்களாகவும் வழிகாட்டப்படல்வேண்டும்.

எம் மண்ணைப் பாதுகாப்பவர்களாகவும், நம் சமூகங்களின் உரிமைகளைப் பற்றி உரத்துப் பேசி அத்தகைய உரிமைகளை வென்றெடுக்கக் கூடியவர்களாகவும் அவர்கள் எதிர்காலத்தில் திகழவேண்டும்.

இன்று மூன்று தசாப்த கால போர் முடிவடைந்து நாட்டை அமைதிப் பூங்காவாக மாற்றியிருப்பதாக அரசு மார்தட்டுகின்ற போதிலும் தமிழ் மக்களின் அவலங்களும், துயர வாழ்க்கையும் தொடர்கின்றன. குறிப்பாக வடக்கில் மக்களினதும், கல்விச் சமூகத்தினதும் ஜனநாயக உரிமைகள், ஜனநாயகச் செயற்பாடுகள் நசுக்கப்பட்டே வருகின்றன. அண்மையில் யாழ்.பல்கலைக் கழக வளாகத்தில் மாணவர்கள், மற்றும் 'உதயன்' நாளிதழின் ஆசிரியர், நிர்வாக இயக்குநரது வாகனம் மீது மேற்கொள்ளப்பட்ட வேண்டத்தகாத தாக்குதல் சம்பவங்கள் இதற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. அரசு தனது நச்சுப் பற்களைப் பாதுகாப்பு தரப்பினர் மூலம் பாய்ச்சி பல்கலைக் கழக மாணவர்களதும், பொது மக்களதும் ஜனநாயகச் செயற்பாடுகளை அடக்கி, ஒடுக்க [illegible] யாகும்-என்றார். (வ-30)

# திருமலையில் விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு உபகரணங்கள்



திருகோணமலை, டிசெ.8

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட இளைஞர் அபிவிருத்தி அகம், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்துடன் இணைந்து மேற்படி நிகழ்வை ஏற்பாடு செய்தது.

'அகம்' நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் க.லவகுமார் தலைமையில் திருகோணமலை குளக்கோட்டன் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ரி.ரி. ஆர்.டி. சில்வா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். மேலும் பிரதேச செயலாளர் திருமதி எஸ்.ஜலதீபன், கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் ந.மணிவண்ணன், கிழக்குப் பிராந்திய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் முகாமையாளர் மார்க் பட்டிசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாற்றுத் திறனாளிகளின் பாவனைக்கென பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டன. (வ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்கின்றோம்

கடந்த (23.11.2012) வெள்ளிக்கிழமை
இரத்தினக்குருக்கள் நாகேஸ்வரசர்மா
அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு மிக்க வேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய மானிப்பாய் சாத்தாவத்தை ஞானவைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

முத்தத்தம்பி வீதி, மானிப்பாய். — தைப்பூச உபயகாரர், உதயராசா செல்வலதா குடும்பம்.

(26445) (6.2.1)

## ஓராண்டு நினைவு தினம்



மலர்வு 10.05.1953

உதிர்வு 20.11.2011

### அமரர் வேலாயுதம் பொன்னுத்துரை

எங்கள் குடும்ப ஒளி விளக்கே
ஆண்டொன்று ஆகியதோ ஒரு நொடியில்
தலைமை தாங்கி வழி நடத்தி
எமை வாழ்வாங்கு வாழ வைத்தீரே
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டதேனோ?

மாவியந்திடல், புலோலிதெற்கு.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் மனைவி, மகன்மார், உறவினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

நிஜமாக 26.11.1941



நினைவாக 08.11.2012

### திருமதி மேரிதிரேசா லீனஸ்

இல்லறத்தின் நல்லறமாய் பாசமுள்ள மனைவியாய்
அன்பான தாயாய் எமைப் பெற்று
கண்மணிபோல் காத்து பார்போற்ற நாம் வாழ
பக்குவமாய் ஆளாக்கி நோயுற்ற போதும்
தளராது அன்பான உறவுகள் கதறியழ
படைத்தவன் இயேசு பாதம் சேர்ந்தீரோ!

எங்கள் அன்புத் தெய்வத்தின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியோர், மலர்கள், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், குருக்கள், கன்னியாஸ்திரிகள் அனைவருக்கும் மற்றும் எமது தாயாரின் உடல் நலக்குறைவின்போது அன்னாரை பராமரித்த வைத்தியர்கள், தாதிகள், பரிசாரகர்கள் அனைவருக்கும் எமது இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவரின் 31 ஆம் நாள் நினைவாக ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று (08.12.2012) சனிக்கிழமை காலை 8 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

புனித யாகப்பர் வீதி, ஊர்காவற்றுறை.
தொ.பே. 021 321 9113 (26483)(45.6.7)

தங்கள் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## அங்குரார்ப்பண நிகழ்வு

2012 ஆம் ஆண்டு மார்கழி 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை (11.12.2012) முற்பகல் 10 மணிக்கு "மன்னாரின் புதிய உதயமாக" மன்னார் மாவட்ட **"சிறீலங்கா சுதந்திரக் கட்சி"** தலைமைக் காரியாலயம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- நிர்வாகக்குழு,**
மன்னார் மாவட்ட சிறீலங்கா சுதந்திரக்கட்சி.

(26494) (6.2.7)

சங்கீத பூஷணம், கலாபூஷணம்

### லயனல் திலகநாயகம்போல் அவர்களின் மூவாண்டு நினைவொளியில்...!

## இசை ஆராதனை



ஆண்டவனுக்கென்ன அவசரமோ?
ஆன்மீகக் கவின் குரலை அருகணைத்து
ஆசையுடன் செவிமடுக்க விழைந்தனரோ?
ஆண்டு மூன்றாக அவன் திருவடி நிழலில்
ஆற்று வெள்ளமாய் அமுதம் பொழிந்தனையோ?
ஆரார் இருந்தென்ன அமரனே! திலகனே!
ஆருயிராய் நும் குரலொன்றே தான்
ஆறுதலாய் இருந்தெமக்கு என்றென்றும் வழிகாட்டும்!.

நாளை (09.12.2012) ஞாயிறு காலை 9.00 மணிமுதல் நாவலர் கலாசார மண்டபத்தில் "நானே இதற்கு நாயகமே" நூலும் "திலகன் இசை வேள்வி" காணொளியும் வெளியிடப்படும்.

யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்குண்டு

இளவாலைச் சந்தியில் இருந்து 400 மீற்றர் தூரத்தில் மானிப்பாய் இளவாலை வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 3151 723

## விற்பனைக்கு

2 மாதம் நிரம்பிய ஜெர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777353957

## விற்பனைக்கு

நல்ல இன ஆட்டுக்கடாக்கள் இரண்டு (7மாதங்கள்) மற்றும் ஒரு கைப் பாவனையிலுள்ள M.D90 HONDA மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. (26440) (6.7.4)
தொடர்பு: 07798 65 761

## வாகனம் விற்பனைக்கு

HA- xxxx தொடர் இலக்கம் கொண்ட புதிய Model town AC விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777571915

## காணி விற்பனை

கோண்டாவில் பலாலி வீதியில் இலங்கை போக்குவரத்துசபை டிப்போவின் தெற்குப் பக்க மதிலை எல்லையாகக் கொண்ட மூன்று பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0789727617 (26496) (6.4)

## வைத்திய சேவை

R.M.P அல்லது Russian M.D தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 0777750391

## காணி விற்பனை

பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, சுன்னாகத்தில் (நாகம்ஸ் திரை அரங்குக்கு அருகில்) பிரதான வீதியில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஆறு பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 222 468, 0777 222 467

## விற்பனைக்கு உண்டு

Hero Honda Duluxe XB - xxxx என்ற தொடர் இலக்கத்தை உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778704362, 0773549811

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 4 ,5 இற்கான புலமைப் பரிசில் வகுப்பு தரம் 6 -11 வரையான கணித வகுப்புக்கள் பிரபல ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 072 806 5351

## வெளியீடு

திருகோணமலை ஆலடி விநாயகர் தேவஸ்தானம் வெளியிட்ட இறுவட்டு 150/=
திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் பாடியது.
பிள்ளையார் கதை C.D
தொடர்பு: முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், திருநெல்வேலி.

## மணமகள் தேவை

*69 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 24 பாவம் உடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்று எக்கவுண்டனாக பணிபுரியும் மணமகனுக்கு ஆங்கில அறிவுள்ள மணமகள் தேவை.

*81 இல் பிறந்த செவ்வாய் இல்லாமல் சூரியனும் செவ்வாயும் உடைய 15 ¼ பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

* 82 இல் பிறந்த 7 இல் செவ்வாய் இல்லாமல் 24 பாவம் உடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

*78 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல், 24 பாவம் உடைய பிரான்ஸ் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.

இல.435/3, கோயில் வீதி நல்லூர். நாலங்கன்னான் திருமண சேவை. தொடர்பு: 077 60 70862



## தூதரக பரீட்சைகளுக்கான German - டொச், Netherland - டச், French, Italian மற்றும் ஆங்கிலம் AI புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன

★ அரசாங்கப் பதிவு பெற்ற கல்வி நிறுவனம்
★ (German Cultural Centre) ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணை பெற்றது.
★ முற்றிலும் குளிரூட்டப்பட்ட நவீன வகுப்பறைகள்
★ சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள்.

(26430)(2.6)
Gov.Reg.No - 76795
Vivekananda Academy, 221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 321 6928, 077 4842464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலன்னாவை நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் திடீர் சாவு

கொழும்பு,டிசெ 8

கொலன்னாவை நகரசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சந்திரசிறி டயஸ் (வயது-68) நேற்று வெள்ளிக்கிழமை காலை காலமானதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர் சபையில் உரையாற்றுவதற்காக எழுந்துநிற்க முற்பட்டபோது, மயங்கி விழுந்தார். அதனை அடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்து காணப்பட்டார். இவரின் உயிரிழப்புக்கான காரணம் இன்னும் தெரியவரவில்லை. (த)

## ஆறு வயதுச் சிறுவன் லொறி மோதிச் சாவு

### சாரதி மீது மக்கள் தாக்குதல்

கொழும்பு,டிசெ 8

கொழும்பு - குருநாகல் பிரதான வீதியில் வரக்காபொல நாரங்கல்ல முஸ்லிம் வித்தியாலயத்திற்கு அருகில் லொறியொன்று மோதிச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் மஞ்சள் கோட்டின் ஊடாக வீதியைக் கடக்க முயற்சித்த போது நேற்றுக் காலை 9.35 அளவில் லொறி சிறுவன் மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் வரக்காப்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுவன் 6 வயதுடைய மொஹமட் நியாஸ் அப்துல் ஹுசேன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சிறுவன் மீது மோதிய லொறி அநுராதபுரம் ரயில் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விபத்தை அடுத்துச் சாரதி பொது மக்களால் தாக்கப்பட்டுக் கடும் காயங்களுடன் பொலிஸ் பாதுகாப்பில் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வரக்காப்பொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த மாணவன் இரட்டைப் பிள்ளைகளில் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் 33 எலும்புக்கூடுகள் இதுவரை மீட்பு

மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலிருந்து இதுவரையில் 33 மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை வைத்தியசாலையின் உயிரியல் வாயுப் பிரிவுக்காக அத்திவாரக் கிடங்கு தோண்டும் நடவடிக்கை கடந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக் கப்பட்டது. அன்று முதல் இன்றுவரையில் 33 மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து அந்தப்பகுதியில் மேலும் அகழ்வு வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த)

## காதலர்கள் ரயில் முன்னால் பாய்ந்தால் என்ன செய்வது?

காதலர்களும் ரயில் முன்னால் பாய்ந்து தற்கொலை செய்துகொள்கின்றனர்.

இதற்குப் பாதுகாப்புக் கடவை இல்லாமையா காரணம் என்று கேள்வி எழுப்பிய போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம,இதோ கூறும்போதே தோழி ரோஸி சிரிக்கிறார் என்றும் சிரித்துக் கொண்டே தெரிவித்தார்.

அதேவேளை, ரயில்வே பாதுகாப்பு கடவைகள் முழு அளவில் அமைப்பதற்கு இன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பி ரயில்வே பாதுகாப்பு கடவை தொடர்பில் புத்திக பத்திரண கேள்வி கேட்டார்.

இதற்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலியில் நடைபெற்ற சம்பவம் கவலைக்குரியது. ரயில் பாதுகாப்புக் கடவைகளை முழு அளவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது குறித்து கவனம் செலுத்தப்படும். ரயில் பாதுகாப்புக் கடவை இல்லாதது மாத்திரம் விபத்து களுக்கு காரணமல்ல என்று அமைச்சர் கூறினார்.

அதேவேளை, வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை 2013ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிக்கப்படும் என்ற தகவலையும் போக்குவரத்து அமைச்சர் இதன்போது சபையில் வழங்கினார். (த)

# குற்றப் பிரேரணை குறித்து ஐ.தே.க.புதிய சட்ட வரைவு

கொழும்பு,டிசெ.8

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் குற்றப் பிரேணையை விசாரிப்பது தொடர்பில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி புதிய சட்டவரைவு ஒன்றைத் தயாரித்துள்ளது.

குற்றப்பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படுமாயின் பிரதம நீதியரசரை அல்லது உயர் நீதிமன்ற நீதியரசரைப் பதவி நீக்கும் தீர்மானத்தை விசாரிப்பதற்கு மூவர் கொண்ட பொதுநலவாய நீதிபதி குழுவை நியமிக்கும் வகையில் புதிய சட்டவரைவை அக்கட்சி வரைந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக் ஷ இந்த சட்டவரைவைத் தனிநபர் சட்டமூலமாக வரைந்துள்ளார்.

தற்போதுள்ள அரசமைப்புச் சட்டத்தின்படி பிரதம நீதியரசரைப் பதவி நீக்குவதற்கான தீர்மானத்தைக் கொடுத்தவுடன் சபாநாயகர் ஒரு தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும்.

இந்தக் குழு குற்றச்சாட்டுகளை விசாரித்து தனது முடிவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். குற்றச்சாட்டுகளில் ஏதாவது ஒன்று நிரூபிக்கப்படுமாயின் நாடாளுமன்றம் பிரதம நீதியரசரைப் பதவி விலக்குவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டவரைவின்படி சபநாயகரிடம் இவ்வாறான தீர்மானம் சமர்ப்பிக்கப்படும்போது அவர், இலங்கை தவிர ஏதாவது பொதுநலவாய நாட்டின் அதி உச்ச நீதிமன்றத்தில் பணிபுரிந்த மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழுவை நியமிப்பார்.

இந்தச் சட்டவரைவில் கூறப்பட்ட நீதிபதி குழுவினர், பிரதம நீதியரசருக்கு எதிரான தீர்மானத்தில்கையொப்ப மிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் இந்த நடவடிக்கையில் சட்டத்தரணிகள் சங்கம் தனது நியாயங்களை கூற அனுமதிக்க வேண்டும். நீதிபதி குழு தனது நடவடிக்கையை இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்ய வேண்டும்.

ஆனால் சபாநாயகர் இந்த காலத்தை ஒரு மாதத்தினால் அதிகரிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இலங்கையரை நாடுகடத்த பிரிட்டன் அரசு நடவடிக்கை

### விமானம் தயார் நிலையில்

பிரிட்டனுக்கு அகதிகளாகச் சென்ற இலங்கையர்களில் சிலரைத் திருப்பி அனுப்ப அந்நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்நாட்டுக் குடியுரிமை மறுக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என லண்டன் எல்லைவரையறை முகவரகம் தெரிவித்துள்ளது.

மேற்படி பிரிட்டன் குடியுரிமை மறுக்கப்பட்ட இலங்கையர் குழு அடங்கிய விசேட விமானமொன்று லண்டனிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கத் தயாராக உள்ளதென குறித்த முகவரகம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறு நாடு திரும்பவுள்ளவர்கள் அனைவரும் லண்டனில் தங்கியிருந்தவர்கள் என்றும் அம்முகவரகம் மேலும் கூறியுள்ளது. (த)

## இலங்கையருக்கு ஆஸியில் சிறை

ஆஸ்திரேலியாவில் சாரதி ஒருவர் உயிரிழக்கக் காரணமாக இருந்த விபத்தை நிகழ்த்திய இலங்கையர் ஒருவருக்கு 18 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக த ஏஜ் பத்திரிகை செய்தி வெளி யிட்டுள்ளது.

ஷியாம் ஜெயசிங்க என்ற 28 வயதுடைய அவர், ஆப்கானிஸ்தான் அகதி ஒருவர் செலுத்திய வாகனத்தின் மீது, கட்டுப்பாட்டு வேகத்தைத் தாண்டி வாகனத்தை செலுத்திச் சென்று மோதியதாக குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 13 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்றது.

மணிக்கு 100-110 கிலோ மீற்றர் என்ற அதி வேகத்தில் அவர் தமது வாகனத்தை செலுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை பிரஜைக்கு மரண தண்டனை

### அபுதாபியில் வியாழன் நிறைவேற்றம்

கொழும்பு,டிசெ 8

கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்த இலங்கையர் ஒருவருக்கு அபுதாபியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

இலங்கையைச்சேர்ந்தஅலெக்ஸ் ரோஹன (வயது-36) என்பருக்கே மரண தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டின் மூலமே இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

நீதிவான், பொது வழக்கறிஞர், இமாம், வைத்தியர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் இவருக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 7 மணியளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அபுதாபியில் பொறியியலாளர் ஒருவரை குறித்த இலங்கையர் 2002ஆம் ஆண்டு கொலை செய்ததாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

8 பிள்ளைகளின் தந்தையான ஒபைட் அல் முஹாரி (வயது-39) என்பவரையே குறித்த இலங்கையர் குத்திக் கொலை செய்திருந்தார். (த)



நாடளாவிய ரீதியில் ரயில்வே தொழிற்சங்கங்கள் நேற்று [illegible] 48 மணித்தியால அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டன. இதனால் ரயில் நிலையங்கள் வெறிச்சோடின. (த)

## இல்லற வாழ்வில் மூன்றடி ஜோடி

மூன்றே மூன்று அடி உயரமான ஜோடியொன்று திருமண பந்தத்தில் இணைந்துகொண்டுள்ளது. களுத்துறையைச் சேர்ந்த மணமகனும் மொரட்டுவையைச் சேர்ந்த மணமகளுமே இவ்வாறு திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

மூன்று அடி உயரமான இருவருக்கும் மொரட்டுவை பிலுள்ள ஹோட்டல் ஒன்றிலேயே சகல சம்பிரதாயங் களுடன் அண்மையில் திருமணம் நடைபெற்றது.

களுத்துறை கல்பானவைச் சேர்ந்த மூன்றடி உயரமான மணமகன் தர்மசிறி பிரேமலால் (35 வயது) கடிகாரம் மற்றும் கையடக்க தொலைபேசி பழுது பார்க்கின்ற தொழில்நுட்பவியலாளர் ஆவார்.

அவரது உயரத்திற்கு ஏற்றவகையில் மொரட்டுவை சொய்சாபுரவைச் சேர்ந்த மணமகளான தில்னி இரேஷா (26 வயது) கிடைத்தார்.

அது மட்டுமன்றி இருவரின் ஜாதகமும் பொருத்தமாக அமைந்துள்ளது. இதனையடுத்தே இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டுள்ளனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். பால்ய நண்பர்களைச் சந்திப்பதன் மூலம் மனநிறைவு கிட்டும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**கடகம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரியும்.

**சிங்கம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். பணவரவு திருப்தி தரும். கோட்டை இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**கன்னி:** நுழைவதால் தேவையற்ற அலைச்சலுக்கு ஆளாடுவீர்கள். குடும்பத்தில் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டியிருக்கும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட சிலர் தவறாகப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

## நாளை

கார்த்திகை -24 ஞாயிற்றுக்கிழமை 09.12.2012
திதி: ஏகாதசி மு.இ. 11.49 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ 01.12 வரை
சுபநேரம்: 09.19- 10.49 வரை
ராகுகாலம்: 04.49- 06.19 வரை

**துலாம்:** எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். எதிர்மறை எண்ணங்கள் தோன்றும். உடல் நலத்தில் கவனம் தேவை. அரச விடயம் தாமதமாக முடியும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் வீண்விவாதம் வந்து போகும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். குடும்பத்தில் அமைதி நிலவும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** யோசித்து முடிவெடுங்கள். தடைப்பட்ட வேலைகள் உடனே முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பம்:** வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். புதியவர்களை நம்பி ஏமாறாதீர்கள். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கடன் வாங்க வேண்டி வரும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**மீனம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். நட்பு வட்டாரம் விரியும். கடன் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள். வாகனப்பழுது நீங்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | 6 | | | 1 | 4 | 3 | |
| 9 | | | 3 | 2 | | | | 6 |
| 4 | 3 | | 5 | | 7 | | 2 | |
| 8 | 5 | 4 | | | | | | |
| | | 2 | | | | 3 | | |
| | | | | | | 6 | 1 | 4 |
| | 4 | | 8 | | 3 | | 7 | 1 |
| 7 | | | | 1 | 2 | | | 5 |
| | 1 | 9 | 7 | | | 8 | 6 | |

## சுடோக்கின் நேற்றைய விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 3 | 2 | 6 | 5 | 8 | 4 | 7 |
| 8 | 4 | 5 | 1 | 7 | 3 | 6 | 9 | 2 |
| 7 | 2 | 6 | 4 | 9 | 8 | 3 | 1 | 5 |
| 2 | 8 | 9 | 6 | 4 | 1 | 7 | 5 | 3 |
| 3 | 6 | 4 | 7 | 5 | 9 | 2 | 8 | 1 |
| 5 | 7 | 1 | 1 | 8 | 3 | 4 | 6 | 9 |
| 4 | 5 | 7 | 3 | 1 | 6 | 9 | 2 | 8 |
| 1 | 3 | 8 | 9 | 2 | 4 | 5 | 7 | 6 |
| 6 | 9 | 2 | 5 | 8 | 7 | 1 | 3 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## மறைந்த தவில் மேதை N.R. சின்னராஜா அவர்களின் புதல்வரின்

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான நந்தன வருடம் கார்த்திகை மாதம் 24 ஆம் நாள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.15 மணிமுதல் ஒரு மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்



| | |
|---|---|
| எமது புத்திரன் | எமது புத்திரி |
| திருநிறைசெல்வன் | திருநிறைசெல்வி |
| **N.R.S.நரேந்திரன்** | **K.கலையமுதா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு

"நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்"

திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

| | |
|---|---|
| தவில்மேதை | திரு. திருமதி கிருஸ்ணபிள்ளை |
| திருமதி N.R. சின்னராசா | குடும்பத்தினர் (வேலுப்பிள்ளை) |
| குடும்பத்தினர். | 23, காரைக்காட்டுலேன், |
| இணுவில் மேற்கு, | வண்ணார்பண்ணை, |
| இணுவில். | யாழ்ப்பாணம். |

இருவீட்டார் அழைப்பு

[26425] [6.2]



# சுஜீவா வைத்தியசாலை

(தாய்மைப் பேற்று சிறப்பு சித்த ஆயுள் வேத வைத்தியசாலை)
இலக்கம் 6, கலட்டி அம்மன் வீதி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(நாச்சிமார் கோயிலுக்கும் - தட்டாதெரு சந்திக்கும் இடையில்)

# அறிவித்தல்

எமது வைத்தியசாலையில் குழந்தையின்மைக்காக சிகிச்சைபெற்று தாய்மைப்பேறடைந்த தம்பதிகளில் இந்த வருடம் குலுக்கல் முறையில் பரிசுபெற தெரிவாகியவர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| 01. | அர்சினா பரணிதரன் - | கிடாச்சூரி, வவுனியா. |
| 02. | தேதீஸ்வரன் தவலட்சுமி - | சித்தங்கேணி, யாழ்ப்பாணம். |
| 03. | பாலராஜ் ஹேமாலினி - | அராலிவடக்கு, யாழ்ப்பாணம். |
| 04. | சுபாஜினி சசிதரன் - | தாண்டிக்குளம், வவுனியா. |
| 05. | கேதீஸ்வரன் சூரியகலா - | 5 ஆம் வட்டாரம் நெடுந்தீவு. |
| 06. | சிவகாந்தன் விஜி | 8 ஆம் வாய்க்கால் உருத்திரபுரம், கிளிநொச்சி. |
| 07. | ஜெயரூபன் திருமகள் | கடுக்காயடி வீதி, நல்லூர். |
| 08. | கிருஷ்ணமேனன் தாட்ஷா - | 215/24, தாண்டிக்குளம், வவுனியா. |
| 09. | அனுசியா J.K. வில்லியம் - | முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர். |
| 10. | சுதாகரன் ரதிகலா - | அராலிவடக்கு, வட்டுக்கோட்டை. |

## விசேட பரிசுபெறுவோர்

இந்தியா சென்று சிகிச்சைபெற்றும் பயனின்றி எமது வைத்தியசாலையில் பயனடைந்தோர்

| | | |
|---|---|---|
| 01. | S. பத்மலோஜினி - | 84, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (லண்டனிலிருந்து வந்துசிகிச்சைபெற்றவர்) |
| 02. | R. சிவாஜினி | - யாழ்ப்பாணம். |

இவர்களை எமது தொலைபேசி (077 5594 147, 021 5685333) மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கடந்த வருடம் (14.10.2011) குலுக்கல் முறையில் தெரிவாகிய 10 தம்பதிகளுக்கு சுதேச வைத்திய அமைச்சர், பிரதியமைச்சர், சி.அலன்ரின் (பா.உ), அமைச்சின் செயலாளர், ஆயுள்வேத ஆணையாளர் ஆகியோர் எமது வைத்தியசாலையில் வைத்து பரிசுகள் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

Dr. ஜெயலன்
Dr. Mrs.ச. ஜெயலன்
Dr. க.ஓ. இராசரத்தினம்

(சி/3049) (45.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# இந்தியன் வீட்டுத்திட்டத்தின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்தியன் வீட்டுத்திட்டத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பம் செய்தவர்களது விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு புள்ளிகள் இடப்பட்டு மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத்திட்டத்தைப் பெறுவதற்கு மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு மாகியப்பிட்டி, பெரியவிளான், பண்டத்தரிப்பு, ஆனைக்கோட்டை, சாவற்கட்டு, உயரப்புலம் ஆகிய எட்டு கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து 2244 பேர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர். இவை பிரதேச செயலக வீட்டுத் திட்ட உத்தியோகத்தர்களினால் பரிசீலனை செய்யப்பட்டு புள்ளிகள் இடப் பட்டு கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் பிரதேச செயலகத்திலும் மக்களின் பார்வைக்கு வைக் கப்பட்டுள்ளன.

இவற்றில் ஏதாவது முறைகேடுகள், ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னர் அந்தப் பிரிவு கிராம சேவையாளரிடமோ அல்லது பிரதேச செயலருக்கோ எழுத்து மூலம் விண்ணப் பிக்குமாறு கேட்கப்பட் டுள்ளது.

இதன் பின்னர் சகல விண்ணப்பங்களும் யாழ். செயலக உத்தியோகத்தர்களினால் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பின்னரே வீடுகள் வழங்கப்படும் என்று பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் தெரிவித்துள்ளார். (3-100)

# இன்றும் நாளையும் பகல்வேளை மின்தடை

யாழ்ப்பாணம், டிசெ.8

வீதி அகலிப்பு பணிகளுக்காக மின் விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்த வேண்டி இருப்பதாலும், புதிய மின்மாற்றி நிறுவுவதற்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும்.

இன்று சனிக்கிழமை பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, மாவடி, தட்டாதெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், வேம்படி, மனோகரா பிரதேசம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி மத்தி, நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, சாமியன் அரசடிப் பிரதேசம், சம்பந்தர் கடைப் பிரதேசம், துன்னாலை, குடவத்தைப் பிரதேசம், யாக்கருப் பிரதேசம் கிழவிதோட்டம், மாதனை, நெல்லண்டைப் பிரதேசம், மந்திகைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உபய கதிர்காமம், புனிதநகர், கற்கோவளம், கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன் மணல் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், பட்டணப் பகுதி நீங்கலான யாழ்.மாநகர சபை பகுதி இடங்களிலும்-

ஞாயிற்றுக்கிழமை சாரையடி, கிராமக்கோடு, பருத்தித்துறை பிரதேசம், மந்திகை, வியாபாரிமூலை, அல்வாய், நெல்லியடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், வதிரி, திக்கம் பிரதேசங்களிலும், கந்தரோடை, மாகியம்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, சுன்னாகம், இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ்.நகரம் முழுவதும், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், குருநகர், பாசையூர், யாழ்.மாநகர சபைப் பகுதி, உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப்பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (3-13)

## சனசமூக நிலைய அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு,டிசெ.7

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட மட்டுவில் வடக்கு வின்சன் சனசமூக நிலைய அபிவிருத்திப் பணிக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

(3-86)

## வட்டுக்கோட்டை வரலாற்று மான்மியம் நூலுக்கு ஆக்கம் அனுப்பலாம்

வட்டுக்கோட்டைப் பிரதேசத்தின் வரலாற்றுச் சம்பவங்களை ஆவணப்படுத்தும் நோக்குடன் ''வட்டுக்கோட்டை வரலாற்று மான்மியம்'' எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நூலுக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்பும் ஆர்வமுடையவர்கள் தமது எண்ணக்கருவுக்கேற்ப வட்டுநகர் மகத்துவம், மான்மியம், பெருமை போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக அனுப்பி வைக்கலாம்.

மூதாதையரின் ஆரம்பக் குடியேற்றம், ஊரின் பெயர் வரக் காரணம், எல்லைகள், சமயம், கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டுக்கள், திருமணமுறை, பாரம்பரியம், சம்பிரதாயமும் பழக்க வழக்கங்களும், ஊரில் வாழ்ந்த பெருமக்களும், அவர்கள் ஆற்றிய தொழில்கள், புலவர்கள், பண்டிதர்கள், கலைஞர்கள், ஜோதிடம், வைத்தியம், மாந்திரீகம், பாடசாலைகளின் தோற்றம், பொது அமைப்புகள், சனசமூக நிலையங்கள், பொது மண்டபங்கள், இனம், கேணி, சந்தைகள், கொத்தத்துறை மயான மண்டபம், வழுக்கையாறு மயானம், இறுதி ஊர்தி வண்டி, மயான வைரவர், பெரிய தர்மச் செயல்கள் செய்தோர், கிராமத்து நூலாசிரியர்கள், புராணம் படித்துப் பொருள் பிரிப்போர் போன்ற விடயங்களை உள்ளடங்கியதாக ஆக்கங்களை முன் வைக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, வட்டு மூளாய் வீதி, வட்டுக்கோட்டை எனும் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3-14)

## சமூக ஒருங்கிணைப்பு செயலமர்வு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரியின் ஏற்பாட்டில் ஜி.ஐ.சற் நிறுவனத்தின் அனுசரணையுடன் முதலாம் வருட ஆசிரியர்கள் 20 பேருக்கு சமூக ஒருங்கிணைவுக்கான செயலமர்வு கடந்த முதலாம், இரண்டாம் திகதிக ளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் சமாதான எண்ணக்கருவுக்கான பாடல் இசைக்கப்பட்டதுடன் நாடகம், நாட்டியம், தெருக் கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (3-14)

### வயற்காணி விற்பனை

கட்டுடை கேலன் கமத்தில்
மானிப்பாய் வீதியையும் உடுவில்
டச்சு வீதியையும் இணைக்கும் தார்
வீதியை முகப்பாகவும் நன்னீர்
வளத்தையும் கொண்ட ஏறத்தாழ
31 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0776283366, 0755634032
(26493) (6.7.4)

### J.C.B வாடகைக்கு (பைக்கோ)



★ போக்குவரத்துக்கூலி அறவிடப்படமாட்டாது
★ குறைந்த கட்டணத்தில் துரித சேவைக்கு இன்றே நாடுங்கள்
இல. 207, புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்,
சுன்னாகம்.
தொடர்புகளுக்கு:
077 7712482, 077 984 7285
(26422) (2-6)

### கிளி/ பளை மத்திய கல்லூரி
### 2012 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பாராட்டு



மு.குகராம் - 155, சு.ரேஜனன் - 150, சு.அபோஜன் - 148
100 புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்ற
20 மாணவர்களையும் கற்பித்த
ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.
(26429)(2.6)
பாடசாலைச் சமூகம்.

### பத்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் - 26.09.1973
மறைவு - 08.12.2002




அமரர் கனகரத்தினம் கணேசகுமார்

ஒரு கணம் கூட நினைக்கவில்லை -அன்று
உன்னை நாம் பிரிவோம் என்று
பத்தாண்டுகள் பறந்தோடிச் சென்றபோதும் -உன்
அழகிய புன்சிரிப்பும் வெண்ணிற உடலும் மனதைக்
கொள்ளை கொள்ளும் உன் ஆரவாரமான
பேச்சும் தினமும் எம் மனங்களில் வந்து போகுதையா
பெற்றவர் துடி துடிக்க உடன் பிறந்தவர் பதைபதைக்க
கணேசா கணபதி விரத நாளில் கணேசன் பாதம் பற்றினாயோ!

இல. A 32, குமரபுரம்,
பரந்தன்.

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா,
அத்தான், அண்ணி, மருமக்கள்.
(26108)(5.6.7)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



1932.09.20 தோற்றம் 1945.02.05
2011.11.20 மறைவு 2011.06.18

அமரர் நாகநாதி தம்பாப்பிள்ளை
(முன்னாள் தபால் உத்தியோகத்தர்)
திதி:-08.12.2012
திருமதி சிந்தாமணி தம்பாப்பிள்ளை

அவர்களின் ஓராம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (08.12.2012) சனிக்கிழமை சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயில் மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற இருப்பதால் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். T.P. 0776663461

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பச்சைமால்மருகன் விஜயராணி



வடமராட்சி பருத்தித்துறை, மருதடியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பச்சைமால்மருகன் விஜயராணி 06.12.2012 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம் பலக் குருக்கள் - நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற பச்சைமால்மருகனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜனார்த்தனின் அன்புத் தாயும், இரத்தின சபாபதி (லண்டன்), மனோன்மணி (லண்டன்), பவானி (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), பாலச்சந்திரன் (திருகோணமலை), சுபாஸ்கந்தன் (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மருதடி, பருத்தித்துறை.
(75589) (45.6.7)
குடும்பத்தினர்.



## திருமதி மகேந்திரராணி துரைராஜா

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.06. 15 ஆம் ஒழுங்கை, கொள்ளுப்பிட்டியில் வசித்தவரும் தற்போது ஆறுமுகம் வீதி, கல்வியங் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேந்திரராணி (ராணி) துரைராஜா 6.12.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மகேந்திர ராஜா, புவனேஸ்வரி, பரமேஸ்வரி, தர்மராஜா, நகுலேஸ்வரி மற்றும் விக்னேஸ்வரி, பொன்மலர் ஈஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம் மற்றும் மகேந்திரராஜா, பாலச்சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம் வீதி, கல்வியங்காடு, நல்லூர்.
(76449) (45.6.7)
குடும்பத்தினர்.

# விபத்துக்களைக் குறைப்பதற்கு புதிய திட்டம் வருகிறது

வாகனச் சாரதிகளால் இழைக்கப்படும் குற்றங்களை அதிகளவில் சட்டத்தின் பிடிக்குள் கொண்டு வரும் வாகனப் போக்குவரத்து கண்காணிப்புப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பணப் பரிசில்களை வழங்கும் நடைமுறை ஒன்று இன்று வரையிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த நடைமுறையை ரத்துச் செய்துவிட்டு மோட்டார் வாகன விபத்துக்களைக் குறைத்து விடுவதற்குக் ஆர்வம் காட்டிச் செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அந்தப் பரிசில்களைப்பெற்றுக்கொடுப்பதுகுறித்துபொலிஸ்மா அதிபரின் கவனம் திரும்பியுள்ளது.

சாரதிகளுக்கு அபராதத் தொகைகளை மாத்திரம் விதிப் பதன் மூலம் வாகன விபத்துக்களை கட்டுப்படுத்தி விடுவது அசாத்தியமானதுஎன்பதுஅனுபவ ரீதியாக உணரப்பட்டுள்ளது. இதனால் எதிர் காலத்தில் இந்தப் புதிய நடை முறை செயற்படுத்தப்படவுள்ளதுஎன்றுதெரியவருகிறது.

வாகனப் போக்குவரத் துக் கண்காணிப்புக் கடமையை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் குறைந்த பட்சமாக மாதம் ஒன்றில் நூறு வாகனச் சாரதிகளைச் சட்டத்தின் பிடிக்குள் சிக்க வைக்க முடிந்தால் மாத்திரமே பணப்பரிசில் அவருக்கு உரித்தாகிறது.

இலங்கையின் மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவில் 6 ஆயிரம் பேர் வரையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் உள்ளனர். அவர்களுள் அலுவலகக் கடமைகளில் ஈடுபடுவோரைத் தவிர்த்து குறைந்தபட்சமாக 4 ஆயிரம் பேர் வரையில் வாகனப் போக்குவரத்து விதிமீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பதிவு செய்து கொள்வதில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர் மாதம் ஒன்றில் குற்றப்பத்திரங் களை வழங்குவதன் மூலம் நூறு அபராத விதிப்புக்கள் என்ற வாறு நாடு முழுவதும் நான்கு லட்சம் அபராத விதிப்புக்கள் குவிந்து வருகின்றன. அதற் கமைய ஆண்டு ஒன்றில் 48 லட்சம் குற்றப் பத்திரங்கள் பொலிஸ் திணைக்களத்தால் விநியோகிக்கப் படுகின்றன. அவற்றின் குறைந்த பட்ச அபராதத் தொகை 500 ரூபா எனக் கணிப்பிட்டாலும் ஆண் டொன் றில் கிட்டும் வருவாய் 2,400 மில்லியன் ரூபா என் பது குறிப்பிடத்தக்கது.

(ம-22)


## காசாளர் தேவை

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய நாளாந்த வரவு செலவுக் கணக்குகளைப் பேணுவதற்கும் ஆலயத்தில் நாளாந்தம் இருந்து காசாளராகக் கடமையாற்றக் கூடியவர் தேவை. ஓய்வு பெற்றவரும் முன் அனுபவம் உள்ளவரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தர்மகர்த்தா சபையினர்,
மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய்.
(76450) (6.2.7)

## HND in Pharmacy

Be a Pharmacist in 2 Years
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy

Lectures by MBBS Doctors !
Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now !
K.U Education
Pioneers in Medical Studies
[ Small Group Classes/Internship will be arranged ]

**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
Tel :0777302882 Web :www.kugroup.info


## நீங்கா நினைவில் ஓராண்டு



அன்னை மடியில்
02.03.1943

ஆண்டவன் அழைப்பில்
20.11.2011

### அமரர் கதிரவேலு பரமானந்தம்

அன்பின் திருவுருவே ஆருயிர் தெய்வமே!
பாரினில் எமைப் பரிதவிக்கவிட்டு பாதியில் சென்றதேனோ!
ஆண்டுகள் சென்றாலும் ஆறாது எம் துயர் நின்
ஆன்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.54/60, ஆத்திசூடிவீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வைரவிப்பிள்ளை சண்முகராசா

(கட்டட ஒப்பந்தகாரர், புலோலி)



பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும், புற்றளைப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவிப்பிள்ளை சண்முகராசா (23.11. 2012) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானவைரவிப்பிள்ளை-கனகம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கயர்க்கரசியின் (லண்டன்) அன்புக் கணவரும், துளசிமதி (லண்டன்), மயூரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜேந்திரனின் (லண்டன்) அன்பு மாமனும் திவியனின் (லண்டன்) அன்புப் பேரனும் சண்முகநாதன், சண்முகலிங்கம், சண்முகவடிவேல், பரமேஸ்வரி, வளர்மதி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி, யோகேஸ்வரி, சிவகுமார், விக்னேஸ்வரன், கமலேஸ்வரி, இராதா கிருஷ்ணன் ஆகியோரின் அன்புமைத்துனரும், வைரவிப்பிள்ளை, ஆனந்தராசா, செல்வகுலசிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புற்றளைப்பிள்ளையார் கோவிலடி,
புலோலி.
தொலைபேசி இல.0212262632
00442088419490
(C73057)(2.6.7)

செ. இராதாகிருஷ்ணன்
(போமன்)
(இலங்கைபோக்குவரத்துச்சபை,
பருத்தித்துறை சாலை)


## கேள்வி கோரிக்கை

யாழ். வை. எம். சீ.ஏ கட்டடத்தில் அமைந்துள்ள
01. கீழ்க்கடை (கண்டிவீதி) Ground Floor
02. 2 ஆம் மாடிக் கடை (கண்டி வீதி) Second Floor
03. கடை (கச்சேரி- நல்லூர் வீதி)

என்பவை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 வரை குத்தகைக்குக் கொடுக்க கேள்வி கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

முடிவு திகதி: 17.12.2012

குறிப்பு: காகித உறையின் இடது மேல் மூலையில் கடையைக் குறிப்பிடவும்

கோரிக்கைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
பொதுச் செயலாளர்,
வை.எம்.சீ.ஏ.,
109,கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## வட புலத்தில் வாழும் இளைஞர், யுவதிகளே தயாராகுங்கள்

நீங்கள் சுய தொழில் ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒருவரா? அல்லது வெளிநாட்டில் தொழில் ஒன்றை எதிர்பார்ப்பவரா? அல்லது வெளிநாட்டில் உயர்கல்வி ஒன்றைத் தொடர ஆசைப்படும் ஒரு வரா? (உலகில் எந்த ஒரு நாட்டுக் கும் நீங்கள் தொழில் ரீதியாகவோ அல்லது பட்டப்படிப்பு ஒன்றுக்காகச் செல்ல இருந்தாலும் இலவசமான ஆலோசனை ஒன்றை நாம் வழங்குகின்றோம்.

தொடர்பு: Lanka Voice
இல.24,புகையிரத வீதி, வவுனியா.
T.P.0778593505, 0750650084
(24350) (6.7.2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவாக்கத்தின் இறைமை அரசிடம் அல்ல; மக்களிடமே!

## சுமந்திரன் தெரிவிப்பு

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருந்தாலும் அரசமைப்பில் அரசு தன்னிச்சையாக மாற்றங்களையோ அல்லது திருத்தங்களையோ செய்ய முடியாது. மக்கள் வாக்கெடுப்பின் மூலம் மட்டுமே எந்த மாற்றங்களையும் செய்யமுடியும். எனவே, சட்டவாக்கத்தின் இறைமை மக்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது- என்று கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பாக குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாம் ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம் என்று கூறிக்கொள்கிறோம். ஆனால், ஜனநாயகமும், சிவில் நிர்வாகமும் வடபகுதியில் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.

வட பகுதியில் இராணுவத்தினரின் கெடுபிடிகளால் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. போரின்போது சரணடைந்து அரசால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இளைஞர்கள் மீண்டும் கைதுசெய்யப்படுகின்றனர்.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் பத்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களுள் ஒருவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பயன்படுத்தியே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

போர் முடிந்து மூன்று வருடங்கள் கடந்துவிட்டன. இந்த மூன்று வருடகால அவகாசத்துக்குள் நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தி இருக்கமுடியும், ஆனால், அரசுக்கு அதில் அக்கறை இல்லை.

நாட்டில் போர் முடிந்துவிட்டது என்றால் மீண்டும் அங்கே இராணுவ ஆட்சி ஏன்? எமது மக்கள் மீது இராணுவ ஆட்சி பலவந்தமாகத் திணிக்கப்படுகின்றது. இதனாலேயே அங்கு விபரீதங்கள் ஏற்படுகின்றன. 1970களில் ஏற்பட்ட அசம்பாவிதங்களை மீண்டும் ஏற்படுத்த முனைகின்றனர்.

ஜனநாயக நாட்டில் நிரந்தர சமாதானமும், சிவில் நிர்வாகமும் உறுதிப்படுத்தப்படவேண்டும். எதிர்காலத்தில் ஏற்படவுள்ள அனர்த்தங்களைத் தடுக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்- என்றார்.

(ங-சி)

## சுகாதார வாரத்தில் சிரமதானப் பணிகள்

சுகாதார அமைச்சினால் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதி தேசிய சுகாதார வாரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் இரண்டாவது நாளான 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுத்திகரிப்புத் தினமாகவும், அந்த நாளில் அனைத்துத் தரப்பினரும் சிரமதானப் பணிகளில் ஈடுபடுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் யாழ். பிராந்திய சுகாதாரச் சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள சுகாதார நிறுவனங்கள் மற்றும் சகல அரச, அரச சார்பற்ற திணைக்களங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், மதத்தலங்கள், வியாபார நிலையங்கள் மற்றும் வீட்டுச் சூழல்களிலும் சிரமதானப் பணிகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இதன்மூலம் கொடிய ஆள்கொல்லித் தொற்றுநோய்களான டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்தும் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

## தீபபூசைகள்

நயினாதீவு ஐயப்ப சுவாமிகள் கோவிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கற்பூர ஒளி தீபப் பூசைகளும் விசேட ஆராதனைகளும் நடைபெறும். இந்த விசேட பூசைகளில் அகில இலங்கை குருசாமி ராஜராஜசுந்தரத்துடன் ஐம்பது சுவாமிகள் வருகை தந்து கலந்து கொள்ளவுள்ளனர் என்று ஆலயத்தினர் தெரிவித்தனர். (ம-7)

## புதிய தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவது குறித்து கவனம்

கொழும்பு,டிசெ. 8

இலங்கையில் புதிய தேசிய அடையாள அட்டை ஒன்றை அறிமுகம் செய்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அடையாள அட்டைகளின் தகவல்களும் ஏற்கனவே கணினி மயப் படுத்தப்பட்டுள்ளதாகத் தேசிய ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதி நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேசிய அடையாள அட்டைகள் அச்சிடப்பட உள்ளன. புதிய தேசிய அடையாள அட்டை அச்சிடுதல் தொடர்பிலான விலை மனுக் கோரல் அறிவிப்பு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இலத்திரனியல் அடையாள அட்டையொன்று விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகவும், இதில் இரத்த மாதிரி உள்ளிட்ட சகல விடயங்களும் உள்ளடக்கப்பட உள்ளது.

தற்போது பயன்படுத்தப்படும் சகல தேசிய அடையாள அட்டைகளின் தகவல்களும் ஏற்கனவே கணினி மயப் படுத்தப்பட்டுள்ளதாகத் தேசிய ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சர்வதேச தரத்திற்கு அமைவான வகையில் இந்த புதிய தேசிய அடையாள அட்டை அமையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.(த)

## நீதியரசர் மீது விசாரணையை தொடருங்கள் தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா விசாரணைக்கு முகம்கொடுக்க மறுத்தாலும் அவர் மீதான விசாரணைகளைத் தொடருமாறு தெரிவுக்குழுவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளதாக அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதம நீதியரசர் தெரிவுக்குழுவின் விசாரணைகளிலிருந்து வெளிநடப்புச் செய்ததன் எதிரொலியாக உருவாகியுள்ள நிலைமைகள் தொடர்பாக அரசின் கட்சித் தலைவர்களுக்கு ஜனாதிபதியால் விளக்கமளிக்கப்பட்டது.

சுமார் 20 நிமிடங்கள் நிகழ்ந்த இந்தச் சந்திப்பின்போது பிரதம நீதியரசர் தம்மீதான விசாரணைகளிலுள்ள பக்கச்சார்பு தொடர்பில் வெளிநடப்புச் செய்ததால் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு அவப்பெயர் ஏற்படலாமென ஜனாதிபதி விசனம் தெரிவித்தாக தெரிவிக்கப்படுகிறது.

பாராபட்சமாக விசாரணைக்கு முகம்கொடுக்க விரும்பாமலும் நீதித்துறையின் கௌரவத்தைக் காப்பாற்றவுமே பிரதம நீதியரசர் தெரிவுக்குழு விசாரணையிலிருந்து வெளியேறியதாக சட்டத்தரணிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போது எதிர்கட்சியினரும் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறியுள்ள நிலையில் குழுவின் விசாரணைகள் நேற்று மாலையும் தொடர்ந்தன. இதேவேளை நேற்று மாலை நடைபெற்ற தெரிவுக்குழு விசாரணையின் முன்தோன்றிய உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன பிரதம நீதியரசருக்கு எதிராக சாட்சியமளித்துள்ளார்.

பிரதம நீதியரசர் தெரிவுக்குழு விசாரணையிலிருந்கு வெளிநடப்புச் செய்ததை அரச உயர்மட்டத் தலைவர்கள் கடுமையாக விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

பதின்ம வயதுச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வழக்கில் கைதான சந்தேகநபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் சம்பவம் நடைபெற்றதாகவும் அது தொடர்பில் தற்போது முறைப்பாடு கிடைக்கப் பெற்றதை அடுத்தே கந்தரோடை மடத்தடியைச் சேர்ந்தசந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

(உ-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயப் பங்கில் பல பக்திச் சபைகளில் பாங்குடன் பணிபுரிந்த 'சமாதானம்' துரை ஆரோக்கியதாசன் (முன்னாள் பிரதி அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை, புனித திருமுழுக்கு யோவான் ஆலய அருட்பணிச் சபைத் துணைத்தலைவர்) அவர்கள் விண்ணக மகிமை அடைந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

புனித திருமுழுக்கு யோவான் ஆலய
பங்குத் தந்தையும், மக்களும்.

## இறுதி அஞ்சலி நிகழ்வு

### துரை ஆரோக்கியதாசன்

(B.A.Dip.in Ed. பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் உபஅதிபர், SPC OBA துணைத்தலைவர், சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலய அருட்பணிச்சபை துணைத் தலைவர்)



அவர்களின் இறுதி அஞ்சலி திருவழிபாடு. கடந்த (04.12.2012) அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புக்கும், பாசத்திதுக்கும், பெரும்மதிப்புக்குரிய துரை ஆரோக்கிய தாசன் (சமாதானம்) அவர்களின் இறுதி யாத்திரை வழிபாடு யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம் பெறும். அதற்கு முன்னதாக இல.60, கோயில் வீதி சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லாதிலிருந்து பூதவுடல் பவனியாக ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழிபாட்டு இறுதியில் யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலய கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

60, கோயில் வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

சொலமன்.க.சிறில்
(முன்னாள் ப.ப.உ)

(26574)(3.14)


## விற்பனைக்கு

தேங்காய் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

தொடர்பு: அர்ச்சனா தொலைத் தொடர்பகம்
பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.
0213213293 .0778733588

## கார் விற்பனைக்கு

Nishan வகை சில்வர் நிறக் கார் விற்பனைக்கு உண்டு.

★ விலை 15½ LKS (நல்ல வளமுள்ளது)

தொடர்பு: 077 9515394

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைக்கு அருகில் பலாலி வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் 5½ பரப்புக்காணி (2,2,1½ பரப்புத்துண்டங்களாக பிரிக்கப்பட்டது) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
0777037058,0212255086(பி.ப4.00மணி)

## வீடு வளவு விற்பனைக்குண்டு

மானிப்பாய் இணுவில் வீதியில், மானிப்பாயிலிருந்து 200m தூரத்தில் இணுவில் வீதிக்கு சற்று அருகில் 1500 சதுரஅடி விஸ்தீரணம் ... பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 656 9911

(26530)


## மரண அறிவித்தல்

### பசுபதி சோமசுந்தரம்



வேலணை 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புளியங்கூடல் வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதி சோமசுந்தரம் நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை சுருவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

குடும்பத்தினர்
சோ.நிரஞ்சன்

(26541)(3.14)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை வாளை சிவபாலராசா

(ஐயனார் கடற்றொழில் கூ.ச. தலைவர் - வாளை)



அராலி கிழக்கு, ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை வாளை சிவபாலராசா நேற்று முன்தினம் (06.12.2012) வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் ஐயாத்துரை - ராசபாக்கியம் தம்பதியரின் மகனும், அமிர்தலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், ஜெயபாலன், ஜெயகாந்தன், ஜெயமதி, ஜெயசிவன், ஜெயலெட்சுமி, வான்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவமதி, மதியழகன், செந்தில்வேல், ரஞ்சனா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2012) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அராலி கிழக்கு,
ஐயனார் கோயிலடி.

ஜெயபாலன் (மகன்)

(சி/3044)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## இளையப்பா கிருஷ்ணர்



சுன்னாகம் கடவைப்புலத்தைப் பிறப்பிடமாகவும், மின்சார நிலைய வீதி, சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பா கிருஷ்ணர் (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்) நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையப்பா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிந்தாமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், சதாசிவம் (ஓய்வுபெற்ற நெற்சந்தைப்படுத்தும் சபை), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயந்தி, வாசுகி (கனடா), கௌரி, ஜெயகிருபா (கனடா), விஜியா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சதீஸ்குமார் (கனடா), ஆனந்தராஜா, அனித்தா (கனடா), சசிகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனும், அனுஜான் (கனடா), ஆரூரான் (கனடா), அபிசன் (கனடா), அபிலாசினி, மிதுளரூபன், விக்னரூபன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தராஜா
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(28516)(3.14)

## மத்தியூஸ் பிலிப் றெஜினோல்ட்

(களஞ்சிய முகாமையாளர் My Beverages Marketing pvt. Ltd)

அன்னார் நில்மினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான T.J.செபமாலை மத்தியூஸ் (முன்னாள் ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி - யாழ்ப்பாணம்) தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான S.M.S.ராஜசூரியர் தம்பதியரின் அன்பு மருமகனும், Dr. மேரிலீனா (USA), பற்றிசியா விஜயராசா (USA), திருமதி சிந்தியா புவிராஜ் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், Dr. றெஜினோல்ட் லீனா (USA), பிரியன் விஜயராஜா (USA), சீமோன் புவிராஜ் (கனடா), காலஞ்சென்ற செல்வா, தர்மா மற்றும் ஜெயந்தி, புஸ்பா, மகேந்திரன், கிறிஸ்ரபின், இவான்ஜெலின் (கனடா), மார்க், ஷெரின் (UK), யூலியா ஆகியோரின் மைத்துனரும், ஜொனாதன், ஜோச்சிம், ஜோசுவா, ஜேக்கப், றேகனார், லிதஷா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது வதிவிட இல்லத்தில் (504 நீர் கொழும்பு றோட், வத்தளை) நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக அன்று பிற்பகல் 3.30 மணிக்கு பொறளை கனத்தை பொதுமயானத்துக்கு (றோமன் கத்தோலிக்கபகுதிக்கு) எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0094113503359,
0094115878907

(சி/2508)(3.6)

தகவல்:
மகேந்திரன்
ராஜகுமார்.

## கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை)

உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை) நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்) அன்புக் கணவரும், மிதிலைச் செல்வி (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பம்பலப்பிட்டி), நெடுஞ்செழியன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. சிறிபத்மநாதன் (கொழும்பு), அருணா (நோர்வே) ஆகியோரின் மாமனும், அனுராகவன், ரகுராகவன் (கொழும்பு, றோயல் கல்லூரி), பிரவீன், பிரதீப், பிரதிக்ஷா (நோர்வே) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு.
004793043912
(நோர்வே)

தகவல்:
மிதிலைச் செல்வி
சிறிபத்மநாதன்

(28511)(3.14)

## தவறிவிட்டது

NP WT 1340 எனும் தொடர் இலக்கமுடைய வாகன இலக்கத்தகடு பண்டத்தரிப்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:0773839120

(26510)(6-7)

## அரைக்கும் ஆலை இயந்திரங்கள் விற்பனைக்கு

இயங்கும் நிலையில் உள்ள அரைக்கும் ஆலையின் அனைத்து இயந்திர உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு:0757277986

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஆலயச்சுற்றாடலில் கோயிலில் இருந்து 500 M சுற்றுவட்டாரத்துக்குள் 4அறைகள், 2 சமயலறை, 2குளியலறை, 3 Hall கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு:0212228285,
0757277986

## வேலையாள்கள் தேவை

கீழ்க்காணும் வேலைகளுக்கு ஊழியர்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம், நிரந்தர வேலைவாய்ப்பு

1) சப்பிளையர் (உணவு பரிமாறுபவர்)
2) குசினி வேலையாள்கள்
3) காசாளர் (ஆண்/பெண்)
4) பில் கிளாக்
5) அலுவலக உதவியாளர் (பெண்கள்)
6) பாதுகாப்பு உத்தியோகத்தர்
7) ரீ மேக்கர்
8) சுத்திகரிப்பாளர்

{இடம் பெயர்ந்தவர்களுக்கு முன்னுரிமை}

தொடர்புகளுக்கு
36,38பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
0777917753

## BARATHY

கல்வி நிறுவனம்
சித்தன்கேணி

தரம் 6 முதல் 11 வரை

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
10.12.2012 திங்கட்கிழமை 9.00am நீங்கள் நன்கு அறிந்த இப்பிரதேசத்தின் பிரபல்யம் மிக்க ஆசிரியர் குழுவினால்.

| | |
|---|---|
| * விஞ்ஞானம் தேவா ஜெயறூபன் | * கணிதம் S. சிவரூபன் சிவா |
| * தமிழ் குகபரன் கஜீதரன் | * வரலாறு சுதன் பிரதாப் |
| * ஆங்கிலம் விஜயபாஸ்கர் மனோகரன் | * சமயம் N.T. தரன் பாபுதரன் |
| * புவியியல் சர்வேஸ்வரன் | * குடியுரிமை சிவா |
| * நாடகம் ஆனந்தன் | * சுகாதாரம் பார்த்தீபன் |
| * வர்த்தகம் திருக்குமரன் | * I.C.T நா. அம்பி |

* விவசாயம் - விஸ்னுதேவன்

### மாணவர்கள் கவனத்துக்கு

* மேற்குறிப்பிட்ட மிக பிரபல ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கமாட்டார்கள்
* இந்த ஆண்டும் மாணவர்கள் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
தரம் 9,10,11 - 80 மாணவர்களுக்கும்
தரம் 6,7, 8 - 40 மாணவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படும்
இட நெருக்கடிகளை தவிர்க்கும் முகமாக உங்கள் அனுமதிகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
நடைபெற உள்ளதால் தாமதியாது உங்கள் அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளுங்கள்.

(சி/3071)(3.14) இயக்குநர், ஆசிரியர்கள்

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

### அலுவலக உதவியாளர்/ சுத்திகரிப்பாளர்

எமது நிறுவனத்திற்கு பதவி வெற்றிட விண்ணப்பம் கோரப்படுகின்றது. இதற்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் 12.12.2012 இற்கு முன்னராக உங்கள் சுயவிபரக் கோவையை நேரில் வருகைதந்து சமர்ப்பிக்கவும்.

No.15,Sirampiyady lanc
off Stanley Road,
Jaffna.

(c/3061)(7-8)

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா ஆறுமுகம்

காரைநகர், மல்லிகையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா ஆறுமுகம் நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி ஆறுமுகத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானாம்பிகை, ஞானேஸ்வரன் ஆகியோரின் தாயும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், பாலசிங்கம், அருளம்பலம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வேதர் அடைப்பில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் சாம்பலோடை மயானத்தில் நாளை (09.12.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேதர் அடைப்பு (28519)(3.14)
காரைநகர்.

தகவல்:
பெறாமகள்
சோமசுந்தரம் இந்திராதேவி.

## சுஜித் எண்ரப்பிறைசஸ்

### திருகோணமலை
### தேவை

விற்பனைப்பிரதிநிதி
மாதாந்தம் ரூபா 30000/= - 35000வரை சம்பாதிக்கலாம்.

பணம் வசூலிப்பாளர்
தமிழ் ,சிங்களம் தெரிந்திருக்க வேண்டும். மாதாந்தம் ரூபா 40000/= தொடக்கம் ரூபா 45000/ வரை சம்பாதிக்கலாம்.

தொடர்பு:0262052401

(c/2837)(7-6)

## தாவடி பிள்ளையார் கோவில் அருகில்

# நியூட்டன் அக்கடமி

### தரம் 06 முதல் O/L வரை

யாழ் மாணவர்கள் கடந்த காலங்களில் சாதனை படைக்க வழிகாட்டிய சிரேஷ்ட, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் உங்களுக்காக தாவடியில்!

கணிதம்: K.வேலாயுதம், R.K.மேனன், K.றெஜி
விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல், N.சதீஸ், N.அபராஜிதன்
தமிழ்: P.தமிழ் மாறன், P.கோகுலன்
வரலாறு: R.S.சந்திரன், N.நந்தீஸ்
சமயம்: A.குகதாஸ், M.N.ஆனந்தன்
ஆங்கிலம்: P.மதன், Y.துஸ்யந்தன்
சுகாதாரம்: R.சந்திரராஜா
புவியியல் குடியியல்: N.நேரு
ஆங்கில இலக்கியம்: P.மதன்

## COMPUTER EXPRESS

Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane, (off Stanly Rd), Jaffna
Phone - 0212228250

மாபெரும் புலமைபரிசில் திட்டம் - 2012
இவ் ஆண்டின் இறுதிசந்தர்ப்பம்

| Courses | Fee | Duration |
|---|---|---|
| Dip.in Microsoft Office -2007 | 1000 | 3Months |
| Dip.In Desktop Publishing | 1000 | 4Months |
| Dip.in Webpage Designing | 1000 | 4Months |
| Dip.in Graphic Designing | 1000 | 4Months |
| Dip.in Hardware | 1000 | 3Months |
| Dip.in Accounting Package | 3000 | 4Months |
| Dip.in Multimedia | 3000 | 4Months |
| Dip.in Video Editing | 3000 | 3Months |

Tally வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

வகுப்புக்கள் ஆரம்பம் 10AM / 03PM
Batch I : 08/12/2012 Batch II : 09/12/2012
Batch III : 12/12/2012 Batch IV : 14/12/2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வுக்காக தெரிவுக்குழுவில் தமிழ்க் கட்சிகள் எப்படி பங்கேற்பது?

## சுட்டிக்காட்டுகிறது யாழ். மாணவர் விடுதலைக்கான இயக்கம்

"தெரிவுக்குழுவில் நீதி இல்லை. அதன் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை. அது பக்கச்சார்பாகச் செயற்படுகின்றது என்று பிரதம நீதியரசரும், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவருமான கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவே தெரிவுக்குழுவிலிருந்து வெளிநடப்பு செய்தபோது தமக்கு நியாயமானதோர் அரசியல் தீர்வு வேண்டும் என எதிர்பார்க்கும் தமிழ்த் தலைவர்கள் தெரிவுக்குழுவில் எவ்வாறு பங்குபற்ற முடியும்? அதில் எப்படி நம்பிக்கை வைக்க முடியும்?"

- இவ்வாறு கைதான யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பு நேற்றுக் கேள்வி எழுப்பியது.

அரசின் உச்சகட்ட அநீதி அடக்குமுறைகளால் நாட்டில் எவருக்கும் எதிர்காலம் இல்லை என்பது தெளிவாகிறது. இது நீடித்தால் அன்று வடக்கில் நடந்தது, இன்று நடந்துகொண்டிருப்பது, தெற்கிலும் உருவாகும் என்றும் அந்தக் கூட்டமைப்பு அபாயக் குரல் எழுப்பியது.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற, கைதான யாழ். பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கான கூட்டமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நவசமசமாஜக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன, ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளர் பாஸ்கரா, புதிய ஜனநாயக மாக்ஸிச லெனினிஸக் கட்சியின் செந்திவேலன், அருட் சகோதரர் சக்திவேல், ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் இணைப்புச் செயலாளர் தம்மிக்க டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கொள்ளுப்பிட்டி புனித மைக்கல் தேவாலயத்தின் அருட் சகோதரர் சக்திவேல் அங்கு தெரிவித்ததாவது-

தமது குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நீதி இல்லை. அது பக்கச் சார்பான முறையில் செயற்படுகின்றது. அதனால் அந்தத் தெரிவுக்குழு மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்த பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணைகளிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

பிரதம நீதியரசரும், பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவருமான கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவே தெரிவுக்குழு நடவடிக்கை குறித்து நம்பிக்கை இல்லை என்று கூறுகின்றபோது, தமக்கு நியாயமான அரசியல் தீர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ்த் தலைவர்கள், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்குபற்ற முடியுமா? அதில் நம்பிக்கை வைக்கமுடியுமா?

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாது, சிங்கள மக்களுக்கும் தொடர்ச்சியாக அநீதி இழைப்பதின் ஊடாக இந்த நாட்டில் எவருக்கும் எதிர்காலம் இல்லை என்றே அரசு கூறுகிறது. தமிழ் மக்கள் மீது அடக்குமுறை மேற்கொண்டு தமிழ் இளைஞர்கள் மீண்டும் ஆயுதமேந்த இடமளியாதீர்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் என்று தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து தாம் பயங்கரவாதி என அரசு காட்டுகின்றது. வடக்கு மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதுபோல தெற்கு மக்களது உரிமைகளும் பறிக்கப்படும் நிலை தோன்றும்.

நீதித்துறையை நிறைவேற்றதிகாரம் அடக்குமாயின், வடக்கில் அன்று நடந்தது இன்று நடந்துகொண்டிருப்பது தெற்கிலும் உருவாகும் - என்றார். (சி)

# வாகனம் மோதிய சிறுவன் நேற்று உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.8

மல்லாகத்தில் நேற்றுமுன்தினம் வாகன விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 4 வயதுச் சிறுவன் சிகிச்சை பயனளிக்காது நேற்று வெள்ளிக்கிழமை உயிரிழந்தான்.

இந்த விபத்து மல்லாகம் சந்தியில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் தாயாரான ஆர்.கலைச்செல்வி (வயது-32), மகனான ஆர். விஷால் (வயது-4) ஆகியோர் படுகாயமடைந்திருந்தனர்.

இந்நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காது சிறுவன் நேற்று உயிரிழந்தான். சிறுவனின் தாயாரான கலைச்செல்வி தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த 'ஹைஏஸ்' வாகனமே பொலிஸாரைக் கண்டதால் வேகமாகச் சென்று கட்டுப்பாட்டை இழந்து தபால்பெட்டியுடன் மோதிப் பின்னர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த தாயையும், மகனையும் மோதி, அருகிலிருந்த மதிலையும் உடைத்து நின்றது.

வாகனத்தின் கீழிருந்து சிறுவன் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பயனின்றி சிறுவன் உயிரிழந்தான். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். வாகனச் சாரதி மல்லாகம் நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (த-4)

# சாதாரண தர மாணவருக்கு போக்குவரத்துச் சேவைகள்

கொழும்பு,டிசெ. 8

ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்காக உரியமுறையில் போக்குவரத்து சேவைகளை வழங்குமாறு போக்குவரத்து ஆணைக்குழு, மாகாணகப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு தொடர்ச்சியான போக்குவரத்து சேவைகள் மூலம் சிறந்த ஒத்துழைப்பை பெற்றுக்கொடுக்கவுள்ளதாக போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரோஹான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி பரீட்சை நடைபெறும் காலங்களில் மாணவர்கள் பயணிக்கும் பஸ்களில் வானொலிகளை சத்தமான ஒலிபரப்புதல், கண்டெக்டர்கள் சத்தமாக பேசுதல், அதிக ஆட்களை ஏற்றுதல் போன்ற விடயங்களை தவிர்க்குமாறு போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் மாகாண அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார். (த)

# பிரதம நீதியரசர் ஷிராணியின் வெளிநடப்பு நியாயமானதே

## சட்டத்தரணிகள் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தெரிவுக்குழு விசாரணையின் போது பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க இடைநடுவில் வெளிநடப்பு செய்தமை நியாயமான விடயம் எனச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டிலுள்ள அனைத்துச் சட்டத்தரணிகள் சங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி சட்டத்தரணிகள் சிலர் நேற்று புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ள சிலரது நடவடிக்கையால் பிரதம நீதியரசருக்கு அத்தெரிவுக்குழு முன் முன்னிலையாவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகச் சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றி பேசும் இந்த அரசின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் பிரதம நீதியரசரை நடத்தும் விதம் கவலைக்குரியது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

# 21ஆம் திகதி உலகம் அழியாது வெறும் கட்டுக்கதை என்கிறது அமெரிக்கா!

வரும் 21 ஆம் திகதியுடன் மாயன் நாள்காட்டி முடிவதால், உலகம் அழியப் போகிறது என்ற வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்கா உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அமைதியாய் இருங்கள்- உலகில் எந்த மாற்றமுமே டிசம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறப்போவதில்லை. மாயன் நாள்காட்டியில் கூட ஓர் ஆண்டுக்கான சுற்று டிசம்பர் 21ஆம் திகதி முடிந்து புதிய ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி தொடங்குகிறதே தவிர அந்த நாள்காட்டியின் ஊழிக்காலம் முடியவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படியான வதந்திகள் கடந்த காலங்களிலும் பல்வேறு விதமாக வந்திருக்கின்றன. உலகம் அழியப் போகிறது என்ற வதந்தி 2003, 2004 ஆம் ஆண்டுகளில் கூட பரவின. எந்த ஓர் அழிவோ மாற்றமோ டிசம்பர் 21 ஆம் திகதி இடம்பெறப்போவதில்லை. அது மற்றைய நாள்களைப் போல சாதாரண நாள்களே. கிரகங்கள் பூமியை நோக்கி வருகின்றன. எரிகற்கள் விழப்போகின்றன என்பதெல்லாம் கட்டுக்கதை என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# ஆஸி புகலிடக் கோரிக்கையாளர் 400 பேருக்கு இணைப்பு விசா அனுமதி

ஆஸ்திரேலியாவின் தடுப்பு முகாமில் உள்ள 400 புகலிடக் கோரிக்கையாளர் விசா அனுமதி வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இணைப்பு விசா வழங்கப்பட்டே இவர்கள் விடுவிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை ஆப்கானிஸ்தான் மற்றும் ஈரான் போன்ற நாடுகளைச் சேர்ந்த அகதிகளுக்கே இவ்வாறான இணைப்பு விசாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் டார்வினிலிருந்து வெளியேறி விக்டோரியா, குயின்ஸ்லாண்ட் போன்ற இடங்களில் குடியமர்வார்கள் என்றும் அந்தச்செய்திகள் குறிப்பிடுகின்றன.

வேலை செய்வதைத் தடுக்கும் வகையில் இவர்களுக்கு இணைப்பு விசா வழங்கப்பட்டிருப்பதுடன், இவர்களுக்கு அடிப்படையான சில நலன்புரிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுமென ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இணைப்பு விசாக்கள் வழங்கப்படுமென கடந்த வருடம் நவம்பர் மாதம் ஆஸ்திரேலியா அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து இதுவரை 8500 புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இந்த இணைப்பு விசாக்கள் வழங்கப்பட்டிருப்பதாக ஆஸ்திரேலியச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை, ஆஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து 56 இலங்கையர்கள் மனுத்தாக்கல் செய்திருப்பதால் அவர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்ப முடியாது எனக் கூறுவது நடைமுறைச் சாத்தியமற்றது என ஆஸ்திரேலியாவின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவன் தெரிவித்துள்ளார். இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான காரணங்களைக் கூறியிருப்பதால் அவர்கள் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

எனினும், அவர்களின் விசாரணைகள் முடியும் வரை திருப்பி அனுப்ப முடியாது எனக் கூற முடி யாது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை படகுகள் மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றவர்களில் 46 இலங்கையர்கள் நாடு திரும்புவதற்குத் தாமாகவே முன்வந்துள்ளனர்.

இலங்கை தமிழர்கள் 56 பேரின் நாடு கடத்தலுக்கு எதிராக சிட்னி நீதிமன்றம் தடையுத்தரவு விதித்தமையை ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தில் உள்ள தமிழர்களின் அமைப்பான தமிழ்ச்சங்க சம்மேளனம் வரவேற்றுள்ளது.

இலங்கையின் உண்மையான தமிழ் அகதிகள் விடயத்தில் ஆஸ்திரேலிய அரசாங்கம் உரிய முனைப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. (3)

# நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

கொழும்பு, டிசெ.8

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒருதலைப் பட்சமாகவும், பக்கச்சார்பாகவும் செயற்படுவதால் அங்கு நீதியையும் நியாயத்தையும் எதிர்பார்க்கமுடியாது எனக் கூறி எதிர்க்கட்சிகள் அனைத்தும் நேற்று மாலை நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப் புச் செய்தன.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தின் போதே ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும்ஜே.வி.பி உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக சபையை விட்டு வெளியேறினர். விவாதத்தில் ஆளும்கட்சிக் கொரடாவும்அமைச்சருமானதினேஷ் குணவர்தனவின் உரையைத் தொடர்ந்து எதிர்க்கட்சிக் கொரடாவான ஜோன் அமரதுங்க சபையில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்புவதாகக் கூறி எழுந்துநின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சி கொரடா இரண்டாவது தடவையாகவும் உரையாற்ற முயற்சிக்கின்றார், எனவே அவருக்கு இடமளிக்கக் கூடாது எனக் கூச்சல் எழுப்பினர். சபையில் ஒரே கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. இதனால் ஜோன் அமரதுங்கவுக்கு ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப வாய்ப்பளிக்கப்படவில்லை.

எனினும், அமைச்சரைத் தொடர்ந்து உரையாற்ற ஜே.வி.பி. உறுப்பினரான விஜித்த ஹேரத் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிட்டியது. இவரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களுள் ஒருவர். இந்தச் சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்திக் கொண்டார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் குழுவினர் பிரதம நீதியரசரைப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடனேயே திட்டமிட்டு விசாரணைகளை நடத்துகின்றனர்.

பிரதம நீதியரசர் தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. தெரிவுக் குழுத் தலைவர் உட்பட ஆளும் கட்சி உறுப்பினர்கள் பிரதம நீதியரசருக்கும், அவரது சட்டத்தரணிகளுக்கும் உளரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில் கேள்விகளைக் கேட்டு அவரை அவமானப்படுத்தி வெளியேற்றும் வகையிலேயே நடந்துகொண்டனர்.

பிரதம நீதியரசர் மீதான குற்றப்பிரேரணைகள் தொடர்பான விசாரணையாக இல்லாமல், அவரை அரசியல் பழிவாங்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணையாகவே தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனது பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவேண்டியது அரசின் கடமை. ஆனால் இன்று பிரதம நீதியரசரின் பாதுகாப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது.

எனவே, அரசின் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளைக் கண்டித்து இந்தச் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்கிறோம் என்று அறிவித்தார் விஜித்த ஹேரத். இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சபையில் இருந்து வெளியேறினர்.

பாதுகாப்பு அமைச்சு தொடர்பான விவாதம் எதிர்க்கட்சிகளின் பங்களிப்பு இன்றியே நடைபெற்றது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியாட்டம் இன்று





யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நீண்ட கால இடைவேளையின் பின்னர் பாடசாலை மட்டத்தில் 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையில் நடாத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. 3 ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்.மத்திய க்ல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதவுள்ளது.

நேற்று மாலைஅரையிறுதி ஆட்டம் இடம்பெற்றது.

முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் மானிபாய் இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும், முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

மாலை 6 மணிக்கு

கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சுப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழகம்

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தி வரும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் காலிறுதியாட்டம் ஒன்று இன்று சனிக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

## உள்ளூராட்சி வார கிரிக்கெட் போட்டி
## மாநகரசபையிடம் மாண்டது கோப்பாய்

வலி.வடக்கு,டிசெ.8

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.தெற்கு பிரதேச சபை உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே நடத்திய மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்.மாநகர சபை "பி" அணி எட்டு விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கிழக்கு கோப்பாய் பிரதேச சபையும் யாழ்.மாநகர சபை 'பி' அணியும் மோதிக் கொண்டன.

**கோப்பாய் பிரதேச சபை அணியை யாழ்.மாநகர சபை "பி" அணி எட்டு இலக்குகளினால் வெற்றி பெற்றது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய மாநகர சபை "பி" அணி 12 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது. நிமலன் ஆட்டமிழக்காது 85 ஓட்டங்களையும்,நிஷாந்தன் 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

கோப்பாய் பிரதேச சபையைச் சேர்ந்த சர்வேசன் 02 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக் குகளை கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச சபை 11.3 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது.

லிங்கநாதன் 15 ஓட்டங்களையும், மகாதேவன் 11 ஓட்டங்களையும் பெற்றார்கள்.யாழ். மாநகர சபை 'பி' அணியைச் சேர்ந்த பிரதீபன், சுவர்ணன், நிமலன், சுகந்தன் தலா 02 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (த-86)

## வடமராட்சி வலயப் பாடசாலைகளின் உதைபந்துப் போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம்,டிசெ .8

வடமராட்சி கல்வி வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரை இறுதியாட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான அரையிறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டதில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 1:0என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அல்வாய் றோ.க.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

16 வயதுப் பிரிவு ஆண்களுக்கு இடையிலான அரையிறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் நெல்லியடி மத்திய மகா வித்தி யாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற ஆட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியை எதிர்த்து அல்வாய் றோ.க.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் அல்வாய் றோ.க. த.க. பாடசாலை அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## முல்லையில் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ .8

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள 'சோஆ' நிறுவனத்தின் திட்டக் கிராமங்களைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்களுக்கு " விளையாட்டின் ஊடாக சமாதனம்" என்னும் தொனிப்பொருளில் உதைபந்தாட்ட,கரப்பந்தாட்ட, கபடி பயிற்சி முகாம் இன்றும் நாளையும் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பயிற்சி முகாம் நிறைவில் பங்கு பற்றிய வீர, விராங்கனைகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன எனத் திட்ட இணைப்பாளர் எட்வின் ராஜ்குமார் தெரிவித்துள்ளார். (த-23)

## இனி துரையப்பா மைதானம் உதைபந்தாட்டப் போட்டிக்கு



யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்துடன் தொடர்புகொண்டு எதிர்காலத்தில் உதைபந்தாட்டப் போட்டிகளையும் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடத்துவதற்கு அனுமதி வழங்குவது என யாழ்.மாநகர சபையின் நவம்பர் மாதப் பொதுக் கூட்டத்தில் முடிவுசெய்யப் பட்டது.

சர்வதேச மட்டத்தில் எமது மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்லும் நிலையில் அவர்களுக்கு உதவியளிக்கக் கூடியதாக நாங்கள் வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உரிய இடம் கிடைக்காத காரணத்தால் உதைபந்தாட்டப் போட்டிகள் வேறு பகுதிகளில் நடைபெறுகின்றன.

துரையப்பா அரங்கில் இதற்கான வசதிளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். போட்டிகளுக்கான அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும் பட்சத்தில் சபைக்கு ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-7-23)

## நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு நெத்தியடி கொடுத்தது கொக்குவில் இந்து

யாழ்ப்பாணம்,டிசெ 8

இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி மோதிக் கொண்டது.

முதலில் நாணயச் சுழற்சியில் மத்திய மகாவித்தியாலய அணி துடுப் பெடுத்தாட தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப் பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 34 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கிருத்திகன் 20 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றார்.

பந்து வீச்சில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சாருஷன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களைக் கொடுத்து 7 இலக்குகளையும், தனுசன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப் பெடுத் தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 143 ஓட்டங்களைப் பெற்றது.

தனுக்ஷன் 53 ஓட்டங்களையும், பானுஜன் 27 ஓட்டங்களையும், சகயராஜ சில்வா 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி சார்பில் தர்சிகன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், அனோஷன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும் ,பிருந்தாபன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கையும் ,கம்ஷன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 1 இலக்கினையும் வீழ்த்தினர்.

ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது கொக்குவில் இந்துக் கல்லூரி. இரண்டாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 69 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் ரகிசன் 15 ஓட்டங்களையும் சிவப்பிரியன், அன்பரசன் ஆகியோர் தலா 10 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சகயராஜ்சில்வா 7.4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும், சாருஷன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், டிருஷன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும், றொஷாந் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும் வீழ்த்தினர். ( த- 23)

## கம்பஹா அணியை வீழ்த்தி காலிறுதிக்கு யாழ். அணி

வலி.வடக்கு,டிசெ.8

கம்பஹா மாவட்ட அணியை காலிறுதியில் வென்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாட யாழ்.மாவட்ட செயலக அணி தகுதி பெற்றுள்ளது.

இலங்கை விளையாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் அரச ஊழியர் நலன்புரி சங்கம் மாவட்டத் திணைக்கள அணிகளுக்கு இடையே நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டி கொழும்பு றொறில்ரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. கம்பஹா மாவட்ட அணியும் யாழ்.மாவட்ட செயலக அணியும் காலிறுதி ஆட்டத்தில் மோதிக் கொண்டன.


போட்டி ஆரம்பத்தில் இரு அணிகளும் பலம் மிக்க வகையில் மோதிக் கொண்டன.

யாழ்.மாவட்ட செயலக அணியின் துடிப்பான ஆட்டத்துக்கு கம்பஹா அணியால் ஈடு கொடுக்க முடியவில்லை.

முதல் பாதி ஆட்டத்தில் யாழ்.மாவட்ட செயலக அணி 10:03 என்ற புள்ளிகளைப் பெற்று முன்னிலையில்இருந்தது இரண்டாம் பாதி ஆட்டத்தில் யாழ் .மாவட்ட செயலக அணி அமைதியாக விளையாடி 9:2 என்ற புள்ளிகளைப் பெற்றுஆட்ட நிறைவில் யாழ்.மாவட்ட செயலக அணி19:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. அணியில் விளையாட மாட்டேன்- வோர்ன்



ஆஸ்திரேலிய அணி சார்பாக மீண்டும் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றும் எண்ணமேதும் கிடையாது என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார். ஏற்கனவே தான் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகவே ஷேன் வோர்ண் விளக்கமளித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்று முடிந்த தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுத் தடுமாறியிருந்த நிலையில், அடுத்தாண்டு 2 ஆஷஷ் தொடர்கள் இடம்பெறவுள்ளதால், ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் கேட்டுக் கொண்டால் ஆஸ்திரேலிய அணி சார்பாக மீண்டும் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றத் தயாராக உள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், தனது கருத்துக்கள் தொடர்பாக மீண்டும் விளக்கமளித்துள்ள ஷேன் வோர்ண், அவ்வாறான மீள்வருகை தனது எண்ணத்தில் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அத்தோடு தனது கருத்துக்கள் தொடர்பாக ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கிற்கு விளக்கமளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மைக்கல் கிளார்க்கைச் சந்தித்து பல்வேறுபட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதாகத் தெரிவித்த ஷேன் வோர்ண், அத்தோடு ஏற்படக்கூடிய அனைத்துக் குழப்பங்களையும் மைக்கல் கிளார்க்கோடு கலந்துரையாடித் தீர்த்துக் கொண்டதாக அவர் தெரிவித்தார்.

தான் மீண்டு கிரிக்கெட் போட்டியில் பங்குபற்ற விரும்புவதாகத் தெரிவிக்கவில்லை எனத் தெரிவித்த ஷேன் வோர்ண், மைக்கல் கிளார்க் கேட்டுக் கொண்டால் மறுக்க முடியாது என்றே தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். (5)

# சச்சினின் சப்பாத்து நூலைக் கூடக் கட்டத் தகுதியற்றவர்கள்



இந்தியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் சப்பாத்து நூலைக் கட்டக்கூட தகுதியான நபர்கள் நம்மிடம் இல்லை என்று ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும், தற்போது தொலைக்காட்சியில் வர்ணனையாளருமாக பணியாற்றிக் கொண்டிருப்பவர் ரவி சாஸ்திரி.

கொல்கத்தா டெஸ்ட் ஆட்டம் குறித்து இவர் கூறுகையில், சச்சின் டெண்டுல்கருக்கு மாற்றான, இணையான வீரர் நிச்சயம் நம்மிடம் இல்லை.

ஏன், சச்சினின் சப்பாத்து நூலைக் கட்டக் கூட தகுதியானவர்கள் நம்மிடம் இல்லை. மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது குறித்து எனக்கு கவலையில்லை.

சச்சினுக்கு பலமுனைகளிலிருந்தும் நெருக்கடிகள் உள்ளன. ஆனால் அதையும் மீறி அவர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி உள்ளார் என்று தெரிவித்துள்ளார். (5)

# இங்கிலாந்தின் கையில் ஆட்டம்

இங்கிலாந்து அணி நேற்றைய தினமும் தனது சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியை திணறடித்தது. அணித் தலைவர் குக் 10 ஓட்டங்களால் இரட்டைச் சதத்தைத் தவறவிட்ட போதும் இங்கிலாந்து அணியின் சகல வீரர்களும் கைகொடுக்க நேற்றைய ஆட்ட நேர நிறைவில் இங்கிலாந்து அணி 6 இலக்குகளை இழந்து 509 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதலிரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு ஆட்டங்களில் வெற்றி பெற்ற நிலையில் மூன்றாவது ஆட்டம் கொல்கத்தாவில் கடந்த புதன்கிழமை தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணியால் முதலாவது இன்னிங்ஸில் தட்டுத்தடுமாறி 316 ஓட்டங்களையே பெற முடிந்தது. துடுப்பாட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் 76, கம்பீர் 60, டோனி 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் பனஷார் 4, அண்டர்சன் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து அணி இரண்டாவது நாள் ஆட்ட நேர நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 216 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் குக் 136, ரொரட் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருந்தனர்.


இந்த நிலையில் நேற்றைய மூன்றாவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்ட ஆரம்பத்தில் மெதுவாகவே இங்கிலாந்து அணி ஓட்டங்களைச் சேகரித்தது. இந்திய அணி ஆரம்பத்திலிருந்தே சுழல் பந்து வீச்சைப் பயன்படுத்திய போதும் அதனால் பலன் ஏதும் கிடைக்கவில்லை. சிறப்பாக ஆடிய ரொரட் தனது 13 ஆவது அரைச் சதத்தைக் கடந்தார்.

இரண்டாவது இலக்குக்காக 173 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் ரொரட் 87 ஓட்டங்களுடன் வெளியேறினார். சிறிது நேரத்திலேயே குக் 190 ஓட்டங்களுடன் துரதிஷ்டவசமாக 'ரன் அவுட்டானார்'. கெவின் பீற்றர்ஸன் வழமையான பாணியில் ஆடிய போதும் மறுமுனையில் பெல் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 395 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

பீற்றர்ஸன் 28 ஆவது அரைச் சதத்தைக் கடந்த நிலையில் வெளியேறினார். சிறிது நேரம் சிறப்பாக ஆடிய சமித் பட்டேல் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 453 ஓட்டங்களுக்கு 6 ஆவது இலக்கை இழந்தது.

அதன் பின்னர் இணைந்த மட் பிரையர், சுவான் இருவரும் நேற்றைய ஆட்ட நேர நிறைவு வரையில் இங்கிலாந்தின் இலக்கு இழப்பை தடுத்தனர்.


இந்த இணையின் சிறப்பான தடுப்பாட்டத்தினால் நேற்றைய நாள் நிறைவில் இங்கிலாந்து அணி 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 509 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் பிரையர் 40, சுவான் 21 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்டுள்ளனர். பந்து வீச்சில் ஓஜா 3 இலக்குகளைக் கைப்பற்றினார். (5)



விளையாட்டுச் செய்தியாளராக நீங்களும் விரும்புகிறீர்களா?

உதயனின் விளையாட்டு செய்தியாளராக உங்களுக்கு விருப்பமா?

துடிதுடிப்பான இளைஞர், யுவதிகளை எதிர்பார்க்கின்றோம்.



ஆர்வமுள்ளவர்கள் நாளை (08.12.2012) சனிக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் 12 மணி வரை நேரில் வரவும்.

உதயன் வெளியீட்டகம்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெரேரா கலக்குவார்

ஆஸ்திரேலியாவின் 'ரி-20' தொடரான பிக்பாஷ் லீக் தொடரில் இலங்கை அணியின் இளம் சகலதுறை வீரர் திஸர பெரேரா சிறப்பாகச் செயற்படுவார் என்று எதிர்பார்ப்பதாக ஆஸ்திரேலிய அணியின் உப தலைவர் ஷேன் வொற்சன் தெரிவித்துள்ளார்.

பிறிஸ்பேண் ஹீற் அணியில் இடம்பெற்றிருந்த ஸ்ரெய்ன் நீங்கியதை அடுத்து இலங்கை அணியின் இளம் வீரரான திஸர பெரேரா பிறிஸ்பேண் ஹீற் அணியால் ஒப்பந்தம் செய்யப்பட்டார். புதிய ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே ஷேன் வொற்சன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

திஸர பெரேராவை ஒப்பந்தம் செய்தமை மிகச்சிறப்பானது எனத் தெரிவித்த ஷேன் வொற்சன், திஸர பெரேரா மிகவும் திறமை வாய்ந்த ஒரு சகலதுறை வீரர் எனவும் தெரிவித்தார். அண்மையில் இலங்கையில் நடந்து முடிந்த உலக 'ரி-20' தொடரில் அவர் வெளிப்படுத்தியதைப் போன்று திஸர பெரேரா பந்துகளை மிகவும் நீண்ட தூரத்திற்கு அடிக்கக்கூடிய திறமை வாய்ந்தவர் எனவும் ஷேன் வொற்சன் தெரிவித்தார். (5)


யாழ் நகர் நல்லூர்
றோயல் அக்கடமி
தரம் 06 முதல் O/L வரை
ENGLISH Medium Classes
தமிழ் மொழிமூல வகுப்புக்கள்
புதிய கல்வியாண்டு 2013 ஆரம்பம்: 10.12.2012
யாழ்.நகர் 9.30 a.m நல்லூர் 10.30 a.m

கணினி மலிவு விற்பனை
Intel Dual Core Full Set
(200GB, 2GB Ram, 19'' LED Monitor, DVD wr)
Free: WebCam/ 8GB Pendrive/ Head Phone
3 வருட உத்தரவாதம்
41500/=

St.Antony's.com
187,K.K.S. Road Jaffna.
2224865 / 0750698608
(சத்திர சந்திக்கு அருகில்)
HP i3, i5, Loptop Available
(14 வருட சேவையில்)

நிலப்பதிப்புக் கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

இருபதுக்கும் மேற்பட்ட வடிவமைக்கப்புக்களைக் கொண்ட நிலப் பதிப்புக் கற்களை யாழ். கிளிநொச்சி போன்ற இடங்களில் உள்ள காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்
பிரணவன் என்ரபிறைசஸ் இல:-365 பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக) T.P - 0773818799

தாவடியில் ஓர் புதிய உதயம்!
யாழ்–நல்லூர் றோயல் அக்கடமியின் புதிய கிளை
நியூட்டன் அக்கடமி
தாவடி பிள்ளையார் கோயில் அருகாமை
தரம் 06 முதல் O/L வரை
ஆரம்பம்: 10.12.2012 திங்கட்கிழமை காலை 10.00 மணி
ஆசிரியர் விபரம் உள்ளே


25வது வருட கல்விச் சேவையில்....
புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
புதிய கல்வியாண்டு - 2013
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 09-12-2012 ஞாயிறு 9.00மணி
அனுமதிகள் இன்று முதல்...

ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா
சட்டரீதியான ஆலோசனை பெற இறுதிநாள்- 15.12.2012
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016

நியூசிலாந்து Student Visa
IELTS தேவையில்லை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016

பட்டதாரிகள் இலகுவில் ஆஸ்திரேலியா செல்லலாம்
Skill Migration
ஆசிரியர்கள் என்றால் பட்டப்பின் கல்வியில் டிப்ளோமா அவசியம்.
IELTS இலவசம்
(நிபந்தனைகளுடன்)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212219016

40 வருட கல்விச் சேவையில் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்
விக்னா கல்வி நிறுவனம் 52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
தரம் 6 தொடக்கம் O/L வரை
புதிய கல்வியாண்டு 2013
தரம் வாய்ந்த தன்னிகரில்லா ஆசிரியர் குழாம்
கணிதம் : விக்கி, ரூபன்
விஞ்ஞானம் : தேவா, நிரோஜன், ஜெயவதனன்
ஆங்கிலம் : விஸ்வநாதன், செல்வரட்ணம்
தமிழ் : சபேஷன், சசிரூபன்
வரலாறு : பார்த்தீபன், கமல்
சமயம் : N.T தரன், சசிரூபன்
புவியியல் : கமல்
ஆரம்பம்: 10.12.2012 மு.ப 10 மணி
அனுமதிகள் இன்று முதல்

CHRISTMAS 2012
Time for Singing & Workshipping
Sing Carols and Christmas Songs With
Yamaha & Sai Sangetha Musical Instruments
Rush now Make this opportunity to enjoy your festive season

ILE Supply Chain Centre
NO-259, MAIN STREET, JAFFNA.
0214590807, 0773608642

புதிய பிரிவுகள் ஆரம்பம்
ICT - Grade 10 Mon -11.00 -Eng.Medium Mon-12.00 -Tam.Medium
ICT - Grade 11 புதிய பிரிவுகள்
ICT - A/L 2014/2013
MIS BIT Academy கடந்த 10 வருடங்களாக ..... Mr.R.Kumaran-B.Sc.
புதிய பிரிவு English/Tamil Medium
Gr. 10, O/L Maths Class - 20 years past papers
74,சபாபதி வீதி தலையாழி,யாழ். TP :0776577359

வீனஸ் பாம் உள்ளூரில் வளர்க்கப்பட்ட புறொயிலர் இறைச்சிக் கோழிகளை விரும்பிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
உயிர் நிறை 1Kg -300/-, சுத்தம் செய்தது 1Kg -460/-
வீனஸ் பாம், கலாசாலை வீதி (முத்துத் தம்பி மகாவித்தியாலய வடக்கு வீதி) திருநெல்வேலி. (26034)(9.14)
வீனஸ் பாம், அரசடி வீதி, நல்லூர் தேருச்சந்தி, யாழ்ப்பாணம்.

மொடேண் மற்ஸ் அக்கடமி
(பிரதேச செயலகம் அருகில் -சண்டிலிப்பாய்)
சண்டிலிப்பாய் பிரதேச மாணவர்கள் நன்கு அறிந்த பிரபலமான ஆசிரியர்களின் சேவையில்
ஆண்டு 4 தொடக்கம் 11 வரை
ஆரம்பம்- 09.12.2012 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 9.00 மணிக்கு (26506)(9.14)
நிர்வாகி : B.குகதாசன் (கணித ஆசிரியர்)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2013 புதுவருடத்தை முன்னிட்டு
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◊ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◊ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◊ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◊ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◊ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
புதிய வகுப்புக்கள் Batch I : 07-01-2013 Batch II : 12-01-2013 Batch III : 14-01-2013 Batch IV : 19-01-2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 07...

கடை வாடகைக்கு
NO.80, ஆரியகுளம் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும்
தொடர்பு: 0774340005 0750395664
(26536)(14)

தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு
எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்களும், குறைந்த காலத்தில் பயன் தரக்கூடிய தென்னம் நாற்றுக்களும் விற்பனைக் குண்டு.
தொடர்பு: 07...


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சுந்தரலிங்கம்



4 ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சுந்தரலிங்கம் (சித்தப்பா) நேற்று (07.12.2012) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஜோசேப் அல்பேட்- மரியமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி மெக்டலீனின் அன்புக் கணவரும், அன்ரனிற்றா பாமினி, அன்ரனிராஜ் (பிரான்ஸ்), கொலின் அஞ்சலோ ஆகியோரின் ஆசை மாமனும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் அரியமலர், இந்திரலிங்கம், ஐயன், செல்வமலர், சிவமலர், அற்புதமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விக்னேஸ்வரி, ஆறுமுகநாதன், ராஜேஸ்வரி, மரியகிறேஸ், நாகேந்திரம், அத்துலை, கஜேந்திரகுமார் ஆகியோரின் ஆசை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க திருப்பலிக்காக இன்று (08.12.2012) சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு காக்கை தீவு சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம், கட்டை, ஆனைக்கோட்டை. (26528)(3.14) தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர்
உலகம்
செய்வோம்
-பாரதிதாசன்.

# வார வசந்தம்



உதயன் 08 டிசெம்பர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# கொலை, கடத்தல், அச்சுறுத்தல்

## யாழ்.பல்கலைக்கழகத்துக்கு புதிதல்ல







■ பல்லவன்

தற்போதுதுமிழர்கள்யாவரும் அனைத்துப் பகுதிகளையும் அதிகமாக கவனம் கொள்ள வைத்த விடயமாக அண்மையயாழ்ப்பாணப்பல்கலைக்கழக சூழலில் இடம்பெற்ற செயற்பாடுகள் அமைந்துள்ளன. நவம்பர் 27ஆம் திகதி மாவீரர் நாளை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் அரசுக்கு விரோதமான நடவடிக்கைகள்; ஒரு வகையில் பயங்கரவாதத்தை மீளப் புத்துயிர்ப்பிக்கும் நடவடிக்கைகள் எனும் அடிப்படையில் நன்கு திட்டமிடப்பட்ட மாணவர்களின் கைதுகளின் பின்னர் தமிழ்த் தேசியப் போராட்டம் இன்னொரு கட்டத்துக்கு நகர்ந்திருப்பதாக பலரும் எழுதியும் பேசியும் வருகின்றார்கள். இந்த நிலையில் இந்தப் பிரச்சினையின் பின்னான விடயங்களை நடுநிலைத்தன்மை என்பதற்கு அப்பால் தமிழ்த் தேசிய இனத்தின் ஆரோக்கியமான எதிர்காலம் என்ற அடிப்படையில் தீவிரமாக ஆராய வேண்டியுள்ளது.

இந்தகைய சிந்தனைக்கு வழி திறக்கும் விதத்தில் அண்மைக் காலத்தில் எதிர்கொள்ளப்பட்ட, எல்லோரும் இலகுவில் ஞாபகம் கொள்ளக்கூடிய சிலவிடயங்களை மீண்டும் நினைவிருத்துவது பொருத்தமானது. குறிப்பாக, 2006ஆம் ஆண்டு யாழ். குடாநாடு தரைவழிப்பாதை தொடர்புகள் அற்று மூடப்பட்ட வேளை சமாந்தரமாக யாழ்.பல்கலைக் கழகமும் மூடப்பட்டது. அதற்கு முன்னாகவும் பின்னாகவும் நடைபெற்ற சில முக்கியமான விடயங்கள்காலவோட்டவேகத்தில் மறக்கப்பட்டுவிடக்கூடாது.

சம்பவம் 1

பேராசிரியர் மோகனதாஸ் துணைவேந்தராக இருந்த காலப் பகுதியில் பல்கலைக்கழக மாணவர்கள் போர் நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகம் நோக்கி நடத்திய அமைதிப் பேரணி, இராணுவத்தினரால் தடுக்கப்பட்டு மிகமோசமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு மாணவர்கள் மட்டுமன்றி பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப் பலரும் துப்பாக்கிப் பிடிகளாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டனர்.இத் தாக்குதலின் போது தன்னை துணைவேந்தர் என சிங்களத்தில் அறிமுகம் செய்த போதும் பேராசிரியர் மோகனதாஸும் அவரோடு சேர்த்து அப்போதைய கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவசந்திரனும் மோசமாக தாக்கப்பட்டிருந்தனர். படையினரின் இந்த மிலேச்சத்தனமான தாக்குதலில் மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் காண்டீபன் தலையில் படுகாயம் அடைந்து நினைவிழந்த நிலையில் பேராசிரியர் சிறிசற்குணராசாவின் துணிச்சலினால் வைத்தியசாலையில் உரிய நேரத்தில் சேர்க்கப்பட்டமையினால் உயிர்பிழைத்தார். இந்தப் போராட்டத்தில் அப்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த கஜேந்திரனும் பங்கெடுத்திருந்தமையுடன் பல பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர்களுடன் போராட்ட களத்தில் அன்று இருந்ததை குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவத்தை அடுத்து பல்கலைக்கழகம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டு இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் மீளத்திறக்கப்பட்டது.

சம்பவம் 2

2006 ஆம் ஆண்டு ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் பல்கலைக் கழக மாணவர்களுக்கு எதிரான வன்முறைகள் உச்சக் கட்டம் பெற்றன. பாதை மூடப்பட்ட மறுநாளே விஞ்ஞானபீட மாணவர் சிவசங்கர் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் பிரதீபன் ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்கு முன்னதாக பல்கலைக்கழக விடுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளும் இராணுவத்தினரால் தீவிரமான தேடுதல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு பல மாணவர்கள் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டனர். அன்றைய தினம் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் இருந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்த பகீரதன் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டார். இந்தச் சம்பவங்களை அடுத்து அச்சம் கொண்ட அப்போதைய மாணவர் ஒன்றியம் உடனடியாக தமது பொறுப்புக்களை புதியவர்களிடம் உரியசட்ட முறைமையான ஏற்பாடுகள் இன்றி கையளித்து விட்டு இராணுவத்தினரால் தமது உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கப்பட்

படையினரின் பாதுகாப்புடன் கப்பலேறித் திருகோணமலை வழியாக வெளியேறிவிட்டனர். மீதமாயிருந்த யாழ்ப்பாணத்தை வாழ்விடமாகக் கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்தை மீளத் திறப்பதில் தமக்கு இயலத்தக்க வழிமுறைகள் பலவற்றிலும் முயன்றவண்ணமிருந்தனர். அதேவேளை பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொலை அச்சுறுத்தல் பகிரங்கமாக விடுக்கப்பட்டு அவர்கள் இலக்குகளாகக்கப்பட்டனர்.

சம்பவம் 3

கொக்குவிலைச் சேர்ந்த விஞ்ஞான பீட மாணவர் நிருபராஜ் தனது வீட்டில் வைத்து கடத்தப்பட்டு மூன்று நாள்களின் பின்னர் கடுமையான தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் விடுவிக்கப்பட்டமையும், கலைப்பீட மாணவர் விஜயரூபன் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டமையும் முக்கியகடத்தல் விடுவிப்புக்களாகப் பதியப்பட்டன.

அதுபோன்று நெடுந்தீவைச் சேர்ந்த சசிக்குமார் என்ற கலைப் பீட மாணவன், பயண அனுமதி பெற புங்குடுதீவு கடற்படை முகாமுக்குச் சென்று திரும்பும் வழியில் காணமல் போய் இன்று வரை அவர் தொடர்பில் தகவல் எதுவும் இல்லை.கடத்தப்பட்ட மாணவர்களின் விடுதலை தொடர்பில் அப்போதைய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தரணியாகவிருந்த றெமீடியஸ் கருத்துக்களை உதவிகளுக்குரிய... தக்கபாங்களிப்பை ஆற்றியிருந்தார். இப்போது காலம் அவரையும் வெகுவாக மாற்றியிருக்கின்றது.

சம்பவம் 4

ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட மாணவர் பகீரதன் அப்போதைய பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேலின் விட்டுக்கொடுப்பற்ற சமயோசிதம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் பலன்கருதா சேவையாலும் ஆறுமாதங்கள் கழிந்தநிலையில் [illegible] விடுவிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வராமலேயே சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் புகுந்தார்.

அப்போது சுழற்சி முறையில் கலைப்பீடத்துக்கு உரித்தான பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பதவியை ஏற்க ஆண் மாணவர்கள் எவரும் முன்வராத நிலையில் புவியியல் துறை மாணவி ஜெயந்தா அப்பதவியை துணிந்து ஏற்று யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மிக முக்கியமான வரலாற்றைப் பதிந்தார். அவருக்கும் கூட மிகவும் கீழ்த்தரமான முறையில் அச்சுறுத்தல்கள், கடிதங்கள் மற்றும் தொலைபேசி வாயிலாக விடுக்கப்பட்ட வண்ணமேயிருந்தது.

சம்பவம் 5

சாவகச்சேரியில் வைத்து இந்துநாகரிகத்துறை மாணவர் சிவரஞ்சன், வரணியில் வைத்து அரசறிவியல் மாணவன் கமல்ராஜ், கொக்குவிலில் வைத்து ஊடகத்துறை மாணவர் நிலக்சன் என படுகொலைகளின் பட்டியலும் நீண்டு கொண்டேயிருந்தன. இறுதியாக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவராக இருந்த சமூகவியற்துறை மாணவன் புருசோத்தமன் பட்டப்படிப்பை நிறைவு செய்து இரண்டாம் மேல் நிலைவகுப்பில் சித்திபெற்று ஒரு வருடம் கழிந்த நிலையில் காட்டிக்கொடுப்பால் துரோகத்தனமாக படுகொலை செய்யப்பட்டதுடன் அப்போதைய பருவ காலத்துக்குரிய கொலைகள் முற்றுக்கு வந்தன.

அதேவேளை விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டதாக இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு கைதாகி பல்கலைக்கழக நிர்வாகத்தின் தலையீட்டால் விடுவிக்கப்பட்ட பின்னர் இராணுவ துணைக் குழுவாக செயற்பட்டு அதனால் விடுதலைப்புலிகளால் துரோகியாக அங்கீகரிக்கப்பட்ட மருத்துவபீட மாணவர் சுகந்தீபன் சுட்டுக்கொல்லப்பட்டமையும் பல்கலைக்கழக மாணவர்கள் சந்தித்த வன்முறைகளில் ஒன்றாக கவனம் கொள்ளப்பட வேண்டியது. அத்துடன் பல்கலைக்கழக வளாகத்துக்குள் வைத்து தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவரான யாழ். இந்துக் கல்லூரி மாணவன் குணேந்திரன் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட அவரது நண்பரால் சுட்டுக்கொல்லப்பட்டமையும் பல்கலைக்கழக சுகாதார ஊழியர் பீற்றர் நாவற்குழியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டமையும் பல்கலைக்கழக வன்முறைகளுக்குள் பதியப்படவேண்டியவை. தொழிலாளி பீற்றரின் கொலைக்காக அன்று ஒரு நிமிடம் தன்னும் பல்கலைக்கழக ஊழியர்கள் தமது பணிகளை நிறுத்தியிருக்கவில்லை என்பது பலரும் மறந்த செய்தி.

சம்பவம் 6

பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பல தடவை மிரட்டப்பட்டதுடன் கடமை நேரத்தில் சீருடையுடன் வைத்து தாக்கப்பட்டு இரத்தம் சிந்தும் காயங்களையும் காணவேண்டியிருந்தது. பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மக்கள் வங்கி கிளையின் பாதுகாப்பு உத்தியோகத்தரான வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் பல்கலைக் கழகவளாகத்துக்குள்வைத்துமாவீரர் நாளை அண்டிய ஓர் இரவுப் பொழுதில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சம்பவம் 7

இந்த வருடம் மாணவர் நினைவுத்தூபம் ஏற்றிய பல்கலைக்கழக வளாகத்துக்குள் உள்ள நினைவுச் சின்னம் அதிகாலைவேளையொன்றில் அத்துமீறி உள்நுழைந்த இராணுவச் சீருடை தரித்தோரால் அடித்து நொருக்கப்பட்டதுடன் மிகவும் அநாகரிகமான முறையில் நினைவுச் சின்னப் பீடப் பகுதியை அசிங்கப்படுத்திவிட்டு சென்றனர்.

இது போன்றே படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் நினைவாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாணவர் பொது வளாகத்தில் பேணிய நினைவிடமும் மாணவர்களின் படங்களும் ஓர் இரவுப்பொழுதில் அடித்து நொருக்கப்பட்டதுடன் அவர்களின் நினைவான சில செயற்பாடுகளை மேற்கொள்ள நிதி சேகரிக்கும் நோக்கில் வைக்கப்பட்டிருந்த உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பெருந்தொகைப் பணமும் திருடப்பட்டது.

(வாரவசந்தம் 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வறுமைஒரு தடையல்ல

தங்கம் மூனி

வறுமை எப்போதும் முன்னேற்றத்துக்கு தடையல்ல. நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி என்று கவியரசர் கண்ணதாசன் அவர்கள், இன்றைய இளைஞர்களிடம்தான் நாளைய எதிர் காலமே உள்ளது என்பதை அழுத்தமாகப் பாடியுள்ளார்.

ஒவ்வொரு தாய், தந்தையும் தங்களுடைய குழந்தைகளிடம், தங்கள் உயிரினும் மேலாக பாசம் செலுத்துகின்றனர். அவனை வளர்ப்பதில், தங்கள் நேரம், பணம், உழைப்பு, பாசம் அனைத்தையும் கொட்டி வளர்க்கிறார்கள்.

தன்னைவிட தன் மகன் அல்லது மகள், அவர்களது வாழ்க்கையில் நன்றாக வாழ வேண்டும் என்றே ஒவ்வொரு பெற்றோரும் நினைக்கிறார்கள்.

பெற்றோர்கள் ஒரு சாதாரண பள்ளியில் தான் படித்திருப்பார்கள். ஆனால் இன்று தங்களது பிள்ளையை ஓர் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைப்பார்கள்.

அவர்களுக்கு அணிய நல்ல உடைகள் கூட இருக்காது. இருப்பினும் தங்களது குழந்தைகளுக்கு நல்ல உடையும், உணவும் எப்படியாவது கொடுத்து பள்ளிக்கு அனுப்புகிறார்கள்.

தங்களது கவலைகளையும், பிரச்சினைகளையும், பிள்ளைகளின் மனத்தில் பதிய வைக்காமல், அவர்கள் நன்றாகப் படித்து முன்னேறட்டும் என்றே துடிக்கிறார்கள்! பெற்றோர்களின் உழைப்பில், ஆதரவில் வளர்ந்த இளைஞர்களாகிய நாம், அவர்களுடைய அருமையைப் பற்றி அறிந்து மதிப்புக் கொடுக்கிறோமா? இல்லை!

அவர்களின் கனவுகளையும், ஏக்கங்களையும் நிறைவேற்ற வேண்டியது நமது கடமையல்லவா?

இருபது வயதை அடைந்ததும் உனக்கென ஒரு லட்சியத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். உன்னுடைய சொந்த எதிர் காலத்தைப் பற்றிய முடிவுக்கு நீதான் வரவேண்டும்.

> “ஒவ்வொரு தாய், தந்தையும் தங்களுடைய குழந்தைகளிடம், தங்கள் உயிரினும் மேலாக பாசம் செலுத்துகின்றனர். அவனை வளர்ப்பதில், தங்கள் நேரம், பணம், உழைப்பு, பாசம் அனைத்தையும் கொட்டி வளர்க்கிறார்கள். தன்னைவிட தன் மகன் அல்லது மகள், அவர்களின் வாழ்க்கையில் நன்றாக வாழ வேண்டும் என்றே நினைக்கிறார்கள்.

துப்பாக்கி சுடப் பழகுபவன் ஒரு குறியை வைத்தே பழகுவான்! குறியில்லாமல் அவன் இஷ்டப்படி சுட்டால் என்ன ஆகும்? இலக்கே மாறிவிடும். அவனுக்கே ஆபத்துகள் வந்துவிடும் அல்லவா?

இருபது வயது முதல் முப்பது வயது வரை உள்ள ஆண்டுகளே உன்னுடைய வாழ்க்கைக்கு அடித்தளமிடும் காலகட்டமாகும். இந்தக் காலகட்டத்தில் நீ மட்டும் சரியாக ஓர் அடிப்படையை அமைக்க வில்லையெனில் உனது பிற்கால வாழ்வே வீணாகிவிடும்.

இந்த இளமைப்பருவத்தில் விளையாட்டும் நண்பரும் நிகழும் வேண்டியவைதான். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளேயே அவற்றை குறைத்துக்கொள்ள வேண்டும். அவைகளை ஒதுக்கி விடவும் வேண்டும். நிகழ் காலத்தைவிட உனது எதிர் கால வாழ்க்கையைப் பற்றியே எப்போதும் மனத்தில் நினைக்க வேண்டும்!

விதை நெல்லை ஒருவன் சமைத்துச் சாப்பிட்டு விட்டால் பின்பு எங்ஙனம் தனது நிலத்தில் விதையை விதைத்து அறுவடை செய்ய முடியும்? என்பதை எப்போதும் உன் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சிறந்த திறமைசாலிகளான எத்தனையோ இளைஞர்கள், காதல், கும்மாளம், டான்ஸ், குடிப்பழக்கம், விளையாட்டு என்று, அளவிற்கு மேல் ஈடுபட்டு தங்களது வாழ்க்கையை, அவர்களே அழித்துக் கொள்கிறார்கள் என்பதை நீங்களும் அறிவீர்கள். சிறுவயதில் தைத்த உன்னுடைய சட்டையைவிட உடல் எவ்வாறு வளர்ந்துள்ளதோ, அவ்வாறே தற்போதைய வேலைக்கு வேண்டியதைவிட உன்னுடைய திறமையும் உழைப்பும் அதிகமாக இருக்க வேண்டும்.

எப்போதும் உனக்காகக் கொடுக்கப்பட்ட வேலையைவிட சற்று அதிகமாக செய்தீர்கள் என்றால் அதுவே உங்களுடைய முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். கடின உழைப்பால் முன்னேறியவர்கள் உலகில் எத்தனையோ பேர். ஒரு நிறுவனத்தில் சாதாரண தொழிலாளியாக சேர்ந்து பிறகு அந்த நிறுவனத்துக்கு முதலாளி ஆகியவர்களும் இருக்கிறார்கள். காரணம் சரியான குறிக்கோளும், கடினமான உழைப்பும் தான்.

இங்கே வறுமை சிகரமாயிருக்கிறது..!!! வறுமை எப்போதும் முன்னேற்றத்துக்கு தடையல்ல.. ! உங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வறுமை ஒரு தடையே அல்ல!! உணர்வீர்கள்..! சிந்தித்து செயல் படுவீர்கள்..!!

# வாழ்க்கையை அதன் வழியில் ஏற்றுக்கொள்!



வலையுகம் ஹைதர் அலி

உலக இன்பம் அற்புதமானது. உலகம் சுவைகள் நிறைந்தது. உலகம் கவலை மிகுந்தது. உலகம் பல நிறங்களைக் கொண்டது. துக்கம், துன்பம், துயரம் ஆகியவற்றின் கலவைதான் உலகம். அதில் நீயும் ஒருவன்.

பிரச்சினைகள் இல்லாத இடமே இல்லை. உன் தந்தை, மனைவி, நண்பன் ஆகியோர் வாழ்விலும் நிச்சயமாகத் துயரங்கள் இருக்கும். உனது வீட்டிலும், தொழிலிலும் சிக்கல்கள் உருவாகும். எனவே, நன்மையின் குளிர்ச்சியால் தீமையின் வெப்பத்தை நீ தணித்துக் கொள்.

இறைவன் இந்த உலகத்தை முரண்பாடுகளால் அமைத்துள்ளான். நன்மை-தீமை, அமைதி-குழப்பம், மகிழ்ச்சி-கவலை என ஒவ்வொன்றிலும் இரு வேறு தன்மைகளை, நிலைகளை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். பசித்த பிறகு உண்கின்றாய், தாகித்த பிறகு நீர் அருந்துகின்றாய், களைப்புற்ற பிறகு உறங்குகின்றாய். நோயுற்ற பிறகு குணமடைகின்றாய். காணாமல் போனவன் விரைவில் வருவான். வழிதவறியவன் நேர்வழி பெறுவான். பரந்த பாலைவனத்தை நீ கண்டால், அதற்கப்பால் பசுமை நிறைந்த, மரங்கள் மிகுந்த அழகான தோட்டம் உண்டு என்பதைப் புரிந்துகொள். உறுதியான கயிற்றைக் கண்டால் அது ஒரு நாள் அறுந்து போகும் என்பதையும் நீ அறிந்துக் கொள். கண்ணீருக்குப் பிறகு புன்னகை உண்டு. அச்சத்துக்குப் பிறகு அமைதி உண்டு. அதிர்ச்சிக்கு பிறகு நிம்மதி உண்டு.

எனவே எதார்த்தமான வாழ்க்கையை மேற்கொள். கற்பனைகளில் மிதக்காதே! வாழ்க்கையை அதன் வடிவில் ஏற்றுக்கொள். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களைச் சகித்து வாழ்வதற்கு உனது ஆன்மாவைப் பக்குவப்படுத்து. இந்த உலகில் காயங்கள் அற்ற மனிதனையும், குறைகள் அற்ற பொருளையும் உன்னால் காண முடியாது. முழுநிறைவும், கவலையின்மையும் வாழ்க்கையின் பண்புகள் அல்ல. நீ மேடையில் இருந்து கையை எடுத்து இறங்கி நடந்து ஏழைகள் வாழும் பகுதியில் நின்று கொண்டு உன்னைச் சுற்றிலும் பார். வலப்பக்கமும், இடப்பக்கமும் பார். துயரப்படுவோரும், துன்பப்படுவோரும்தான் உனது கண்ணில் அகப்படுவர். ஒவ்வொரு வீட்டிலும் அழுகுரல். ஒவ்வொரு கன்னத்திலும் கண்ணீரின் அடையாளம். எல்லாத் திசைகளிலும் வலியின் ஓசை. உன்னைச் சுற்றி இதுதான் நடைபெறும்.

இந்த உலகில் நீ மட்டும் சோதிக்கப்படவில்லை. மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால் உனக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறைவானவையே. பல ஆண்டுகளாக நோயால் பாதிக்கப்பட்டு, உறக்கமின்றி இங்கும் அங்குமாகப் புரண்டு புரண்டு அவதிப்படுவோர் பலர் இருக்கின்றனர். நோயின் வலி தாளாமல் துடிப்பவர்களும், கதறுபவர்களும் அதிகம் உள்ளனர். வருடக்கணக்காக சிறையில் வாடுவோர் தாம் எத்தனை பேர்! சிறைக் கூடத்தைத் தவிர வேறெதையும் அறிய முடியாமல், தமது கண்களால் சூரியனைக் கூட பார்க்க இயலாமல் சிறையில் வாடுவோர் ஏராளம் ஏராளம். இளம் வயதிலேயே தம் செல்லப்பிள்ளைகளைப் பறி கொடுத்த தாயும் தந்தையும் இந்த உலகில் அதிகம் உண்டு. கடன் பிரச்சினையால் நொந்து போனவர்களும், பல்வேறு இன்னல்களால் மூச்சுத் திணறிக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர்.

முடிந்தது முடிந்துவிட்டது
எதிர்பார்க்கப்படுவது மறைவானது
நீ வாழ்ந்து கொண்டிருக்கும்
இந்த நேரம் மட்டும் உனக்குரியது.

நீ கவலைப்படாதே! ஏனெனில் உனது கவலையின் மூலம் சூரியனை, கால ஓட்டத்தை நிறுத்த நினைக்கிறாய். கடிகார முள்ளைப் பின்னோக்கி நகர்த்த முனைகிறாய். பின்னோக்கி நடக்க முயல்கிறாய். ஆற்றை அதன் பிறப்பிடத்துக்கு திருப்பி அனுப்பத் துடிக்கிறாய்.

நீ கவலைப்படாதே! கவலை, புயல் போன்றது. அது காற்றை நாசமாக்கும். பேரலைகளை உருவாக்கும். வானிலையை மாற்றும். இசைக்கும் தோட்டத்தின் கண்கவர் மலர்களை அழிக்கும். நீ கவலைப்படாதே! ஏனெனில் கவலை கடலில் குதித்து கடலிலேயே ஓடும் அறிவற்ற ஆற்றைப் போன்றது. கவலைப்படுவது உடைந்த பானையில் தண்ணீரை நிரப்புவதற்கு ஒப்பானது.

இறைவா! உறங்காத கண்களில் உன்னிடமிருந்து நிம்மதியான உறக்கத்தைப் போடு. தடுமாறும் மனங்களில் அமைதியை ஏற்படுத்து. அவற்றுக்கு வெற்றியைப் பரிசாக வழங்கு. தடுமாறும் பார்வைகளுக்கு உன் ஒளியினால் வழிகாட்டு. வழிதவறியவர்களுக்கு நேர்வழி காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தி

ஒரு சிறிய காட்டுப் பகுதியிலே ஒரு துறவி இருந்தார். பலர் அவரிடம் சென்று உபதேசம் கேட்பது வழக்கம். வருபவர்கள் எல்லோருக்கும் துறவி அறிவுரை கூறுவார். ஆறுதல் கூறுவார். அந்தத் துறவியிடம் அறிவுரை கேட்க ஒரு நாள் ஓர் ஆசாமி வந்தான். வந்த ஆசாமி எப்படிப்பட்டவன் தெரியுமா? வடிகட்டின கஞ்சன். மற்றவர்களுக்கு எதையும் கொடுத்துப் பழக்கப்படாதவன். அப்படி இருந்தும் அவனுக்கொரு ஆசை. தனக்கு முத்தி கிடைக்க வேண்டும் என்று, அதுக்கு என்ன வழி என்று தெரிந்து கொள்வதற்கு துறவியைத் தேடி அவன் வந்தான்.

"சுவாமி நான் முத்தியடைவதற்கு என்ன வழி" என்று கேட்டான். துறவி பொறுமையாகப் பதில் கூறினார். "நீ முத்தியடைய வேண்டும் என்றால் மகான்களும், சாஸ்திரங்களும் காட்டிய தார்மிக நெறிகளைப் பின்பற்ற வேண்டும். ஏழை எளியவர்கள், யாருமில்லாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்று கூறினார். அதற்கு அந்தக் கஞ்சன் சிறிது நேரம் சிந்தித்தான். 'இது எனக்கு மிகவும் கடினமாச்சே' என்று எண்ணினான். பின் ஒரு முடிவுக்கு வந்தான்.

இந்தத் துறவி சொல்லிறபடி நடந்தால்தான் நமக்கு முத்தி கிடைக்கும் போல இருக்கே! ஆனால் அதுக்கு நிறைய செலவு ஆகுமே. செலவு செய்தால் என்னிடம் உள்ள செல்வம்



எல்லாம் கரைந்து போயிடுமே. என்ன செய்வது...என்று யோசித்தான்.

ஆயினும் குறைந்த பட்சம் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பின்பற்றுவோம். அந்த அளவுக்கு முத்தி கிடைச்சா போதும் என்று முடிவு எடுத்தான். அதன்படி நடக்க ஆரம்பித்தான். தினமும் தன் கையாலே ஒரு பிடி அரிசி கணக்காக எடுத்துக் கொள்வான். அதை யாருக்காவது தானமாகக் கொடுப்பான். அவ்வளவு தான் அவன் தர்மம். இப்படியே தொடர்ந்து சில நாள்கள் செய்தான். சிலநாள் கழித்து மீண்டும் அந்தத் துறவியைப் போய்ச் சந்தித்து விட்டு வரலாம் என்று புறப்பட்டான். அதன்படி அந்தத் துறவியைச் சென்று பார்த்தான். அவனைக் கண்ட துறவி "என்னப்பா....நான் சொன்ன மாதிரி தானம் பண்ணிக்கொண்டு வருகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவன் "ஆமாம் சுவாமி! தினமும் தவறாமல் ஒரு கைப்பிடி அரிசியைத் தானம் செய்து வருகிறேன்" என்று பெருமையாகக் கூறினான். துறவி இதைக் கேட்டு ரொம்பப் பாராட்டப் போகிறார் என்று அவன் நினைத்தான்.

ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. ஒன்றுமே பேசாமல் மௌனமாக இருந்தார். அந்தச் சமயத்திலே துறவி ஒரு மரத்துக்கு கீழே தான் உட்கார்ந்திருந்தார். அந்த மரத்துக்கு அடிப்பாகத்திலே தன்னுடைய விரல் நகத்தினாலே கீற ஆரம்பித்தார். அதனைப் பார்த்த அந்தக் கஞ்சன் "என்ன இது... துறவி வாயைத் திறக்கவில்லையே" என்று பார்த்துக் கொண்டே நின்றான். பொறுமையை இழந்து "என்ன சுவாமி! நான் என்னோட தானத்தைப் பற்றி சொன்னேன். நீங்க அதைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் மரத்தைக் கீறிக் கொண்டிருக்கிறீர்கள்" என்றான். அதற்கு துறவி "ஒன்றுமில்லை.... நான் நகத்தாலே இந்த மரத்தை வெட்டிக்கொண்டிருக்கிறேன்... நீ கொஞ்ச நேரம் பேசாமல் இரு" என்றார். அதைக்கேட்ட கஞ்சனுக்கு சிரிப்பு வந்துவிட்டது.


"என்ன இது? கை நகத்தாலே இவ்வளவு பெரிய மரத்தை வெட்ட முடியுமா? கோடரியாலே செய்ய வேண்டிய காரியத்தை உங்களால் எப்படி நகத்தாலே செய்ய முடியும்?" என்றான். அதற்கு துறவி "ஒரு பிடி அரிசியைக் கொடுத்து விட்டு நீ மோட்சத்துக்குப் போக வேண்டும் என்று நினைக்கின்றபோது, நான் என்னுடைய விரல் நகத்தாலே இவ்வளவு பெரிய மரத்தை வெட்ட வேண்டும் என்று நினைக்கக் கூடாதா?" என்றார் துறவி. அப்பொழுதுதான் அவனுக்கு தான் செய்த தவறு புரிந்தது. அதற்குப் பின்தான் அவனுக்கு தெளிவு உண்டானது. அவன் துறவி கூறிய அறிவுரையைக் கேட்டுத் தெளிந்து ஒழுங்கான முறையில் தானங்கள் செய்தான். தானம் பெற்றவர்கள் வாழ்த்தும் போது மேலும் மகிழ்ச்சியடைந்தான். சொத்தைப் பற்றி நினைக்காது மீண்டும் மீண்டும் பல தானங்கள் செய்தான். நல்ல முத்தி நிலையையும் அடைந்தான்.

ஸ்ரீபத்மநாதன் யோகிதா, மானிப்பாய் மகளிர் கல்லூரி,

# இலங்கையில் பெயர் பெற்ற இடங்கள்



பனை-யாழ்ப்பாணம்



மங்குஸ்தான் களுத்துறை



உப்பு
ஆனையிறவு,
அம்பாந்தோட்டை,
புத்தளம்



தேயிலை-நுவரெலியா


தி.மேரி துஷைக்கா டயஸ்,
புனித சவேரியார் பெண்கள்
தேசியப் பாடசாலை,
5பி.



பிரம்புப் பொருள்கள்
வேவல்தெனிய



கருவாடு கற்பிட்டி



ரம்புட்டான்
மல்வானை

## வாழ்க்கையின் வழிகளே பிள்ளையின் கல்வியாம்

கண்டனத்திடையே வாழும் பிள்ளை-
கண்டனம் செய்யவே கற்றுக் கொள்ளும்
பகைமையினிடையே வாழும் பிள்ளை -
பலரையும் எதிர்க்கப் பழகிக் கொள்ளும்
கேலிகளிடையே வாழும் பிள்ளை -
கூசவும் நாணம் கொள்ளவும் பழகும்
பொறாமையினிடையே வாழும் பிள்ளை-
குற்றுணர்வு கொண்டிடப் பழகும்
சகிப்புச் சூழலில் வாழும் பிள்ளை -
பொறுமையுணர்வைப் போற்றப் பயிலும்
ஊக்குதலிடையே வாழும் பிள்ளை-
தன்னம்பிக்கை கொள்ளப் பயிலும்
பாராட்டுச் சூழலில் வாழும் பிள்ளை-
நயக்கும் திறமையை நன்கு வளர்க்கும்
நீதியின் வழியே வாழும் பிள்ளை -
நியாய புத்தியைக் கற்றுக் கொள்ளும்
காப்புணர்வுடன் வாழும் பிள்ளை -
விசுவாசத்தை விளங்கிக் கொள்ளும்
ஒப்புதலிடையே வாழும் பிள்ளை -
தன்னை மதிக்கும் தன்மையிற் சிறக்கும்
மற்றையோர் மதித்திட நட்பில்
வாழ் பிள்ளையோ-
இப்புவி தன்னில் இரங்குதல் காண்

நன்றி-
யுனெஸ்கோ
நிறுவனம்

## அறிந்து கொள்வோமா...

1. உலகின் மிகக் குளிர்ந்த இடம்?
அந்தாட்டிக்கா
2. உலகில் தேசியக்கொடி அற்ற ஒரே ஒரு நாடு?
மாசிடோனியா
3. உலகின் மிக உயரத்திலுள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்?
இந்தியாவில் இமயமலையில்
4. உலகின் முதல் சோதனைக் குழாய்க் குழந்தை?
லூயிஸ் பிறவுண்
5. ஒசாமா பின்லேடன் தலைமையிலான தீவிரவாத இயக்கம்?
அல்கெய்தா
6. உலகின் மிக அதிகமானோர் பேசும் மொழி?
சீனமொழி (மாண்டலீன்)
7. உலகின் மிக அதிக வெப்பமான இடம்?
லிபியாவிலுள்ள அல்ஜியா
8. மிகச் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?
யப்பான்
9. மிகப் பெரிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?
கிரேக்கம் (128 வரி)
10. அமெரிக்க அதிபரின் மாளிகை வெள்ளை மாளிகை எனப் பெயரிடப்பட்ட ஆண்டு?
1972

பா.யுகந்தன்
யா/புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்



## உவமைத் தொடர்கள்

உள்ளங்கை நெல்லிக்கனிபோல
நகமும் சதையும்போல
எறும்பு ஊர கல்லு தேய்வது போல
கல்லில் நார் உரிப்பது போல
ஆற்றில் கரைத்த புளிபோல
எலியும் பூனையும் போல
கண்ணை இமைகாப்பது போல
வயிற்றில் பால் வார்த்தது போல
தாயும் சேயும் போல
பாலின் வெண்மை போல

அ.சிரோன்கிசாந்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும், கிரந்தமும் : நீர்

(சென்றவாரத் தொடர்ச்சி)




சுங்கப் பறவையைப் போல்
இறைவனிடம் அன்பு கொள்
நிறைந்த குளத்து நீரும்
பச்சைப் பூமிப் பரப்பும்
அதற்குத் தேவை இல்லை
ஏந்திய வாயில் வீழும் ஒரு மழைத்துளிக்காய்
அது ஏங்குகிறது [கு.கி.60]

என்ற பாடல் மூலம் இறைவனைக் கடலுக்கு ஒப்புமையாகக் காட்டுகின்றார் குருநானக். இதில் கடல் அலைகள் கடலோடு கலப்பது என்பது இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளும் உயிரும் இறுதியில் இறைவனையே சென்றடையும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. உலகின் அனைத்துப் பொருள்களும் அவற்றின் செயற்பாடுகளும் இறைவனே என்று வலியுறுத்துகிறது.

**வாய்மையும் நீரும்:**

ஒரு மனிதனுக்கு அகம், புறம் என இரு பகுதிகள் உண்டு. அகம் என்பது மனமாகும். புறம் என்பது உடலாகும். மனம் தூய்மையாய் இருந்தால்தான் அவன் நல் ஒழுக்க நெறிகளைக் கடைபிடித்து வாழ முடியும். புறத்தை நீரால் தூய்மை செய்து கொள்ள முடியும் இதைத்தான் வள்ளுவர்.

"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மை யால்காணப் படும்" [குறள் -298]

என்கிறார். அதாவது புறம் தூய்மையாக விளக்குதல் நீரினால் ஏற்படும். அதுபோல அகம் தூய்மையாக விளங்குதல் வாய்மையில் உண்டாகும். இங்கு எல்லா நல்ஒழுக்கங்களுக் கும் அடிப்படை மனத்தூய்மை. இது வாய்மையால் அமையும். சீக்கியத்தில்

"புனிதக் கடலில் பரிசுத்த நீரால்
பல பிறவிகளின் அசுத்தம் கழுவப்படுகிறது"
[கு.கி. 1179]



என்னும் குரு ராம்தாஸ் பாடல்காணப்படுகிறது. இவ்வுலகப் படைப்புகள் யாவும் நீரால் கழுவப்படுவதன் மூலம் அசுத்தம் நீங்கி விடும் என்று கூறுகிறது. இப்பாடல் நீர் தூய்மையாக்குவது நீரினால் புனிதத்தன்மை பெற முடியும் என்ற கருத்தைக் கூறுகிறது.

இத்தகைய நிலையை வள்ளுவர், மனத்துக்கண் மாசிலன் ஆதல், அறம் என்று உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்கிறார். , நீரால் ஏற் படுத்தப்படும் தூய்மையும் மனிதனை நன்னெறிக்கு இட்டுச் செல்லும் எனலாம். எவ்வாறென்றால் மனிதன் செய்யும் பாவங்கள் நீரால் கரைக்கப்பட்டு விடும் என்ற நம்பிக்கை அன்று முதல் இன்று வரை பல்வேறு இனத்தாரிடமும் காண முடிகின்றது. வாய்மையால் அகத்தூய்மைப்படுத்திக் கொண்டால் போதாது. நீரினால் புறத்தூய் மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி நீரை வாய்மைக்கு ஒப்புமையாக்குவது காணமுடிகிறது.

**ஆட்சி முறையும் மழையும்:**

ஒரு நாட்டுக்குத் தலைவன் மன்னன். அவன் நல்லாட்சி, செங்கோலாட்சி நடத்தினால்தான் அந்நாட்டு மக்கள் சிறப்புடன் வாழ்வர். அந்நாட்டில் மழையும் பெய்து வளம் செய்விக்கும் என்று நம்பப்படுகிறது. இதனை திருவள்ளுவர்.

"முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்" [குறள் - 559]

என்னும் குறட்பாவால் உணர்த்துகின்றார். அரசன் முறை தவறி நாட்டை ஆட்சி செய்வானானால் அந்த நாட்டில் பருவமழை பெய்யாமல் போகும். அரசனது ஆட்சியில், பாரபட்சம், கொடுங்கோன்மை, சாதி வேறுபாடு, உயர்வு, தாழ்வு, ஏற்றத்தாழ்வுகள், பாகுபாடு வினைகள் இருந்தால் அந்த நாட்டில் பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் போய்விடும். மன்னவன் தான் செய்யும் ஆட்சியை முறை தவறிச் செய்தால் அந்நாட்டில் பெய்யும் பருவமழை பெய்யாமல் போகுமென்பது வள்ளுவரின் சிந்தனையாகும். சீக்கியத்திலும்

"எங்கே ஏழைகள் பேணிப்
பாதுகாக்கப் படுகிறார்களோ
அங்கு இறை அருள் எனும் மழை
தவறாமல் பொழிகிறது" [குருகிரந்தப்பாடல்]

என்று நம்பிக்கை உள்ளத்தைக் குருகிரந்தப் பாடல் எடுத்துரைக்கின்றது. எங்கு உயர்வு தாழ்வு இல்லையோ அங்கு நல்ல இடமும் பாரபட்சமில்லாத அரசனின் ஆட்சியும் மக்களை ஒரு குடையின் கீழ் நிறுத்தும், அத்தகைய இடத்தில் இறைவனின் அருள் மழையாகப் பொழிகிறது என்று கூறப்படுகிறது. குறளும் குருகிரந்த மும் நல்லாட்சி தான் மழை பெய்வதற்கு அடிப்படை என்ற நம்பிக்கை கொண்டுள்ளாமை விளங்குகின்றது.

1. அன்று முதல் இன்று வரை கடல்நீரை மக்கள் தாங்கள் பாவங்களைப் போக்க பயன்படுத்துகின்றனர். அந்த அடிப்படையில்குருகிரந்தப் பாடல்அமைந்துள்ளது. வள்ளுவர் எந்த நீர் என்று சொல்லவில்லை. 2. நீரால் புறத்துய்மை அமையும் என்ற நம்பிக்கை இரண்டு நூல்களிலுமே காணப்படுகிறது. 3. வள்ளுவர் இறைவனை நீருடன் ஒப்பிடவில்லை. குருகிரந்தம் நீரை இறைவனாகக் காண்கிறது. வள்ளுவர் சமயவாதி அல்ல. அதனால் சொல்லவில்லை. குரு கிரந்தம் சமயம் சார்ந்த நூல். அதனால் இறைவனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

(முற்றும்)

# விழுமியங்கள்

இராமஜெயபாலன்

"ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டில் ஆண் ஆதிக்க சமூகமும், பெண்ணாதிக்க சமூகமும் உண்டு. உதாரணம் பெண் வழியாக ஆஸ்தி மற்றும் அந்தஸ்து பரிமாற்றம், பெண்ணாதிக்க விழுமியமாகும். இதை ஒட்டு மொத்தமாகப் பிரதிபலிப்பது யாழ்ப்பாணப் பண்பாட்டு விழுமியம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

பல்வேறு விழுமியங்கள் புராண இதிகாச இலக்கியங்களூடாக ஆவணப்படுத்தப்பட்டிருப் பினும், அவை கேள்விக்கு உள்ளாகும் போது அவைகளை வலுப்படுத்த இன்றைய நிலையில் அழிந்தும் அழியாது இருக்கும் விழுமியங்களை ஆதாரப்படுத்த வேண்டியுள்ளது.

அதாவது மனித நாகரிகத்தில் முதலில் தோன்றி யது, பெண் வழிச்சமூகம். அதாவது பெண் பல ஆண்களை மணம் முடிப்பதை எடுகோளாகக் கொள்வது மகாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆண் வழிச்சமூகம், ஓர் ஆண் பல பெண்களைத் திருமணம் முடிப்பது, இது இராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு ஒருத்தி யென்ற பரிணாமம். இதுவும் இராமாயணத்தில் இராமன்- சீதை பாத்திரங்கள் வாயிலாக ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் ஒருவ னுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டில், ஆண் ஆதிக்க சமூகமும், பெண்ணாதிக்க சமூகமும் உண்டு. உதாரணம் பெண் வழியாக ஆஸ்தி மற்றும் அந்தஸ்து பரிமாற்றம், பெண்ணாதிக்க விழுமியமாகும். இதை ஒட்டு மொத்தமாகப் பிரதிபலிப்பது யாழ்ப்பாணப் பண்பாட்டு விழுமியம். இதன் தோற்றுவாயாக, அரசர்கள் தங்களுக்கு ஆண்வாரிசு இல்லாத சந்தர்ப்பத்தில் பெண்பிள்ளை யிடம் ஆட்சி அதிகாரத்தைக் கொடுத்தும், அந்த மகா ராணி தனது பிள்ளைக்கு, முன்னைய அரசனான தனது தந்தையின் பெயரை வைத்து ஏற்படும் ஆட்சி மாற்றமே பெண் வழிச்சமுதாய முறைக்கு வழிகோலியிருந்தாலும் அந்த வம்சத்தில் ஆண் வழிவம்சம் இல்லை என்றாகி விடாது, எவ்வாறாயினும் இந்த சம்பவங்களின் பின்னணி யில் பொதுமையான நடைமுறையேற்பட்டு பொதுப்பண் [illegible] விழுமியமாக, [illegible] சமுத்திரத்தின் [illegible] பெண் வழிச்சமூக மாக, அந்தஸ்து மற்றும் வம்சப் பெயர்களையும் கடத்தி வந்தமை முக்கிய விழுமியமாகும்.

இவ்வாறு விழுமியங்கள் புவியின் தோற்றம், உயிரினப்பரிணாமம், மனித நாகரிகம் என எல்லாவற்றிலும், ஒரே சம நோக்குடன் பேணப் பட்டாலும், அந்தந்த சமூக பரிணாம நோக்குக்குக் கொள்கைகளுக்கு முரணான விழுமியங்களும் சமூக மாற்றங்களின்போது மறைத்துக் கடைப்பிடிக்கப்பட்டு பின்னர் கலப்பு விழுமிய மாக இரண்டும் கெட்டான் நிலைமையை வெளிப்படுத்துவனவாகவும் உள்ளன அதாவது உலோகத்தில் திரவ உலோகம் இரசம், தாவரத்தில் ஊன் உண்ணும் தாவரம், பறவையில் வெளவால் மனிதரில் இரண்டு கலாசாரங்களுக்கு இடையே யான கலாசாரம் எனப் பல விசேட விழுமி யங்களும் உண்டு. இதனால் உலக நாகரிகம் மீண்டும் மீண்டும் புதுப்பித்த வரலாறுகளும் மறுமலர்ச்சியாகும்.

(முற்றும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வயதான பின்னர் மனிதனின் நிலை

மண்ணில் பிறந்த மனிதர்கள் அனைவரும், குடும்பத்திற்காகவும், தனது சந்ததிகளின் நலனுக் காகவும் உழைப்பதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வாழ்நாள் முழுவதும் உழைத்துக் கொண்டே இருக்கி றோம். தேகத்தில் சக்தி நிலையாக இருக்கும்போது, குடும் பத்தினர் தவிர பிறருக்காகவும் உழைக்க வேண்டி யிருக்கிறது. இப்படி உழைத்துக் கொண்டே இருக்கும் போது, ஒரு குறிப்பிட்ட வயதை எட்டியவுடன் தேக சக்தி குறைந்து, பெரியோர்கள், வயதானவர்கள், முதி யோர்கள் என்ற நிலைக்கு வரும்போது பிறருடைய உதவியுடன் வாழும் நிலை வருகிறது. குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி அவர்களுக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துத் தரும் வரை மாடாக உழைத்து, மண்ணோட்டி யாகத் தேகம் தேய்ந்து, வயதான காலத்தில் ஓய்வெ டுக்கும் நிலையில், உடல் ரீதியாகப் பலவித சவால் களைச் சந்திக்க வேண்டிய நிலை, தவிர்க்க முடியாத துன்பங்களில் ஒன்றாகி விடுகிறது. யாருக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் செலவிட்டோமோ?.. யாருக்கா கச் செல்வம் சேர்க்கப் பாடுபட்டோமோ?.. அவர்களால் கூட கடைசி கால கட்டத்தில், தங்களுக்கு உதவமுடி யாத சூழ்நிலையும் முதுமையோடு ஒட்டிக் கொள்கிறது.

கூட்டுக் குடும்பத்துடன் தொடங்கி குதூகலமாக வாழ்க்கை நடத்தியவர்கள், முடிவில் தங்களால்




வளர்த்து ஆளாக்கியவர்களால் கைவிடப்பட்டு முதியோர் இல்லங்களில் வாழும் நிலை இன்று நகர்ப்புறங்களில் பெருகி வருவது எதனால்?. குறுகிய காலத்தில் பெருந்தொகை ஈட்ட வியாபாரக் கூடமாகி விட்ட கல்வி நிலையங்களைப் போல, முதியோர் இல்லம் என்ற வணிகமும் சேர்ந்து பெருகி விட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்தத் தொழில்கள் வளர்ந்து வருவதே இதற்குச் சான்று. ஒரு குழந்தையை வளர்த்து ஆளாக்க பெற்றோர்கள் படும் இன்னல் கள், முதுமை அடைந்த பிறகும் அவர்களைத் தொடர்கிறது. சிறுவயதில் பாடுபட்டு, பின்னால் எல்லா சக்தியையும் இழந்து விட்ட நிலையில், சில சமயம், சந்ததிகளிட மிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் முதுமையுடன் சேர்ந்து வருகிறது.

பிள்ளைகளும் மருமகள்களும் அல்லது மகளும் மாப்பிள்ளையும் இருவருமே அலுவலகம் செல்பவர்கள், சொந்தமாகத் தொழில் என்று வாழ்நாளில் பாதியை வெளியூரிலேயே கழிப்பவர்கள், வசதிகள் இருந் தும் சமூக அந்தஸ்துக்காகப் பெற்றோர்களை விலக்கி வாழ்பவர்கள், குடும்பத்தில் குழப்பம் விளைவிக் கின்ற அண்ணன் தம்பிகள், இவர்களில் பெரும்பாலான வர்கள், தங்களால் இனி நம் பெற்றோர்களைச் சரிவரக் கவனிக்க முடியாது என்ற நிலைக்குத் தள்ளப் படும்போது, அவர்களைப் பராமரிக்கின்ற இல்லங் களின் அவசியத்தை நாட வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிலையில், இளம் வயதில் சந்ததிகளின் நல னுக்காகப் பாடுபட்டு படிப்படியாக மாறி வயதான நிலைக்கு வரும்போது, குடும்பத்தில் நிலவும் சில அசௌகர்யங்களால் குடும்பம் தவிர்த்து, வெளி இல்லங்களில் வாழும் முறைக்கும் தங்களை மாற்றிக் கொள்வது நல்லது என்று வயதானவர்கள் சிந்திக்க வேண்டிய நிலைக்கு ஆளாகிறார்கள். பண்டைய காலத்தில் வயதானவர்களைப் பராமரிப்பதில் அசௌ கரியம் ஏற்பட்டாலும், சந்ததிகள் அதைப் பொருட் படுத்தாது, முதியோர்களைக் காப்பாற்றினார்கள். இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. சந்ததிகள் வெளிநாட்டிலே பணிபுரிகிறார்கள், தொழில் ரீதியாக உலகெங்கும் வலம் வருபவர்கள், தன் மனைவியையும், பிள்ளைகளையுமே சரிவர கவனிக்க முடியாத சூழ்நிலையில் தங்கள் பெற்றோர்களை அன்புடன் கவனிக்க முடியவில்லை என்பது அவர்கள் வைக்கின்ற வாதம் ஒருபுறம்.

மறுபுறம் உள்ளூரிலேயே நல்ல வசதியுடன் வாழ்பவர்கள் ஏன் தங்களது பெற்றோர்களை முதி யோர் இல்லங்களில் கொண்டுபோய்த் தள்ளுகி றார்கள்? தனக்காக வாழாமல் சந்ததிகளுக்காக வாழ்ந்து, தங்களால் சேர்த்து வைக்கப்பட்ட பெரும்செல்வத்தை அனு பவிக்கும் பாக்கியத்தைப் பெற்ற அதே சந்ததிகள், பெற்றோர்களின் அந்திமக் காலத்தில் அவர்களைக் கை கழுவி விட்டு, அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்க்க முயற்சி செய்வதும் கேள் விக்குறியானதொன்று.


(தொடரும்)

- இணையவன்



# உலகெங்கும் பொதுமறையாகத் திகழுகின்ற திருக்குறள்

அருணா தருமலிங்கம்






உலகெங்கும் போற்றப்படுகின்ற திருக் குறளை எழுதியவர் தெய்வப்புலவர் என்று அழைக்கப் படுகின்ற திருவள்ளுவர் ஆவார். இவரது தோற்றத்தை பிரதான நூல்கள் சில வெவ்வேறு விதமாகக் குறிப்பிடுகின்றனர்.

ஆதி என்கின்ற புலைச்சிக்கும் பகவன் என்கின்ற பார்ப்பனனுக்கும் இவர் அவதரித் தார் என்று கபிலரகவில் என்ற நூல் கூறுகிற இந்த நூல் 19 ஆம் நூற்றாண்டில் வெளியிடப் பட்ட தொன்றாகும். இதனைப் பாம்பன் சுவாமிகளும் உறுதிப்படுத்தினார் என்றும் அறிய முடிகின்றது. யாழிதர்த்தன் என்ற பார்ப்பனர்க்கும் ஒரு புலைச்சிக்கும் பிறந்ததாக ஞானதர்மம் என்கின்ற பழைய நூல் வள்ளுவ ரின் ஜனனத்தைப் பறை சாற்றுகிற என் றும் கூறலாம்.

வள்ளுவரையும் திறக்குறளையும் புகழ்ந்து பாடும் மாமூலனார் பாடல் இவ்வாறு அமைந் துள்ளது.

'அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கின் திறம் தெரிந்து செப்பிய தேவை மறந்தேயும் வள்ளு வன் என்பான் ஓர் பேதை என்று தொடருகின்றது.

வள்ளுவமாலை திருவள்ளுவர் காலத்திலேயே எழுந்ததென நம்பு வதற்கில்லை. ஆனால் நேமிநாத உரையின் பிரகாரம் எண்ணூறு, தொள்ளாயிரம் ஆண்டுகளாக வழங்கி வருகின்றது எனலாம்.

நிமித்தம் [illegible]
நிமித்திகளை வள்ளுவன் என்ற சொல் சீவகசிந்தாமணியில் குறிப்பிட்டு இன்னும் இச்சாதியர் சோதிடம் கூறுவதைக் காண்கின்றோம். ஞானவெட்டியான் என்ற நூலும் இந்தக் குலத்தைச் சேர்ந்த வள்ளு வர் எழுதியதாக தன்னைக் கூறிக் கொள்கின்றது. திருக்குறளைப் படிக்கின்ற சாதிச் செருக்குடை யவர்களுக்கு அதன் பொது அறம் இத்தகையவர்களை கற்பித்துக் கொள்ள தூண்டியது போலும்.

மன்னரின் ஆணையை யானை மீது வைத்து முரசறைந்து தெரி விக்கும் அரசியல் தலைவருக்கும் வள்ளுவர் என்ற பெயர் உண்டு. இதனை மணிமேகலை முதலிய வற்றால் அறியலாம். அரசியல் நுட்பங் களைக் கூறும் திருக்குறள் அத்தகையதோர் அதிகாரியால் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுவது இயல்பேயாம். வல்லவர் என்ற வடமொழிச் சொல் வள்ளுவர் என்று திரிந்தது என்று கூறுவோரும் உள்ளனர். ஏலேலசிங்கர் என்ற தமிழரசர் வள்ளுவர் இயற்றிய அனைத்து குறள்களையும் மனனஞ்செய்து கருத்துக்களையும் தெளிவுற அறிந்து நல்லாட்சி செலுத்தினார்.

திருவள்ளுவரின் மனைவியின் பெயர் வாசுகி என்றும் இவர் ஒரு நெசவுத் தொழி லாளியாக இருந்தார் என்று கூறுகின்ற கதை யும் உண்டு. இவர் சென்னையைச் சேர்ந்த மயிலையில் வாழ்ந்தார் என்பது பழைய வரலாறு. வட மதுரைக்கு கண்ணன் போல தென் மதுரைக்கு திருவள்ளுவர் எனத் திருவள்ளுவமாலை இயம்புகின்றது.

திருவள்ளுவரை சமணர் என வற்புறுத்து வோரும் உள்ளனர். அம் மதத்தின் அடிப் படைக் கொள்கை அஹிம்சையாக விளங்கு கின்றது. இதனைச் சமண மத கோட்பாடு எனக் கொள்வதற்கு இடம் இருந்தாலும் இவற்றை எல்லோருக்கும் பொது என்ற முறையில் உரையாசிரியர்கள் விளக்குகி றார்கள் என்பதை மறந்து விட முடியாது.

திருக்குறளை பொதுமறை எனக் கூறு வதே அதன் சிறப்பும் வள்ளுவரின் பெருமை யுமாகும். இவர் காலத்தைப் பற்றியும் முடிவான கருத்து விளங்குவதாகக் கூறுவதற் கில்லை. வள்ளுவர் சங்க காலப் புலவர் களுக்கு முந்தியவர் என்றும் பிந்தியவர் என்றும் இரு திறக் கொள்கைகள் வழங்கி வருகின்றன.

எனவே பொதுமறையாகத் திகழுகின்ற திருக்குறளை அறியாத புத்திஜீவிகள் யாரும் இவ்வுலகில் இருக்க முடியாது என் பது கண்கூடு. இன்று கூட பாரத தேசத்தின் முன்னாள் ஜனாதிபதியும் பிரபல அணு விஞ்ஞானியுமான அப்துல் கலாம் தமிழில் சொற்பொழிவு ஆற்றுகின்ற சமயத்தில் தவறாது திருக்குறளையும் உவமைக்கு எடுத்து இயம்புகிறார் என்பதையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஊடக அறிவின் வளர்ச்சி

ஊடக அறிவின் முக்கியத்துவம் நவீன காலத்தில் அதிகரித்துச் செல்கின்றது. ஊடக அறிவு என்றால் என்ன என்று பார்க்கும் போது ஊடகங்களால் வெளியிடும் தகவல்கள் நன்மையா, தீமையா என்று பிரித்தறியும் ஆற்றலே ஊடக அறிவு ஆகும். இந்த ஊடக அறிவினை மையமாகக் கொண்டே பல ஊடகங்கள் வெளியிடப்படுகின்றன. அவற்றில் இன்றைய ஊடகங்களாக நவீன ஊடகங்கள் பல காணப்பட்டாலும் அவற்றினை பயன்படுத்தும் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன.

இலங்கையில் ஊடகங்களின் பாவனை எப்படி இருக்கின்றது. என்பதைப் பார்க்கும் போது அவற்றில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கணினி என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. இருந்தாலும் மக்களை தன்பக்கம் ஈர்த்த ஓர் ஊடகமாகப் பத்திரிகை முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் சாதாரண மக்களாலும் தொலைக்காட்சி போன்றவற்றை விட பத்திரிகையினை காலங்காலமாக வைத்து அவற்றினை பாதுகாக்க முடிந்ததே இதன் சிறப்பம்சமாகும்.

இன்றைய காலத்தில் மாணவர்கள் பத்திரிகையினை எவ்வாறு தங்களுடைய ஊடக அறிவினை வளர்ப்பதற்கு பயன்படுத்துகின்றார்கள் என்று பார்த்தால் மாணவர்கள் அவற்றினை மிகக் குறைந்தளவில் பயன்படுத்துகின்றார்கள். 15 வீத மாணவர்களே தங்களுடைய ஊடக அறிவினை பாடசாலையில் வளர்க்கின்றார்கள் இவர்கள். ஆசிரியரின் செயற்பாடுகளிலும், நூலகங்களையும் பத்திரிகையினையும் மையமாகக் கொண்டு ஊடக அறிவினை வளர்க்கின்றார்கள்.

கணினி வருகையின் காரணமாக பத்திரிகையின் வளர்ச்சி அன்று ஒரு சிறிய வட்டத்திலிருந்து பெரியதொரு வட்டத்துக்கு மாறிவிட்டத்தைக் காணலாம். எடுத்துக் காட்டாக இணையத்தின் மூலம் விரும்பிய நேரங்களில் பத்திரிகையை பார்வையிட முடிந்ததே இதற்கான காரணமாகும். எடுத்துக் காட்டாக இன்று காணப்படும் ஒவ்வொரு பத்திரிகையும் தனக்கு என்ற ஒரு வலையமைப்பினை உருவாக்கி வைத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் வானொலியின் பயன்பாடும் அதிகரித்துச் செல்கின்றது. இலங்கையில் முதலாவது வானொலி ஒலிபரப்பு சங்கம் 1922 ஆம் ஆண்டு "சிலோன் வயலஸ் சபை" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இலங்கையில் வானொலியை பயன்படுத்துவதில் அதிகம் அக்கறை காட்டியவராக "எட்வட் ஹாப்பர்" என்ற பெயரியலாளரைக் குறிப்பிடலாம்.

இவ்வாறு வளர்ச்சி அடைந்து காணப்படுகின்ற வானொலியானது பல்வேறு முறையில் மாணவர்களுக்கு தங்களுடைய சேவையை ஆற்றி நிற்கின்றது.

தொலைக்காட்சியில் அதிகளவான பட்டிமன்றங்கள் மற்றும் மாணவர்களுக்கான நிகழ்ச்சி போன்றன அதிகளவு காணப்பட்டாலும், மாணவர்கள் தமது ஊடக அறிவினை பிழையான வகையில் கடத்திச் செல்கின்றனர். எடுத்துக்காட்டாக அதிகளவான திரைப்பட மோகம் காரணமாக முடிவுகளையும், சமூக சீரழிவுகளையும் மேற்கொள்கின்றனர்.

இதனைவிட இணையத்தின் செல்வாக்கானது மாணவர்களின் மத்தியில் சரியான விடயத்தினை முன்னேற்றுகின்றது என்றாலும் அதிகளவான மாணவர்கள் பிழையான விடயத்துக்காகவே பயன்படுத்துகின்றார்கள். எடுத்துக்காட்டாக இணையத்தின் பாவனை அதிகரித்துச் செல்கின்றன. அதிகளவான இணையப்பாவனை நிலையங்கள் மாணவர்களின் பிழையான வலையமைப்பாவனை என்பவற்றால் அவற்றை எடுத்து நோக்க இயலாது காணப்படுகின்றன.

சரியான ஊடக அறிவினை பயன்படுத்துவதால் மட்டுமே இலங்கையில் காணப்படும் மாணவர்களின் ஊடக அறிவினை விருத்தி செய்ய முடியும். இதற்கு அரசும் ஒழுங்கான சில செயல்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

**சி.மயூரன்,**
**செல்வநகர் மன்னார்.**

# கொலை, கடத்தல்......

(வாரவசந்தம் முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**சம்பவம் 8**

சில ஊழியர்களினதும் பல மாணவர்களினதும் அடையாள அட்டைகள் அடிக்கடி பறிக்கப்பட்டு அவற்றை அப்போது பிரபலமாகவிருந்த ஊரெழு இராணுவ முகாமுக்கு நேரடியாகச் சென்று பெறவேண்டியுமிருந்தது. பின்னாளில் பல்கலைக்கழக விடுதியின் உபகாப்பாளராக இருந்த பிரேமச்சந்திரன் வழிப் பயணத்தின் போது கொலைமுயற்சியிலிருந்து தப்பி காலில் சூடுபட்டார். அச்சுறுத்தலின் காரணமாகவிருந்த பொருளாதாரப் பெறுமதிமிக்க தனது வேலையை இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். பல்கலைக்கழக விரிவுரையாளர் ரவீந்திரன் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

மற்றைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவைபற்றி அறிந்திருக்கவும் இல்லை. புலம்பெயர் உறவுகள் இக் கொலைகளை பெரிதாக எடுத்துக் கொள்ளவும் இல்லை. யாழ்ப்பாண மாணவர்கள் மட்டுமே கண்டனங்களை விடுத்தார்கள். வகுப்புக்களை புறக்கணித்தார்கள். பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடு ஒரு மணித்தியாலம் கூடத் தடைப்படாது நடைபெற்றது. ஏனெனில் அன்று மாணவர்களைத் தவிர மற்றையவர்கள் எல்லோரும் துப்பாக்கிகளுக்குப் பயந்தவர்களாகவே இருந்தார்கள்.

இறுதிக்கட்டப் போர் தீவிரம் பெற்ற போதும் களத்தில் மாவீரர்களாக பல பல்கலைக்கழக மாணவர்கள் பலியாகினார்கள். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் படங்களை இணையத்தில் தேடிய போது அகப்படவில்லை. அந்தளவுக்கு அன்று அந்தக் கொலைகள் கவனத்தில் கொள்ளப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் கைத்தொலைபேசி வசதிகூட துண்டிக்கப்பட்டிருந்த காலமாக அக்காலம் இருந்தமையும் அதற்கான காரணமாகவிருக்கலாம்.

2009இற்குப் பின்னர் ஏற்பட்ட போர் ஓய்வுக்கு பின்னர் பல்கலைக்கழகம் மெல்ல மெல்லத் தன்னை இயல்புநிலைக்குக் கொண்டுவர முயற்சித்த போது, மாணவர் ஒன்றியத் தலைவர் தவபாலன் தாக்கப்பட்டார். அவருக்கு பின்னர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாணவர் ஒன்றிய செயலாளர் தர்சானந்த் தாக்கப்பட்டமையை அடுத்து தற்போது நான்கு மாணவர்களின் கைது என்ற இடத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான வன்முறை வந்து நிற்கின்றது

பல்கலைக்கழக சமூகம் குறிப்பாக மாணவர்கள் அச்சுறுத்தலை எதிர்நோக்குவது என்பது இன்று உள்ள புதிய விடயம் அல்ல. ஆனாலும் அண்மைய மாணவர்கள் மீதான வன்முறை பல புதியதொரு விடயங்களுக்கு வழி செய்துள்ளது. பரந்து விரிந்த ஊடகவெளியும் சமூகவெளியும் இன்றைய பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தியிருக்கின்றன. அதிலும் குறிப்பாக இலங்கையின் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து குரல் கொடுக்கும் சகோதரத்துவ நிலைக்கு வழிசெய்துள்ளன. புலம்பெயர் தமிழர்களும் தாம் வாழும் நாடுகளில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தெம்பூட்டும் மதிப்பளிக்கும் கண்டனப் பேரணிகளுக்கு தயாராகும் நிலையை தோற்றுவித்துள்ளது.

அரசுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் கரம் கோர்த்து ஆர்ப்பரிக்கும் நிலைக்கு வழிசெய்துள்ளது. தமிழர்கள் எம்மால் என்றுமே வெற்றி கொள்ளப்பட முடியாதவர்கள் எனும் புதிவை சமூகவலையமைப்பில் ஒரு சிங்கள மாணவி பதிவுசெய்யும் அற்புதமான நிலைக்கு அடிகோலியிருக்கின்றது. இத்தவை அருமையான ஒற்றுமையை ஒன்றுபட்ட நிலையை பல்கலைக்கழக மாணவர்கள் எப்படி இனிவிடுதலை பயணத்துக்கான உரமாக இட முடியும். ★

# பன்மொழிப் புலமையாளர் அமரர் பொன். தெய்வேந்திரன்



'பண்ணிசைச் செல்வர்', 'இசைக்கலைமாமணி', 'கலைமாமணி', 'இலக்கியச் செல்வர்', 'கலாபூஷணம்', 'சைவப்புலவர்' ஆகிய சிறப்புப்பட்டங்களையும் விருதுகளையும் பெற்றவர் அமரர் பொன் தெய்வேந்திரன். இவர் தெல்லிப்பழை - பன்னாலையில் பொன்னம்பலம் பொன்னுப்பிள்ளை தம்பதியினருக்குப் புதல்வராக 1933-01-10 ஆம் திகதி பிறந்தார்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 38 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றியவர்.

1954 ஆம் ஆண்டு மைசூர் சென். ஜோசப் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் இடைநிலைக் கல்வியைக் கற்ற இவர் சென்னைப் பல்கலைக்கழகம், கலைக்கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றிலே ஆங்கிலமொழி மூலம் இசைக்கலைமாணிப்பட்டம், நுண்கலைக் கற்பித்தல் பத்திரம் பெற்றவர். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விசேட ஆசிரிய பயிற்சி பெற்றவர். சென்னை சைவ சித்தாந்தக் கழகப் புலவர். 40 ஆண்டு காலம் (1953-1993) அரச பணிபுரிந்தவர். இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் இரண்டினைப் பெற்றவர். நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தா, அளவெட்டி அருணோதயா, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் என்பவற்றிலே ஆசிரியராகவும் பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலே விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

## நீத்தார் நயப்புரை

நிறைவாக கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வுபெற்று 1996 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா நிலைய ஆங்கில போதனாசிரியராகப் பணிபுரிந்தவர். 1973 தொடக்கம் 1994 வரையான காலத்திலே வட இலங்கை சங்கீதசபை இலங்கை அரச பரீட்சைத் திணைக்களம் என்பவற்றின் சங்கீத பாட பிரதம பரீட்சைக் கட்டுப்பாட்டாளராகவும் பணிபுரிந்தார்.

1964 ஆம் ஆண்டு சுழிபுரம் பெரியதம்பி தம்பதிகளின் புதல்வி ஜெயமணியைத் திருமணம் செய்து திருமதி ஜெயராணி சத்தியநாதன் ஆசிரியை, வைத்திய கலாநிதி கௌரிமனோகரி நந்தகுமார், கலாநிதி சிவரூபன் ஆகிய நன்மக்களைப் பெற்று நல்வாழ்வு வாழ்ந்தார்.

இவரது எழுத்துப் பணிகள் என்றவகையிலே "விரத நியதிகள்" (1994), "பண்டைய நுண்கலை வளர்ச்சி", "கோவியற்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலய தரிசன விதிகள்", "அநுட்டான விதி"(1999), "சிலம்பின் செய்தி" (2002), "முத்தமிழ்" (2006) எனும் நூல்களும் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளும் காணப்படுகின்றன.

'முத்தமிழ்' இயல், இசை, நாடக வரலாற்று ஆய்வாளருக்குப் பெருவிருந்து இவருடைய கட்டுரைகள். இவற்றில் அதிகளவானவை கலை இலக்கிய வரலாறு, சைவப் பெரியார்கள் என்பன தொடர்பான. பன்மொழிப் புலமையாளரான மூதறிஞர், தலைசிறந்த இலக்கிய, சமய சொற்பொழிவாளர், இசைவாணர்; நாடக நடிகர்; கவிஞர்; எழுத்தாளர்; வட-கிழக்கு ஆளுநர் விருதுபெற்ற பெரியார்.

**முருகேசு கௌரிகாந்தன்.**

## புத்தகசாலை

### நூல் - வானம் விழுந்த நெல்வயல்



கருக்கட்டபட்ட நிலம் பிளந்து வீரியம் கொண்டு வேர்துளிர்க்கும் வகை செழிக்கும் செடியாய்த் தன்னை அடையாளம் காட்டும் கவிஞர் கை.சரவணன் எழுதி வெளியிட்டிருக்கும் கவிதை நூல் 'வானம் விழுந்த நெல்வயல்' அண்மையில் வெளிவந்திருக்கிறது. நம்புவது, ஏற்றுக்கொள்வது, போற்றுவது, தூற்றுவது எதுவெனினும் ஏற்றுக் கொண்டு திருப்தியுறும் மனத்துடன் அவர் ஆக்கிய கவிதைகளின் தொகுப்பே இது என்பது தெரிகிறது.

சருகுகள் தேங்கிய தெருவெல்லாம்
சாவின் வாடையைக் கிளர்த்தி
சுடுகாட்டை ஞாபகமாக்கி
இதயத்தில் ஆணியறைந்தது

என்று அவரது கவிதை வரிகள் நெல்வயலுக்குள் வீழ்ந்த வானம் செதுக்கிப் போன கடந்த நாள்களை நினைவூட்டுகின்றன. சாவுகளுக்கு வர்ணம் தீட்டி அந்தக் காட்சிகளுக்குள் அழிக்கவோ மறைக்கவோ இயலாத உண்மைகளைக் கவிதைகளில் ஒளிர வைத்துள்ளார். பாதிப்புக்கு உள்ளான மக்களின் புன்னகையையும் அழுகையையும் பொறுக்கி எடுத்துப் புரிந்துணர இயலாத போதும் அது கண்டு கரையும் காகங்களையும் வேலி ஓணான்களையும் அவரது கவிதைகள் இனங்காட்டுகின்றன. உணர்வின்றி ஒலிக்கும் ஊது குழல்களின் ஓசைக்கு உள்ளே வீரியம் குறைந்தொலிக்கும் வகை கண்டு கருதி பிசகாத சூழல் வேண்டிப் பிரார்த்திக்கும் கவிஞரின் வீறு மிகவொலிக்கும் கவிதைகளைக் காணுகிறோம். தொகுப்பிலுள்ள கவிதைகளை வாசிப்போர் உள்ளத்தில் சிந்தனையையும் தேடலையும் தோற்றுவிக்கும் சொல்லாட்சி அருமையானது. அளவெட்டியில் வசிக்கும் ஆசிரியரான கை.சரவணன் நல்லதோர் கவித்தொகுப்பாக அவரது முதற்தொகுப்பை வெளியிட்டுள்ளார் அதன் மூலம் எமது இலக்கிய வாசகருலகு மேலும் ஒரு சிறந்த கவிஞரைப் பெற்றுக் கொண்டதென இறும்பூதெய்துகிறது. 'வானம் விழுந்த நெல்வயல்' காலத்தைக் காட்டும் சிறந்ததோர் கவிதைத் தொகுப்பாகும்.

**மகேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் கண்காணிக்கிறான்

அண்ட சராசரங்கள் அனைத்தும் ஆண்டவனின் ஆணைப்படியே இயங்குகின்றன என்பது உண்மை.

இறைவன் சர்வலோகங்களிலும் வியாபித்திருக்கிறான்.

பார்க்கும் இடந்தோறும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் அறியாமல் ஓர் அணு கூட அசைவதில்லை.

நீ செய்யும் செயல்களனைத்திற்கும் அவனே சாட்சியாக இருக்கிறான்.

இறைவன் உன்னைக் கண்காணித்துக் கொண்டே இருக்கின்றான்.

நீ செய்வது நன்மையோ, தீமையோ அதற்குரிய பலனை அளிக்கின்றான்.

நீ செய்யும் தவறுகள் யாருக்கும் தெரியாதென்று எண்ணாதே!

யாருக்கும் தெரியாமல் நீ எதையும் செய்ய முடியாது.

நீ மனதுக்குள் நினைப்பதைக் கூட இறைவன் அறிவான்.

இந்த எண்ணம் உன் மனதில் வலுவாக இருந்தால் நீ தவறு செய்யமாட்டாய்.

தீமையை எண்ணிக்கூடப் பார்க்கமாட்டாய்.

தீய எண்ணங்களை அப்புறப்படுத்திவிட்டு, நல்லெண்ணங்களால் மனதைத் தூய்மைப்படுத்து.

இறைவன் குடியிருக்க உன் உள்ளம் தேடி வருவான்.

குரு ஒருவருக்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர்.

அவர்களில் ஒரு சீடன் மீது மட்டும் குருவுக்குப் பிரியம் அதிகம்.

ஒருநாள் மற்ற சீடர்கள் குருவிடம் வந்து, ''குருவே! தாங்கள் எங்களில் ஒருவன் மீது மட்டும் அதிக பிரியம் காட்டுவது ஏன்?'' என்று கேட்டனர்.

அதற்கு குரு மௌனமாகச் சிரித்தபடியே, அவர்கள் அனைவருக்கும் ஒரு பழத்தை கொடுத்து ''இதை யாருக்கும் தெரியாமல் உண்டுவிட்டு வாருங்கள்'' என்றார்.

தனக்குப் பிரியமான அந்தச் சீடனுக்கும் பழத்தைக் கொடுத்து, அவர்களிடம் கூறியபடியே, உண்டுவிட்டு வரச் சொன்னார்.

சிறிது நேரம் கழித்து அனைவரும் அவர் முன்பு வந்தனர்.

அந்தச் சீடனைத் தவிர, மற்ற அனைவரும் பழத்தைச் சாப்பிட்டிருந்தனர்.

குரு அந்தச் சீடனை நோக்கி, ''நீ ஏன் பழத்தைச் சாப்பிடவில்லை?'' என்றார்.

அதற்கு அந்தச் சீடன், ''குருவே! தாங்கள் யாருக்கும் தெரியாமல் சாப்பிடச் சொன்னீர்கள். ஆனால் இறைவனுக்குத் தெரியாமல் எப்படிச் சாப்பிடுவது? இறைவன் இல்லாத இடமே இல்லையே!'' என்றான்.

குரு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

மற்ற மாணவர்களை நோக்கி, ''நீங்களும் இந்தப் பக்குவத்தைப் பெற வேண்டும்'' என்றார்.

இறைவனுக்குத் தெரியாமல் யாரும் எதையும் செய்துவிட முடியாது.

நீ இதனை நன்குணர்ந்து கொள்.

யாரறியப் போகிறார்கள் என்ற எண்ணத்தில்தான் மனிதன் பற்பல தீமைகளைச் செய்கின்றான்.

ஆனால் இறைவன், அவன் தீமை செய்ததற்குரிய தண்டனையை உரிய காலத்தில் தவறாமல் அளித்து விடுகிறார்.

**''கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்**
**கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்**
**கண்காணி யாகக்கலந் தெங்கும் நின்றானைக்**
**கண்காணி கண்டார் களவொழிந் தாரே''**

என்பது திருமந்திரத் திருவாக்கு.

ஆகவே நீ இறைவனை எண்ணி, புண்ணியம் பல செய்து வாழ்ந்தால் பேரின்பம் அடையலாமே!



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# வாசகர் திருமுகம்

## காட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்துவார்களா?

வரணி வடக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமுள்ளதை அவதானிக்க முடிகிறது. வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் படுத்திருக்கும் இந்தத் தெரு நாய்களால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

நாய் உரிமையாளர்கள் பகல் வேளைகளிலாவது இவற்றைக் கட்டி வளர்ப்பதாக தெரியவில்லை? வீதிகளில் படுத்துறங்கும் நாய்களைக் கட்டுப்படுத்த யாரும் முன் வருவதாகத் தெரியவில்லை? வீட்டு உரிமையாளர்கள் தமது வளர்ப்பு நாய்களைப் பகலிலாவது கட்டி வளர்த்தால் பொதுமக்கள் பெரிதும் நன்மை அடைவர்கள். கடந்த வாரம் மட்டும் இந்தப் பிரிவில் மூன்று பேர் நாய்க்கடிக்கு ஆளாகி சிகிச்சை பெற்றுள்ளனர். இது வேதனை தரும் விடயமாக உள்ளது. பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் மிகுந்த அச்சத்துடன் செல்கின்றனர். இதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை காலை, நண்பகல் என்று பாடசாலைக்கு சென்று கூட்டி வர வேண்டிய இக்கட்டான சூழலில் இருக்கின்றனர்.

நாம் துன்பங்களைச் சுமந்து வாழ்ந்தவர்கள். அப்படிப்பட்ட நாங்கள் மேலும் அப்பாவி மக்களைத் துன்பத்தில் தள்ளி வைத்தியசாலைகளுக்கு அனுப்பக் கூடாது. நாய் வளர்ப்போரே தயவுசெய்து உங்கள் வீட்டு நாய்களைப் பகலில் கட்டி வையுங்கள். வீதிகளில் அலைந்து திரியும் நாய்களைக் கவனமெடுத்து உரியவர்கள் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனோ தானோ என்று கவனமெடுக்காமல் பாராமுகமாக இருப்போமானால் எமது பகுதியில் நாய்களின் தொகை அதிகரிக்கும். நாய்க்கடிக்கு உள்ளாவோரும் தொடர்ந்து வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டி வரும். எனவே, அப்பாவி மக்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடிய சூழலை உருவாக்காமல் பாதுகாப்பது எம் சகலரது பொறுப்பும், முக்கிய கடமையுமாகும். ஒத்துழையுங்கள்!

**மு. அருமைச்சந்திரன்**
**கறுக்காய்**

## சிறுவர் உரிமைகளை பாதுகாப்போம்!

இன்றைய சிறுவர்கள் எதிர்காலத் தலைவர்கள். அவர்களை நல்வழிப்படுத்தி கல்வி என்னும் செல்வத்தைப் புகுத்தி வாழ வைக்க வேண்டிய பொறுப்பு இன்றைய எமது கடமையும் பொறுப்பும் ஆகும்.

இன்றைய சூழலில் வறுமை எனும் கொடிய நோயைச் சாதகமாக்கி சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

பல இடங்களில் வர்த்தக நிலையங்கள், சந்தைகளில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. நமது பிள்ளைகளைக் கல்வி பெற அனுப்பி விட்டு ஏழைகளின் பிள்ளைகளைப் பணத்துக்காக வேலை செய்விப்பது தவிர்க்கப்பட வேண்டும்.

நாம் முப்பது வருடபோருக்குள் வாழ்ந்தவர்கள். எத்தனையோ இன்பங்களை இழந்து, துன்பங்களைச் சுமந்து வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். எங்கள் நிலை இன்றைய சிறுவர்களுக்கு ஏற்பட நாம் ஒருபோதும் இடமளியாமல் அவர்களாவது சுதந்திரக் காற்றை அனுபவிக்கக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும், பாடசாலை செல்லாத சிறுவர்களை இனங்கண்டு, அவர்களை நல்வழிப்படுத்தி எம்மால் உதவக் கூடிய வகையில் உதவிகளைச் செய்து இப்படியான சிறுவர்களைச் கல்விச் செல்வத்துக்குள் புகுத்தி எதிர்காலத்தின் தலைவர்களாக மாற்ற வேண்டும்.

அடுத்த பரம்பரைக்கு உதவிக்குரல் கொடுத்து கரம் கொடுக்கச் செய்ய வேண்டிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இன்று எமது தலையாய கடமை. தமிழரின் வாழ்வே சோகமாக மாறிவிட்ட சூழலில் எமது எதிர்கால பாலகர்களாவது துன்ப துயரம் இல்லாது நிம்மதியுடனும் சுதந்திரத்துடனும் கல்விமான்களாக வாழ கரம் கொடுப்போம்.

**வரணியூரான்**

## தமிழ் படிக்கத் தான் வேண்டும்!

இளைப்பாறிய சமூக சேவையாளர் ஒருவர் தன் மனைவியிடம் கூறியிருந்தார் ''ஒரு சமயம் எனக்கேதும் நடந்தால் - அழத் தேவையில்லை, யாருக்கும் சொல்லத் தேவையில்லை. ஐயர் வந்து எதுவும் செய்யத் தேவையில்லை. எனது உடலை மருத்துவபீடத்துக்கு கையளித்து விட்டால் சரி'' என்று.

பின் அவர் இறந்த பொழுது அவரின் மனைவி அவர் கூறியபடியே நேரகாலத்துடன் மருத்துவபீடத்துக்கு அவரது உடலைக் கையளித்து விட்டார். மருத்துவர் கேட்டார், ''சொந்த பந்தம் வந்து- ஐயர் கிரியை செய்து'' என்றபோது , ''கணவர் அதெல்லாம் தேவையில்லை என்று சொல்லியிருந்தவர். ஆனபடியால் உடலை நேர காலத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் மனைவி.

அயலவர் செய்தி அறிந்து வந்தனர். இறந்தவரின் சொந்தபந்தங்கள், ஒட்டுண்ணியாக இருந்தவர்கள் இனிப்பிரயோசனமில்லை என்று இறந்த நாயிலிருந்து ஒட்டுண்ணி கழன்ற மாதிரி கழன்று கொண்டனர்.

அதனைத் தெரிந்துதான் ஒருவருக்கும் சொல்லத் தேவையில்லை என்று முன்பே அவர் கூறிவிட்டார் போலும்.

ஊரவர்கள் சொல்லாமலே வருவார்கள், வந்தார்கள். அப்போது மனைவி, கணவன் கூறியிருந்ததை அவர்களிடம் சொல்லிவிட்டு, எனது உறவினர் எல்லோரும் வெளிநாட்டில் என்றார். கணவர் கூறிய, யாரும் வர வேண்டாம். அழவேண்டாம் என்று சொன்னதை சிலர் வேறு விதமாக அர்த்தப்படுத்தினர்.

'' அந்த மனிசி (மனைவியார்) ஒருத்தரையும் வீட்டை வர வேண்டாம்'' என்று கூறியதாக செய்தி பரவியது. இதை, மனைவியாரிடம் சிலர் கூறியபோது அவர் ஆச்சரியப்பட்டார். வீட்டை வரவேண்டாமென்று நான் கூறினேனா?

நான் சொல்லவில்லையே. அப்படி கணவர் சொன்னார் என்று தானே கூறினேன். இதை அரைத் தமிழில் அர்த்தப்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சிலரை விட வேறுசிலர், அந்த மனைவியார் அப்படி சொல்லியிருக்க மாட்டார். அப்படியான ஆளல்ல அவர், என்று மற்றவர்களுக்குக் கூறினார்கள். தமிழைத் திருத்தமாக படிக்கத் தான் வேண்டும் .

**ஞானாம்பிகை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகூட்டும் பொட்டு

பெண்களின் முகத்துக்கு அழகையும் வசீகரத்தையும் தருவதுவது நெற்றிப் பொட்டுத்தான். ஒவ்வொருவரும் தங்களின் முகத்துக்கு ஏற்றவாறு பொட்டு வைக்க வேண்டும். ஸ்ரிக்கர் பொட்டுக்களின் வருகைக்குப் பின்னர் மங்கையர்கள் பல வித டிசைன்களில் முகத்தை அழகுபடுத்தி கொள்கின்றனர்.

நாம் வைக்கும் பொட்டு நம்முகத்துக்கு ஏற்றதாக இருந்தால் அது அழகை அதிகரித்துக் காட்டும். ஆதலால் முக அமைப்புக்கு ஏற்ற பொட்டுகளை தேர்வு செய்து முகத்தின் அழகை அதிகரிக்க செய்யுங்கள்.

★ வட்ட வடிவ முகம் இவர்கள் நீளமான பொட்டுகளை உபயோகிக்க வேண்டும். நீளமான பொட்டு இவர்களது உருண்டை முகத்தை சற்று நீளவாக்காக மாற்றியதுபோல் அழகு தரும். இவர்கள் நெற்றி குறுகலாக இருந்தால், அவர்கள் புருவங்களுக்கு மத்தியில் பொட்டு வைக்கவேண்டும்.

★இதய வடிவ முகம் கொண்டவர்கள் குங்குமத்தால் பொட்டு இட்டுக் கொள்வது முகத்தை அழகாக்கும். ஸ்ரிக்கர் பொட்டுகளில் சிறிய அளவில் நீளமான பொட்டுகள் முக வசீகரத்தை அதிகரித்துக் காட்டும்.

★ஓவல் வடிவ முகம் கொண்டவர்கள் புருவத்துக்குச் சற்று மேலே நெற்றியில் வட்டப் பொட்டு வைப்பது அழகை அதிகரிக்கும். நீளமான ஸ்ரிக்கர் பொட்டு வைத்தாலும் வசீகரமாக இருக்கும்.

★சதுர முகம் உள்ளவர்கள் நீளமாக பொட்டுகளை வைக்கக்கூடாது. அகலம் அதிகமுள்ள பொட்டுகளை வைத்துக் கொள்ளலாம். உருண்டை மற்றும் முட்டை வடிவிலான பொட்டுகள் இவர்களுக்கு பொருத்தமாக இருக்கும். வண்ணத்துப் பூச்சி வடிவ டிசைன் பொட்டுகள் எடுப்பாக இருக்கும்.

★ முக்கோண வடிவ முகம் உள்ளவர்களுக்கு அனேகமாக எல்லா வகைப் பொட்டுகளும் பொருந்தும். நெற்றி அகலமாக இருந்தால், நீளமான பொட்டுகளை பயன்படுத்த வேண்டும். முக்கோண வடிவிலான பொட்டுகளும் இவர்களுக்கு நன்றாக இருக்கும். அகலமான நெற்றியாக இருந்தால், புருவத்தில் இருந்து ஒரு சென்ரிமீற்றருக்கு மேல் பொட்டுவைக்க வேண்டும்.




## ஆரோக்கியம் தரும் இயற்கை ஷாம்பு

அண்மைக் காலத்தில் வேதிப்பொருளால் உருவான ஷாம்புகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்போது ஆயுள்வேத ஷாம்புகள் அதிகமாக வருகின்றன. சோறு வடித்தெடுத்த பின் கிடைக்கும் கஞ்சி நீர் ஒரு நல்ல ஷாம்புவாகும். அதைச் சீயக்காய்ப் பொடி அல்லது கடலைமாவுடன் சேர்த்துப் பயன்படுத்தலாம். குழந்தையின் தலையில் தேய்க்க, கஞ்சியும் கடலைமாவும் சிறந்தது. தலைக்கோ உடம்புக்கோ எரிச்சல் தராது. தாளி இலையை அரைத்தால் முட்டைக்கரு போன்று வழவழா என்று வரும். இதுவும் ஒரு நல்ல ஷாம்பு. இதனைச் சீயக்காய்ப் பொடியுடன் கலந்து உபயோகித்தால் முடியில் அதிகமான எண்ணெய்ப் பிசுக்கு அகன்று நல்ல சக்தியை அளிக்கும்.

சீயக்காய் 2 பங்கு, சிறுபயறு ஒரு பங்கு, வெந்தயம் ஒரு பங்கு எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளுங்கள்.

தேவைப்படும்போது ஒரு தேக்கரண்டி பொடியைக் கஞ்சியுடன் சேர்த்து தாளி இலைச்சாறு கலந்து அல்லது முட்டையின் வெள்ளைக் கரு சேர்த்துப் பயன்படுத்தினால் ஷாம்புவைப் பயன்படுத்துகின்ற பலன் கிடைக்கும்.



# அழகு முகத்தில் மட்டுமா?

அழகாக இருக்கிறோம் என்றால் முகம் மட்டுமல்ல, உடலை வைத்தும்தான் சொல்வார்கள். அதிலும் உடலில் இருக்கும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனி பராமரிப்பை செய்ய வேண்டும். மேலும் சருமம் மிகவும் மென்மையாக இருக்க, சருமத்திற்கு சரியான பராமரிப்பை மேற்கொள்ள வேண்டும்.

முகத்தை விட கழுத்தில்தான் பெரும் பிரச்சினை ஏற்படுகிறது. எப்படி எனில் கழுத்தின் பின்புறம், கூந்தல் அடிக்கடி படுவதால், அங்கு அதிகமான வியர்வை ஏற்பட்டு, அழுக்குகள் படிந்து விடுகின்றன. ஆகவே மற்ற இடத்தை விட கழுத்துக்கு அதிகப்படியான கவனிப்பு தேவைப்படுகிறது.

எந்த ஒரு கிரீமை முகத்துக்குப் பயன்படுத்தினாலும், அதை கழுத்துக்கும் பயன்படுத்த வேண்டும். வாரத்துக்கு ஒருமுறை ஸ்கரப் செய்யவேண்டும். இதனால் முகமும் கழுத்தும் ஒரே நிறத்தில் இருக்கும். மேலும் சருமமும் மென்மையடையும்.

பெண்களின் கைகள் எப்போதும் பட்டுப் போன்று இருக்க வேண்டும். ஆகவே அத்தகைய கைகளை எப்போதும் சரியாக பராமரிக்க வேண்டும். உடலை அழகாக பராமரிக்கும் போது, தவறாமல் கைகளையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் கைகளில் அதிகமாக வெயில்படுவதால் அவை கறுப்பாக மாறிவிடும்.

எனவே எப்போது கைகளை கழுவினாலும் கைகளுக்கு ஏற்ற வகையிலான கிரீம்களை பயன்படுத்த வேண்டும்.

இதனால் வெயிலால் சருமம் கருமை அடைவதைத் தடுக்கலாம். வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை எண்ணெயால் மசாஜ் செய்ய வேண்டும்.

# நகப் பொலிஷை பாதுகாப்பது எப்படி?

நகப் பொலிஷை எப்படி எல்லாம் வைத்துக் கொண்டால் நீண்ட நாள்கள் பயன்படுத்தலாம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.



* சில பெண்கள் நகப் பொலிஷ் போத்தலை குளிர்சாதனப் பெட்டியில் வைப்பார்கள். ஆனால் அதையே ஒரு மாதத்துக்கு மேல் வைத்திருந்தால், அவை பின் கடினமாகிவிடும். ஆகவே அதற்குள் அதனை அடிக்கடி பயன்படுத்த வேண்டும்.

* நகப் பொலிஷை பாதுகாக்கச் சிறந்த வழியென்றால் அது, அவற்றை சூரிய ஒளி இல்லாமல், குளிர்ச்சியான இடத்தில் வைப்பதுதான்.

* நகப் பொலிஷ் போத்தலை எப்போதும் நன்கு மூடி நேராகவே வைக்க வேண்டும். இதனால் அவை வறட்சியடையாமல், அதில் உள்ள பெயிண்டும் நீண்ட நாள்கள் இருக்கும்.

* எப்போதும் நல்ல தரமான நகப் பொலிஷையே வாங்க வேண்டும். விலை மலிவான நகப் பொலிஷ் விரைவில் காய்ந்துவிடும். பின் அவற்றை போட்டாலும், அசிங்கமாக இருக்கும்.

* நகப் பொலிஷ் போடும் போது, போத்த லின் முனையை மூடிக்கொண்டே போடவேண்டும். ஏனெனில் காற்று புகுந்துவிட்டால், அவை விரைவில் காய்ந்துவிடும்.

* நகப் பொலிஷில் உள்ள பொருள்கள் பிரியாமல் இருக்க, சிறிது பெட்ரோலியம் ஜெல்லியை, போத்தலின் முனையில் தடவி, பின் நன்கு மூட வேண்டும். இதனால் காற்று புகாமல் இருக்கும். அதுமட்டுமின்றி போத்தலைத் திறக்கவும் எளிதாக இருக்கும்.

* நகப் பொலிஷில் உள்ள எனாமல் வறட்சி யடைந்து விட்டால், அதனை தனியாக எடுத்து, சிறிது நகப் பொலிஷ் ரின்னரை ஊற்றினால் இவை இளகிவிடும். மீண்டும் புதிய நகப் பொலிஷ் போன்றே பயன்படுத்தலாம். நீண்ட நாள்களும் இருக்கும்.

* சில நேரங்களில் நகப் பொலிஷ் போத்தலின் முனைகளில் காய்ந்திருக்கும். இதனால் அதனை திறப்பது கடினமாக இருக்கும். அப்போது ஒரு கப் நகப் பொலிஷ் ரிமூவரை எடுத்துக் கொண்டு அதில் இந்த போத்தலை சிறிது நேரம் வைத்து பின் திறந்தால் எளிதில் திறந்துவிடலாம்.

* முக்கியமாக நகப் பொலிஷ் போடும் முன், அதனை கடுமையான முறையில் குலுக்கினால், அவற்றில் முட்டைகள் ஏற்பட்டுவிடும். பின்பு அவற்றை வைக்கும் போது, நகத்தின் அழகிய தோற்றம் பாதிப்படையும். ஆகவே குலுக்கியப் பின் 15-20 நிமிடம் கழித்து பயன்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org